விழி 08 பார்வை 80 மார்ச் 2012

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...


- ★ பல்கலைக்கழக கல்விசார் உயர்பதவிகளில் பால்நிலைசார் சமத்துவமின்மை
- ★ மீள வலியுறுத்தற் கொள்கையில் ஆசிரியர் வகிபாகமும் அதன் பயன்களும்
- ★ மாணவர் கற்றலை மேம்படுத்துவதற்கான SQ5R வழிமுறை
- ★ கற்பித்தல் துணை சாதனங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தும் முறையியல்கள்
- ★ இன்றைய கல்விபற்றிய சில சிந்தனைகள்
- ★ தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் பின்னணியில் பெற்றோர், மாணவர் ஆகியோரில் ஏற்படுத்துகின்ற சில உளரீதியான தாக்கங்கள்
- ★ பூரணத்துவமான கல்வி (சென்ற இதழ் தொடர்ச்சி)
- ★ பெற்றோர் ஆசிரியர் சங்கமும் அதன் முக்கியத்துவமும்
- ★ வாசிப்பும் தமிழாசிரியரும்
- ★ கல்வி உளவியல் வகைகள்
- ★ கல்வியியல் எண்ணக்கருக்கள்
- ★ எதிர்கால இளைஞரும் கல்வியும்


www.viluthu.org

விலை: 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*AHAVILI*
3, Torrington Avenue, Colombo 07
Tel: 011 250 6272
E-mail: ahavili.viluthu@gmail.com



## உள்ளே......


- பல்கலைக்கழக கல்விசார் உயர்பதவிகளில் பால்நிலைசார் சமத்துவமின்மை — 4
- மீள வலியுறுத்தும் கொள்கையில் ஆசிரியர் வகிபாகமும் அதன் பயன்களும் — 10
- மாணவர் கற்றலை மேம்படுத்துவதற்கான SQ5R வழிமுறை — 15
- கற்பித்தல் துணை சாதனங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தும் முறையியல்கள் — 18
- இன்றைய கல்விபற்றிய சில சிந்தனைகள் — 22
- தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் பின்னணியில் பெற்றோர், மாணவர் ஆசிரியோரில் ஏற்படுத்துகின்ற சில உளரீதியான தாக்கங்கள் — 26
- பூரணத்துவமான கல்வி (சென்ற இதழ் தொடர்ச்சி) — 30
- பெற்றோர் ஆசிரியர் சங்கமும் அதன் முக்கியத்துவமும் — 34
- வாசிப்பும் தமிழாசிரியரும் — 36
- கல்வி உளவியல் வகைகள் — 38
- கல்வியியல் எண்ணக்கருக்கள் — 42
- எதிர்கால இளைஞரும் கல்வியும் — 44




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆசிரியர் :*
V.S. இந்திரகுமார்

*நிர்வாக ஆசிரியர் :*
சாந்தி சச்சிதானந்தம்

*ஆசிரியர் குழு:*
க.சண்முகலிங்கம்
திருமதி பத்மா சோமகாந்தன்

*ஆலோசகர் குழு :*
திரு.து.ராஜேந்திரம்
முன்னாள் முதுநிலை விரிவுரையாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

கலாநிதி உ.நவரட்ணம்
முன்னாள் ஓய்வு நிலைப்பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம்
முன்னாள் கல்விப் பீடாதிபதி, கொழும்பு பல்கலைக்கழகம்.

திரு.தை.தனராஜ்
முதுநிலை விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

கலாநிதி சசிகலா குகமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

திரு.V. தியாகராஜா
சிரேஷ்ட ஆலோசகர், சமூக விஞ்ஞானக் கற்கைகள் துறை, கல்விப்பீடம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்.

பேராசிரியர் வ.மகேஸ்வரன்
தலைவர் தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் இரா.வை.கனகரட்ணம்
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

திரு.க.இரகுபரன்
முதுநிலை விரிவுரையாளர், தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

லெனின் மதிவானம்
பிரதி கல்வி வெளியீட்டு ஆணையாளர், கல்வி அமைச்சு.

திரு.கே.சாம்பசிவம்
கல்வி முகாமைத்துவம் ஆலோசகர்.

திரு.ஜி.போல் அன்ரனி
முன்னாள் பிரதி பரீட்சை ஆணையாளர்.

திருமதி. அருந்ததி ராஜவிஜயன்
ஆசிரிய ஆலோசகர், கொழும்பு கல்வி வலயம்.

# ஆசிரியரிடமிருந்து..........

மொழி மக்களோடு கூடப்பிறந்தவொரு சொத்து. மனிதருக்குக் கிடைத்த மிக உன்னதமான தொடர்புச் சாதனம். மொழியின் ஊடாகவே நாங்கள் எங்களுடைய விருப்பு வெறுப்புக்கள், சமூக மதிப்பீடுகள், கலாசார விழுமியங்கள், கொள்கைகள் என்பவற்றினை ஏனையோருடனும் (அடுத்த சந்ததியினருடனும்) பரிமாறிக் கொள்கிறோம். இவ்வாறு நாங்கள் சக மனிதர்களுடன் தொடர்பு கொள்ளும் போதும் இணைந்து செயலாற்றும் போதும் தான் அது மானுடச் செயற்பாடாக உருவாகிறது.

இத்தகைய அனைத்து மானுடச் செயற்பாடுகளுக்கும் மொழியே மிக முக்கிய ஊடகமாகவும் கற்பதற்கும் சிந்திப்பதற்கும் உரிய ஒரு கருவியாகவும் இருக்கிறது. மொழி ஒருவருக்கில்லை எனில் மொழிசார்ந்த ஒரு சமூகத்தில் அவர் தன்னையொரு அங்கத்தினன் எனக் கூறமுடியாது.

இலங்கையில் மொழி உரிமைகளைப் பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் பல்வேறு செயற்திட்டங்கள் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. "2016ஆம் ஆண்டில் சகல இலங்கையருக்கும் சிங்கள, தமிழ் மொழியறிவை வழங்குவதன் மூலம் சகோதரத்துவத்துடன் ஒன்றிணைந்த அழகிய சக்திமிக்கதொரு இலங்கையை கட்டி எழுப்புவோம்" என இலங்கையின் தற்போதைய ஜனாதிபதியும், "இரு மொழிகளினூடாக இதயபூர்வமாக ஒன்றிணைந்த ஒரே இலங்கைத் தேசத்தை கட்டியெழுப்ப சிங்கள மக்களுக்கு தமிழ் மொழி அறிவையும் தமிழ் மக்களுக்கு சிங்கள மொழி அறிவையும் வழங்குதல் எங்கள் பொறுப்பும் கடப்பாடுமாகும்" என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சரும் கூறியுள்ளனர்.

இவ்விடயங்கள் மொழிக்கொள்கை தொடர்பில் வரவேற்கத்தக்க விடயங்கள் என்பது ஒரு புறம் இருக்க, மொழிக்கொள்கை தொடர்பாக இதுவரை ஆட்சிக்கு வந்த அரசுகள் மேற்கொண்ட செயற்பாடுகள் முறையாக வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதா? என்பதும் நடைமுறையில் உள்ள பிரச்சினைகள் எவையென ஆராயப்பட்டு நன்கு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தால் இன்று மொழியுரிமை பற்றி இவ்வளவு பேசவேண்டிய தேவை இருந்திருக்காது என்பதும் நாம் அறிந்ததே.

இலங்கையின் கல்விமுறை உன்னதமானது. சிறந்த பாடசாலைகளிலும் பல்கலைக்கழக நிகழ்ச்சித் திட்டங்களிலும் இருந்துவரும் மாணவர்கள் உலகின் முதற்தரமான சிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் கூட்டுத்தாபனங்களில் சர்வதேச அமைப்புக்களின் உயர்கேள்வியைப் பயன்படுத்துகின்றனர். ஆயினும் கல்விக் கொள்கையை உருவாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோர் கல்வியின் சராசரி நிலையும் கற்றல் விளைவுகளும் திருப்தியற்றனவென்றே கருதுகின்றனர்.

இலங்கைப் பாடசாலை அமைப்பு முறைகளில் ஆரம்பப் பாடசாலைகள் மத்தியிலான அறிவுசார் அடைவுச் சோதனைகள், மொழிசார் கல்வியில் ஆரம்ப வட்டத்தின் முடிவிலே தேர்ச்சியில் வீழ்ச்சியினையே எடுத்துக் காட்டுகின்றன என்கின்றனர். முதன் மொழியில் (சிங்களமும் தமிழும்) சராசரி தேர்ச்சிநிலை 37% ஆகும். எழுதுதல் இலக்கணம் 30% இந்நிலை மிகக் குறைவான தாய்மொழித் திறன்கள் ஆகும். கிரகித்தல் 40% இலும் குறைவாகவே இருக்கிறது. சொற்களஞ்சியத் திறன்கள் 70 வீதமாகும் இது ஒரு உயர்வான நிலை எனலாம். ஆங்கில மொழித் திறன்கள் மிகக் குறைவு 10% ஆன ஆரம்பநிலைப் பிள்ளைகள் மட்டுமே பாண்டித்திய இலக்கு மட்டத்தை அடைகின்றனர். ஆங்கில மொழி எழுதும் திறன் இல்லவே இல்லை. 1% ஆன பிள்ளைகள் மட்டுமே தேவையான திறன்களை வெளிப்படுத்துகின்றனர். ஆங்கில மொழிக் கிரகித்தல் 16%. ஆங்கில இலக்கணம் 20% என்பனவும் குறைவாகவே உள்ளன. ஆங்கில சொற்களஞ்சியத் திறன் 35%. இது சற்று உயர்வாக உள்ளது. மூன்று பேரில் ஒருவர் இத்தகைய திறன்களில் பின்தங்கி உள்ளனர்.

இத்தகைய கீழ்நிலை அடைவு மட்டத்திற்கு மேலாக கிராம மற்றும் நகர்ப்பாடசாலைகளுக்கு இடையே அடைவு மட்டத்தில் முக்கியமான வேறுபாடுகளும் நிலவுகின்றன. முதன் மொழியிலான (சிங்களம் மற்றும் தமிழ்) பாண்டித்தியமானது நகர்ப்புறப் பாடசாலைகளில் 51% ஆகவும் கிராமப்புறப் பாடசாலைகளில் 34% மாகவும் உள்ளது. நகரப் பாடசாலைகளில் ஆங்கில மொழித்திறன் பாண்டித்திய நிலையை அடையும் போது கிராமப் புறங்களில் இது 7% மாகவே காணப்படுகின்றது. இது மொழிப் பாடங்களில் மட்டுமன்றி ஏனைய பாட அடைவுகளிலும் இந்நிலமை காணப்படுவதாக NEC (2000) அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்நிலமை இன்னும் தொடர்வதாகவே புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

மொழிசார் அடைவு மட்டங்கள் இத்தகைய வீழ்ச்சி நிலையைக் காட்டுகின்ற போது அரசின் கடந்தகால கலைத்திட்ட அமைப்பு மொழிப் பாடநெறி தொடர்பாக முறையாக வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படவில்லையா? அல்லது முறையான கலைத்திட்டமாதிரிகளை இனங்கண்டு கொள்ள முடியாமல் போய் உள்ளதா? கல்வித் தராதரமும் கற்றல் விளைவுகளும் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளுக்கான வறிதான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியுள்ளதா? என பல கேள்விகள் எழுந்து நிற்கின்றது.

இந்நிலையில் எதிர்கால கலைத்திட்ட மாதிரிகளில் மொழிக் கல்விக்கான அடைவு மட்டத்தை மேம்படுத்த வேண்டும் என கருதினால் கல்விக் கொள்கையாக்குவோர் ஆரம்ப இடைநிலை மட்டங்களில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். இதற்கென தனியான கலைத்திட்ட மாதிரிகளை உருவாக்குதல் சிறந்ததாக இருக்கும் என கல்வியியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதுவரை காலமும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டோர் சிங்கள மொழியை ஏதோவொரு வகையில் நிராகரித்தவர்களாகவும் அதே போல சிங்களவர்கள் தமிழ்மொழியை நிராகரித்த தன்மையை உடையவர்களாகவும் கடந்த பல தசாப்தங்களாக நாட்டில் இருந்த அசாதாரண சூழ்நிலைக்கு முக்கிய காரணமாக இவ்விடயம் இருந்ததெனவும் கூறலாம். இந்நிலைமையில் மாற்றங்களை கொண்டு வரவேண்டுமாயின் வினைத்திறன் மிக்க சிறந்த தொடர்பாடல், பிரச்சினையைத் தீர்க்கும் அணுகுமுறை, நெகிழ்ச்சித் தன்மை, இணங்கிச் செல்லல், உந்துகை மற்றும் குடிசார் உணர்வுகள் போன்ற பல பண்புகளை கல்விமுறை மூலம் உருவாக்குதல் வேண்டும்.

இருப்பினும் இவ்வாறான நிலமையில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழியை அறிந்திருத்தல் என்பது மிக அவசியமாகியுள்ளது. தமிழ் மொழியோடு சிங்களமோ, ஆங்கிலமோ கற்றுக் கொள்ளுதல் என்பது அத்தியாவசியமாகிறது. ஆசிரியர்கள் இது தொடர்பில் முக்கியமானவர்கள். தகுந்த பயிற்சியளிக்கப்பட்டு பாடசாலைகளில் மொழிப் பாடங்களுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படும் போது விரைவாகவும் முறையாகவும் இரண்டாம் மொழிக்கல்வியினை கற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இவ்விடயம் நடைமுறைப்படுத்தப்படும் போதுதான் அதன் சிக்கல்களையும் எதிர்பார்க்க முடியும். ஆயினும் மேலதிக மொழிகளை கற்பது என்பது கல்விப்புலத்தில் கட்டாயமானதும் கூட.

**V.S. இந்திரகுமார்**

**அகவிழியில் இடம்பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு.**
**கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் 'அகவிழி' யின் கருத்துக்கள் அல்ல.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்கலைக்கழக கல்விசார் உயர்பதவிகளில் பால்நிலைசார் சமத்துவமின்மை

கலாநிதி (திருமதி) க. [illegible]
சிரேஷ்ட விரிவுரையாளர்
[illegible]
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்


முகவுரை

பால்நிலை சார்ந்த பாரபட்சங்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் பல நிலைகளிலும் ஊடுருவி நிறைந்துள்ளன. பால்நிலைச் சமத்துவமின்மை என்ற பிரச்சினை உருவாகுவதற்கு பால்நிலை சார்ந்த பாரபட்சங்கள் ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். பால்நிலைச் சமத்துவமின்மை என்ற பிரச்சினை கட்டமைப்பு சார்ந்தது என்பதனால் இப் பிரச்சினையை கொள்கைகள் வழியாகத் தீர்த்தல் என்பது ஒரு இலகுவான காரியமாகும். எனினும், ஒரு சமூகத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள ஒழுக்க நிலைப்பாடுகள் மீது ஏற்படுத்தக்கூடிய இசைவான மாற்றங்கள் பால்நிலைச் சமத்துவமின்மையென்ற பிரச்சினையைத் தீர்க்கலாம் என்பது பெண்நிலைச் சிந்தனையாளர்களின் வலுவான நம்பிக்கையாகும். எனினும், சிக்கலடிப்பாகப் பின்பற்றப்படுகின்ற சமூக நடைமுறைகளின் கட்டமைப்பிலே மாற்றங்கள் ஏற்பட்டாலன்றி, பால்நிலை சார்ந்த பாரபட்சமான நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறைவதற்கான சாத்தியங்கள் ஏற்படமாட்டாது என்பது நாம் யாவரும் அறிந்த ஓர் உண்மையே.

ஒரு சமூகம் தனக்குரிய கலாசாரப் பின்னணியிலே தான் பின்பற்றி வருகின்ற பண்பாடு, பழக்கவழக்கங்கள், மரபுகள், சம்பிரதாயங்களை மாற்றுவதென்பது இலகுவானதல்ல என்பதையும் நாம் உணர்வோம். ஆயினும் ஆண்கள் பெண்களுக்கிடையே அவர்களின் கல்வித்தராதரங்கள், ஆரோக்கிய நிலைப்பாடுகள், தொழில் வாய்ப்புக்கள் மற்றும் சமூகத்தினால் வழங்கப்படுகின்ற கணிப்புகள் என்பவற்றில் காணப்படுகின்ற பாரபட்சங்கள், வேறுபாடுகள் குறைகின்ற சந்தர்ப்பங்களில் பால்நிலைசார்ந்த பாரபட்சங்களும் குறையும் என்பது பெண்நிலைச் சிந்தனையாளர்களின் மற்றுமொரு வலுவான நம்பிக்கையாகும்.

பால்நிலைசார்ந்த பாரபட்சங்களைக் குறைப்பதற்கான மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை அமைப்பதற்கு உதவும் வகையில் கொள்கை வகுப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட அறிக்கையில் பால்நிலைசார்ந்த சமத்துவமின்மை பற்றி Naila Kabeer (2003) பின்வருமாறு தெரிவிக்கிறார்.

"பால்நிலைசார்ந்த சமத்துவமின்மை சமூகத்தின் அடிப்படையான சட்டங்கள், நெறிமுறைகள், மற்றும் எழுதப்படாத வரையறைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட விளக்கங்கள் என்பவற்றிலிருந்து கட்டியமைக்கப்பட்டதாகும். இது சமூகங்களில் காணப்படும் சமூகப் பிரச்சினைகளில் மிகவும் ஊறிப்போயுள்ள ஒரு வடிவமாகும். இது இனம், சாதி, வர்க்கம் போன்ற அனைத்து பிரிவுகளின் ஊடாகவும் பரந்து நிலைத்து நிற்கின்றது. எனவே பால்நிலைசார்ந்த சமத்துவமின்மை அனைத்து சமூகங்களிலும் காணப்படுவதோடு சகல மட்டங்களிலும் காணப்படுகின்றது என்று கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்".



பெண்கள் உழைப்பில் பங்குபெறுகின்ற வீதம் பொதுவாக எல்லா நாடுகளிலும் அதிகரித்து வருகின்ற நிலைமையிலே, பால்நிலைசார்ந்த சமத்துவமின்மை குறைவடைந்து வந்திருக்கலாமென நாங்கள் சிலவேளை எண்ணக்கூடும். ஆனால் சமூகத்தில் பால்நிலை சார்ந்த வேறுபாடுகள் பல மட்டங்களிலும், பல நிலைகளிலும், அதிலும் குறிப்பாக பொருளாதார ரீதியாக தேக்கநிலையில் உள்ள நாடுகள், மற்றும் போரச் சிதைவுகளுக்கு உட்பட்ட நாடுகளிலே பால்நிலைசார்ந்த சமத்துவமற்ற போக்கானது அதிகரித்தே வந்துள்ளது என்பதற்கான வலுவான ஆதாரங்கள் யாவற்றிலும் இல்லாமல் இல்லை.

இக்கட்டுரை உயர் கல்வி நிலையங்களான பல்கலைக்கழகங்களில் கல்வி சார்ந்த பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆராய்வதோடு பல்கலைக்கழகங்களில் கல்வி சார்ந்த உயர் பதவிகளில் பால்நிலைசார்ந்த பாரபட்சம் காணப்படுகின்றதாயின் அதற்கான காரணங்கள் என்ன என்பதை சிந்திக்க வைப்பதாகவும் அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழக கல்விசார் உயர்பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம்

சர்வதேச ரீதியாக பல்கலைக்கழக கல்விசார்ந்த உயர்பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் கல்வி சார்ந்த உயர் பதவிகளில் பால்நிலைசார்ந்த பாரபட்சங்கள் அதிகமாக இருப்பதனை புள்ளிவிபரங்களும் ஆய்வு முடிவுகளும் எடுத்துக்காட்டுகின்றன.

பல்கலைக்கழக உயர் பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் பற்றி ஆய்வு செய்த Jasbir (2005) கல்வி, கல்வி நிர்வாகம் சார்ந்த உயர்மட்ட அடுக்கமைப்புகளிலே பெண்களின் பிரதிநிதித்துவம் பொதுநலவாய பல்கலைக் கழகங்களில் தொடர்ந்து மிகவும் குறைவாக இருப்பதாகச் சுட்டிக் காட்டுகின்றார். இதனைப் பின்வரும் அட்டவணை 1 தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

கூட்டமைப்புகளில் அங்கத்துவம் பெறுகின்ற உயர் கல்வி நிறுவனங்களிலும் பெண்களின் தலைமைத்துவம் மிகக் குறைவாக இருப்பதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சர்வதேச பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்புகளிலே பெண்களின் தலைமைத்துவத்திற்கான பிரதிநிதித்துவத்தினை அட்டவணை 2 எடுத்துக்காட்டுகின்றது.

சர்வதேச ரீதியாகக் காணப்படுகின்ற சமத்துவமற்ற நிலைமை போன்றே தென்னாசிய நாடுகளிலும் குறிப்பாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளைச் சார்ந்த பல்கலைக் கழகங்களிலும் கல்வி சார்ந்த உயர் பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்தும் குறைவாகக் காணப்படுகின்றமையை ஆய்வுகள் வெளிக்காட்டி நிற்கின்றன.

இந்திய உயர்கல்வி நிறுவனங்களில் பெண்களின் பிரதி நிதித்துவம் தொடர்பாக 90 பல்கலைக்கழகங்களில் சேகரிக் கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் உபவேந்தர், பதிவாளர் போன்ற உயர் பதவிநிலைகளில் பெண்களின் பிரதிநித்துவம் குறைவாக உள்ளதாக Rajput (2002) குறிப்பிடுகின்றார். அட்டவணை 3 இல் இந்திய பல்கலைக்கழக உயர் பதவி

**அட்டவணை 1**

**தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் பொதுநலவாய பல்கலைக்கழகங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் – 2000**

| நாடுகள் | பெண்கள் | | ஆண்கள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | வீதம் | எண்ணிக்கை | வீதம் | |
| அவுஸ்ரேலியா | 3,787 | 23.9 | 12,081 | 76.1 | 15,868 |
| பங்களாதேஷ் | 427 | 13.0 | 2,846 | 87.0 | 3,272 |
| கனடா | 5,618 | 22.6 | 19,196 | 77.4 | 24,814 |
| இந்தியா | 3,067 | 23.2 | 10,155 | 76.8 | 13,222 |
| கென்யா | 146 | 12.4 | 1,031 | 87.6 | 1,177 |
| மலேசியா | 528 | 24.8 | 1,603 | 75.2 | 2,131 |
| நைஜீரியா | 703 | 15.1 | 3,957 | 84.9 | 4,606 |
| பாக்கிஸ்தான் | 467 | 22.9 | 1,571 | 77.1 | 2,038 |
| தென் ஆபிரிக்கா | 1,287 | 23.9 | 4,102 | 76.1 | 5,389 |
| இலங்கை | 496 | 31.5 | 1,078 | 68.5 | 1,574 |
| தன்சானியா | 61 | 14.2 | 368 | 85.8 | 429 |
| உகண்டா | 62 | 17.8 | 287 | 82.2 | 349 |
| பெரிய பிரித்தானியா | 9,701 | 24.0 | 30,696 | 76.0 | 40,397 |
| சம்பியா | 25 | 14.3 | 150 | 85.7 | 175 |
| சிம்பாவே | 24 | 36.9 | 41 | 63.1 | 65 |
| பொதுநலவாயம் | 28,310 | 22.6 | 96,902 | 77.4 | 125,212 |

Source: Jasbir, Association of Commonwealth Universities (ACU), 2000.

பொதுநலவாய பல்கலைக்கழகங்களின் உயர் பதவி களில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாகக் காணப் படுவதைப்போன்றே சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 2**
**சர்வதேச பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பின் அங்கத்துவ நிறுவனங்களில் பெண்களின் தலைமைத்துவம்**

| நிறுவனங்கள் | அங்கத்துவ நிறுவனங்கள் | பெண் தலைவர்களைக் கொண்டுள்ள நிறுவனங்கள் |
|---|---|---|
| ஆபிரிக்க பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு | 120 | 6 |
| அரேபிய பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு | 103 | 2 |
| பொதுநலவாய பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு | 463 | 37 |
| பிரான்சிய மொழி பேசும் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு | 270 | 16 |
| ஐரோப்பிய பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு | 497 | 35 |
| ஆசிய பசுபிக் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு | 140 | 7 |
| அமெரிக்காவுக்குள்ளான உயர் கல்விக்கான நிறுவனம் | 350 | 18 |
| லத்தீன் அமெரிக்காவுக்கான பல்கலைக்கழகங்களின் ஒன்றினம் | 177 | 47 |

Source: Jaya Indiresan, 2007.

**அட்டவணை 3**
**இந்திய பல்கலைக்கழக உயர் பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம்**

| பதவிகள் | எண்ணிக்கை | | பெண்களின் பிரதிநிதித்துவ வீதம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| உபவேந்தர் | 70 | 9 | 11 |
| பீடாதிபதி | 367 | 50 | 12 |
| பதிவாளர் | 77 | 6 | 7 |
| பிரதிப் பதிவாளர் | 298 | 27 | 8 |
| உதவிப் பதிவாளர் | 504 | 67 | 12 |
| பரீட்சைக் கட்டுப்பாட்டாளர் | 57 | 5 | 8 |
| நிதி அலுவலர் | 66 | 3 | 4 |
| நூலகர் | 51 | 9 | 15 |

Source: Jaya Indiresan, 2007.

களில் பெண்களின் பிரதிநிதித்துவம் எடுத்துக்காட்டப்படு கின்றது.

இலங்கைப் பல்கலைக்கழகங்களிலும் உயர் பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாக உள்ளதெனக் Gunawardena (2005) குறிப்பிடுகின்றார். இதனை இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பின்வரும் தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

மேலே காட்டப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் நோக்குகின்றபொழுது பல்கலைக்கழக உயர் பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகக் குறைவாக இருக்கின்றது என்பது மிகத்தெளிவாகின்றது. இத்தகைய பாரபட்சமான நிலைமைக்கு பணிகளில் அமர்த்துவோர் பின்பற்றுகின்ற பால்நிலைசார்ந்த பாரபட்சமான சிந்தனைகள் மற்றும் தொழில் கொள்வோரின் பாரபட்சமான நோக்குகள் காரணமாக அமைகின்றனவா அல்லது பெண்களுக்கே உரித்தான உளவியல் காரணிகள் காரணங்களாக அமைகின்றனவா என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

## பால்நிலைப் பாரபட்சம் – பின்னணிக் கோட்பாடுகள்

### தொழிற்பாட்டுவாதக் கொள்கை (Functionalist Theory)

தொழிற்பாட்டுவாதக்கொள்கை பால்நிலை சார்ந்ததாக தொழில்களோடு நிலைத்திருக்கக்கூடிய பால்நிலைசார்ந்த மாறா மரபுமுறைக் (Gender Stereotype) கருத்துக்களை அடிப் படையாகக் கொண்டுள்ளது. இக்கொள்கை பெண்களை அதிகளவில் பாதிப்பதாக அமைகின்றது. தொழிற்பாட்டு வாதக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்குவோர், நடைமுறையில் பெண்களின் உழைப்பானது திட்டமிட்ட முறையில் சுரண்டப்படுகின்றது என்றும், வாய்ப்பாக அமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 4
இலங்கைப் பல்கலைக்கழக உயர் பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம்

| பதவி | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| பேராசிரியர் | 347 | 76 | 110 | 24 |
| இணைப் பேராசிரியர் | 43 | 71 | 18 | 29 |
| சிரேஷ்ட விரிவுரையாளர் | 1325 | 63 | 780 | 37 |
| விரிவுரையாளர் | 873 | 51 | 845 | 49 |
| மொத்தம் | 2588 | 60 | 1753 | 40 |

Source: University Grants Commission, 2010.

கின்ற சந்தர்ப்பங்களில் பெண்கள் மீதான கட்டுப்பாட்டினை ஆண்கள் தமது பொறுப்பில் எடுத்துக்கொள்கின்றார்கள் என்றும் நம்புகின்றனர்.

தொழில்களைப் பகிர்ந்து வழங்கும் கடமைகளைத் தம்முடன் வைத்திருக்கும் உரிமையாளர்கள் பெண்களுக்கு பாதகமான வகையில் தொழிற்படுவதாக ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. தொழிற்பாட்டுவாதக் கொள்கையினை ஆதரிப்போர் ஆண்கள் பொதுவாக எத்தகைய சவால்மிக்க பணிகளையும் தாமாகவே முன்வந்து பொறுப்பேற்றுக் கொள்வர் என்றும், பெண்கள் இயல்பாக சிறுவர் பராமரிப்பு பணிகளுக்கு பொருத்தமானவர்களாக இருப்பர் என்றும் கருதுகின்றனர். ஆண்கள் தொழிற்சந்தைக்குப் பொருத்த மானவர்கள் என்று தொழிற்பாட்டுக் கொள்கைவாதிகள் வாதிடுகின்றனர். மேலும் இக்கொள்கை, பெண்கள் தமது பிள்ளைகளைப் பராமரிப்பதற்காக தமது தொழிலை இடையில் கைவிடவோ அல்லது முற்றாகக் கைவிடவோ கூடும் என்பதனையும் சுட்டிக்காட்டுகின்றன.

பெண்கள் தமது தொழில்களை ஓய்வுபெறும் வயதை அடையமுன்னரே ஒதுக்கிவிடக்கூடியவர் என்பதனால் பெண்களை வேலைக்கு அமர்த்துவோர் அவர்களை குறைந்த முக்கியத்துவத்துடன் பார்க்கின்றனர். இதனால் பல்வேறு வகையான திறன்களை பெறுவதற்கான பயிற்சிகளுக்கு ஆண்களை அனுப்பி அவர்களைத் தொடர்ந்து வைத்திருக்க விரும்புகின்ற போக்கு நடைமுறையில் தொழில்கொள் வோரிடம் காணப்படுவதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டு கின்றன.

## எதிர்முரண்பாட்டுக் கொள்கை
(Conflict Interactionist Theory)

பால்நிலைச் சமத்துவமின்மைக்கான அடிப்படைக் காரணம் சமூகத்தினது இயல்பே என்று சிலர் வாதிடக்கூடும். இவ்வாதத்திற்கு வலுசேர்ப்பதாக எதிர்முரண்பாட்டுக் கொள்கை அமைகின்றது. பல்வேறுபட்ட குழுக்களைக் கொண்டமைந்துள்ள ஒரு சமூகத்திலே வளங்களைப் பகிர் வதில் எப்பொழுதும் இக்குழுக்கள் தம்மத்தியிலே முரண்பாடு களைக் கொண்டிருப்பர் என்று எதிர் முரண்பாட்டுக் கொள்கை வாதிகள் வாதிடுகின்றனர். பெண்களும் ஆண்களும் ஒரு குறிப்பிட்ட மட்டத்திலே உழைப்பு, பணம், சொத்து என்ப வற்றைக் கட்டுப்படுத்தும் உரிமைகள் தொடர்பாக முரண்பாடு களுக்குள்ளாவது இதனாலேயே என்று எதிர்முரண்பாட்டுக் கொள்கைவாதிகள் கருதுகின்றனர்.

ஆண், பெண் இருபாலாரும் பொதுவாக ஒரேவகையான இலக்குகளையே கொண்டவர்கள். தமது குடும்பங்களை வளர்த்துக்கொள்வதும் சமூகத்தைப் பேணிக்கொள்வதும் இரு பாலாரினதும் பொதுவான குறி இலக்குகளாக அமைந் திருக்கும். சிலசமயம், குடும்பங்களை வளர்த்துக்கொள்வது சமூகத்தை பேணிக்கொள்வது என்ற இலக்குகளுடன் தொடர்புபட்ட வகையில் ஆண்களினதும், பெண்களினதும் கண்ணோட்டங்கள் வேறுப்பட்டவையாக அமைந்திருக்கலாம். ஆனால் பெண்களும் ஆண்களைப் போன்று ஒரே வகையான வளங்களுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு சமூகக் குழுவே என்பதை நாம் உணர்தல் வேண்டும். (பெண்களின் இனப்பெருக்க வகிபாகம் காரணமாக அனுகூலமான நிலைப் பாடுகளிலிருந்து அவர்களை விலக்கிவைக்கின்ற நிலை சமூகத்தில் பொதுவாகக் காணப்படுகின்றது.)

எதிர்முரண்பாட்டுக் கொள்கை பெண்களின் இனப்பெருக்க வகிபாகமே அவர்களுக்குப் பிரதிகூலங்களைத் தருவதாக விளக்குகிறது. பல சமூக ஆய்வு முடிபுகள், பெண்களின் உழைப்பின் மீது ஆண்கள் சம்பிரதாயபூர்வமற்ற வகையில் உரிமைகளைக் கைப்பற்றி வைத்திருக்கின்றனர் என்றும் இதனால், பெண்கள் தமது ஓய்வுநேரத்தில் ஒருபகுதியை யேனும் தங்களுக்காக பயன்படுத்தும்வகையில் மீளப்பெறுவ தற்காக ஆண்களுடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் வெளிக்காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டமைப்பு முரண்பாட்டுக் கொள்கை
(Structural Conflict Theory)

மார்க்ஸிஸ கட்டமைப்பு முரண்பாட்டுக் கொள்கையாளர்கள், இனப்பெருக்கம் மற்றும் பிள்ளைகளைப் பராமரித்தல் ஆகிய பெண்களின் பணிகளைத் தமது தொழிற் சந்தையை நிரப்பிக்கொள்வதற்கான மலிவான வழிகளாக முதலாளித்துவம் பயன்படுத்துகிறதென குறிப்பிடுகின்றனர்.

முதலாளித்துவ முறைமையின் கீழ் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி அனைத்து உழைப்பாளர்களினதும் உழைப்புச் சக்திகள் சுரண்டப்படுகின்றன. சமூக அடுக்கமைப்பு ஒன்றிலே பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, அரசியல் மட்டங்களைச் (level) சேர்ந்த மக்கள் கூட்டத்தினர் உள்ளனர். பொதுவாக சமூகத்திலே ஒவ்வொரு தட்டைச் சேர்ந்தவர்களும் தமக்கு அடுத்ததாக கீழே இருக்கின்ற அடுத்த தட்டு மக்களைச் சுரண்டும்போது முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன. சமூகத்தின் பால்நிலை சார்ந்த அடுக்கமைப்பிலே பெண்கள் பலவீனமானவர்கள் என்பதனால், ஒரே மட்டத்தைச் சேர்ந்த ஆண்களாலேயே சுரண்டப்படக்கூடியவர்ளாக உள்ளனர் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

பெண்நிலைச் சிந்தனையாளர்கள் முதலாளித்துவம் தோற்றம் பெறுவதற்கு முன்பிருந்தே பெண்களின் உழைப்பை ஒரு குடும்பத்திற்குள்ளேயே ஆண்கள் சுரண்டுவது நடைபெற்று வருவதாக குறிப்பிடுகின்றனர். இலாப நோக்குடன் தன்னிடம் வசமாக அகப்படும் எதனையும் சுரண்டும் அடிப்படை வாதத்தை அடிப்படையாகக் கொண்டது முதலாளித்துவம் ஆகும். முதலாளித்துவம் எதற்காக ஆண்களின் உழைப்புச் சக்தியைவிடப் பெண்களின் உழைப்புச் சக்தியை அதிகம் சுரண்ட முனைகின்றது என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்.

சமூகக் கட்டமைப்பானது உழைப்புச் சுரண்டலுக்கு ஏற்ற வகையில் நன்கு பொருந்தி அமைந்திருப்பதாக கட்டமைப்பு முரண்பாட்டு கொள்கைவாதிகள் விளக்குகின்றனர். (தொழிற் சந்தையிலே, ஆண்கள் ஆண்களுக்கென வகுக்கப்பட்ட தொழில்களையும், பெண்கள் பெண்களுக்கென மரபுவழியாக ஒதுக்கப்பட்ட தொழில்களையும் மேற்கொள்ளும் நிலைமையானது, தொழிற்சந்தைக்குத் தேவையான கட்டமைப்பு இயல்புகளை மேலும் வலுப்படுத்தி வைத்துள்ளது. இது பால்நிலைசார்ந்த பாரபட்சங்கள் தொழிற்சந்தையிலே மேலும் வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக அமைந்துள்ளன.) பால்நிலை சார்ந்த அடிப்படைத் தொழிற்பகுப்பு முறையினால், பெண்கள் தமது பால்நிலைக்கு மரபுவழியாக ஒதுக்கப்படாத தொழில்களில் தம்மை இருத்திக் கொள்வதில் பல தடைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

### குடும்பக் குடியாட்சிமுறை (The Patriarchal System)

குடும்பங்களில் பெண்கள், சிறுவர்கள் மீது ஆண்களுக்கு இருக்கின்ற ஆதிக்கம் போன்று சமூகம் முழுவதிலும் ஆண்களின் ஆதிக்கத்தை விரிவாக்கியும் நிறுவனமயப்படுத்தியும் செயற்படுத்துவதற்கு உதவுகின்ற ஒரு எண்ணக்கருவாக குடும்பக் குடியாட்சிமுறை அமைகின்றது. பண்டைய தாய் வழியாட்சி முறையிலே பெண்களின் ஆதிக்கம் இருந்துள்ளது என்பதற்கு ஆதாரங்கள் இருந்தாலும், சமூகத்தில் பெண் ஆதிக்கம் செலுத்தும் நிலையானது பொதுவாகக் குறைவானதாகவே இருந்துள்ளது. குடும்ப குடிமுறையாட்சியில் ஆண்கள் முக்கிய அதிகாரங்களைக் கொண்டவர்களாக இருக்க பெண்கள் அவ்வாய்ப்புக்களை அடைய முடியாதவர்களாக இருப்பர் என்பது குடும்பக் குடியாட்சிமுறையின் அடிப்படைத் தத்துவம் (Lerner, 1986). ஆனால் மார்க்ஸிஸ வாதிகளின்படி, வர்க்க முரண்பாடுகள் ஆதிக்கம் பெற்றுள்ள ஒரு சமூக அமைப்பிலே, தலைமையேற்பவர் எவ்வகையினராக இருந்தாலும் பெண்கள் சுரண்டப்படுவர் எனத் தெரிவிக்கின்றது. இதற்கான காரணம் என்ன என்பதும் சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்.

குடும்ப குடிமுறையாட்சியானது சட்ட நடவடிக்கைகளால் வலுவூட்டப்பட்டு உறுதிநிலைப்படுத்தப்பட்டதை ஆசிய, ஆபிரிக்க சமூகங்களில் காணக்கூடியதாக உள்ளது. Fatima Farideh (2003) "பெண்கள் பலவீனமானவர்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு தேவை. பெண்களுக்குச் சிறந்த பாதுகாப்பிடம் வீடு தான் என்பதை பாலியல் சார்ந்த வன்முறைகள் நியாயப்படுத்தப்படுகின்றது. பெண்கள் வீட்டிற்கு வெளியே செல்வது பாதுகாப்பு அற்றது என்பதை வலியுறுத்துவதற்கான ஒரு வலுவான ஆயுதமாக பால்நிலைசார்ந்த வன்முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இது பெண்கள் வீட்டிற்குரியவர்கள் என்பதை நிலைநிறுத்துவதற்கு உதவுகிறது" எனக் குறிப்பிடுகின்றார்.

### திருமணமும் குடும்ப குடிமுறையாட்சியும்
(Marriage and Patriarchy)

பால்நிலை வேறுபாடுகளை நிலைநிறுத்தி வைப்பதற்கு உதவுகின்ற ஒரு அச்சாணியாக திருமணமும் உள்ளது எனலாம். ஆணும் பெண்ணும் வாழ்க்கையில் இணைந்து பங்கேற்பதை உறுதிசெய்யும் ஒரு கட்டமாக திருமணம் அமைகின்றது. சமூகங்கள் தத்தமது கலாசார அடையாளங்களையெல்லாம் திரட்டி, வடிவமைத்து, வலுவூட்டி, தளமமைத்து ஏற்படுத்திவிடும் ஒரு கட்டமைப்பாக திருமணம் உள்ளது. ஆதிக்க வகிபாகத்தை ஆணுக்கும், அடங்கிப் போகும் அல்லது நன்றியுடன் ஏற்றுக்கொள்ளும் வகிபாகத்தை பெண்ணுக்கும் விளக்கிக் காண்பிக்கும் திருப்புமுனையாகவும் திருமணம் அமைந்துவிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்த கொள்கைகள், சிந்தனைகள் மட்டுமல்லாது சமூகத்திலே விரும்பியோ விரும்பாமலோ நடைமுறையில் இருக்கின்ற பெண்கள் தொடர்பான வார்ப்பு எண்ணங்களும் பால்நிலை சார்ந்த சமநிலைஅற்ற நிலைமையை பல வழி களிலும் தொடர்ந்து வலுப்படுத்துவதற்கு காரணமாக அமைந்துவிடுகின்றது எனலாம்.

**பால்நிலைசார்ந்த வார்ப்புஎண்ணங்கள்**

சர்வதேச ரீதியாக நடாத்தப்பட்ட ஆய்வுகள், பெண்களின் தொழில் விருத்தியில் செல்வாக்குச் செலுத்துவதாக இனங் காணப்பட்டுள்ள பல காரணிகளுள் பால்நிலைசார்ந்த வார்ப்பு எண்ணங்கள் இன்றைய நவீன யுகத்திலும் பெண்களின் தொழில்விருத்தியில் செல்வாக்குச் செலுத்துவதாக எடுத்துக் காட்டியுள்ளன. இவ் ஆய்வுகள் பின்வரும் பால்நிலைசார்ந்த வார்ப்புஎண்ணங்கள் பெண்களின் தொழில்விருத்தியில் செல்வாக்குச் செலுத்துவதாக இனங்கண்டுள்ளன.

1. பெண்கள் பாரம்பரியமற்ற நவீன தொழில்களுக்கு பொருத்தமற்றவர்கள்.
2. முகாமைத்துவம் சார்ந்த வகிபாகங்களைப் பெண்களால் சிறப்பாகச் செய்யமுடியாது.
3. முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தேவையான வலுவான மனப்பாங்குகள் பெண்களுக்கு இல்லை.
4. அரசியல் சார்ந்த விழிப்புணர்வு குறைவு
5. விளக்கமான சிறந்த தொழில் வடிவமைப்பு இல்லை.
6. தொழில்நுட்ப, முகாமைத்துவ திறன்கள் குறைவு.
7. பெண்பிள்ளை என்ற நிலையில் வழங்கப்பட்ட பிள்ளைப் பருவ வளர்ப்பு முறையானது பிரச்சினைகளையும் சவால்களையும் சரியான முறையில் கையாளுவதற்குத் தேவையான திறன்களை வழங்கி இருக்காது.
8. பொறுப்புக்களை உரியமுறையில் நிறைவேற்ற முடியாதவர்கள்.
9. சுயமாக முடிவெடுக்கும் திறன் குறைந்தவர்கள்.
10. தனித்து இயங்க முடியாதவர்கள்.
11. பாதுகாப்புடன் வாழவேண்டியவர்கள்.
12. கட்டுப்பட்டுக்கொண்டு போகவேண்டியவர்கள்.

மேற்குறித்த பால்நிலைசார்ந்த வார்ப்புஎண்ணங்கள் உண்மையில் பெண்களுக்கு பொருத்தமானதா. பொருத்த மற்றதாயின் இத்தகைய பால்நிலைசார்ந்த வார்ப்பு எண்ணங்களை எவ்வாறு மாற்றுவது என்பது சிந்திக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். பால்நிலைசார்ந்த வார்ப்பு எண்ணங்கள மட்டுமல்லாது கலாசார ரீதியாகக் காணப்படும் கண்ணுக்குப் புலப்படாத பல தடைகளும் (glass ceiling) பெண்களின் தொழில் முன்னேற்றத்திற்கு தடைகளாக இருப்பதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. கண்ணுக்குப் புலப்படாத இத் தடைகளை எவ்வாறு மறையச் செய்வது.

**முடிவுரை**

சமூகத்தில் விரும்பியோ விரும்பாமலோ அல்லது தெரிந்தோ தெரியாமலோ அரசியல், பொருளாதார, சமூகச் சூலமைவுகளில் பெண் என்பவள் இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்ட ஒரு நிலைமையே காணப்படுகின்றது. ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் பங்குதாரர்கள் என்பது உணரப்பட வேண்டிய விடயமாகும். சமூக முன்னேற்றத்தை கருத்திற்கொள்ளும் ஆர்வலர்கள் பெண்களை வலுவூட்ட (Women Empowerment) வேண்டும் எனக் கருதி பல செயற்றிட்டங்களை முன்னெடுக்கின்றனர். செயற்றிட்டங்களின் விளைவுகள் நன்மையளிப்பதற்கு, பெண்கள் தாம் ஆற்ற வேண்டிய பல்வேறு வகிபாகங்களை சமனான முறையில் கையாள்வதற்கான திறன்களை வளர்த்துக் கொள்வதோடு எத்தகைய சந்தர்ப்பங்களிலும் தன்னம் பிக்கையை இழக்காதவர்களாகவும் சுயவூக்கல் உடையவர் களாகவும் இருத்தல் வேண்டும் என்பது உணரப்பட வேண்டிய ஒன்றாகும்.

**உசாத்துணைகள்**


1. Gunawardena, C. (2005). *Not Adding Up: Looking Beyond Number- Gender Equity in Higher Education in Sri Lanka*, The Open University Press, Sri Lanka.
2. Jaya Indiresan (2007). *Capacity Building of Women Managers in Higher Education, Women and Leadership Manual III*, University Grants Commission. New Delhi.
3. Kabeer, N. (2003). "Gender Mainstreaming in Poverty Eradication and the Millennium Developments Goals," *A Handbook for Policy Makers and Other Stakeholders*, Commonwealth Secretariat: London.
4. Rajput, P. (2002). *Women in Management in Higher Education*, Unpublished Report, Panjap University, Chandigarh: Centre for Women Studies and Development.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீள வலியுறுத்தற் கொள்கையில் ஆசிரியர் வகிபாகமும் அதன் பயன்களும்

க.வேதீஸ்வரன்
B.Ed. (Hons)


இன்று உளவியல் ரீதியான பல கொள்கைப் பிரயோகங்கள் வர்த்தகத்துறை, பாதுகாப்புத்துறை, வைத்தியத்துறை, கல்வித்துறை எனப் பலதரப்பட்ட துறைகளில் பிரயோகம் செய்யப்படுகின்றன. இத் துறைகளுள் எத்துறையினரையும் உருவாக்குவதற்கான துறையாகக் காணப்படும் ஒரே துறையே கல்வித்துறை. கல்வித் துறையில் வாண்மைத் தொழிலாகக் கருதப்படும் ஆசிரிய தொழிலில் உளவியல் ரீதியான கொள்கைப் பிரயோகத்தினை அறிந்தோ அறியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ பிரயோகம் செய்கின்றமை நாம் அறிந்த உண்மை. அந்த வகையில் ஸ்கின்னரின் கொள்கைகளைப் பாடசாலையில் பிரயோகம் செய்வதால் ஆசிரியர் கற்பித்தல் தொடர்பாகப் பெறக்கூடிய பயன்கள் பலவுண்டு இருப்பினும் கொள்கைபற்றி அறிந்து அவற்றைப் பிரயோகம் செய்தல் மேலும் பல மடங்கு நன்மையளிக்கும் என்பதில் ஐயமில்லை.

சில நிகழ்வுகள் அல்லது கருத்துக்கள் அடுத்தடுத்து ஏற்படுத்துவதால் உருவாகும் தொடர்பு காரணமாகக் கற்றல் நிகழ்கின்றது எனும் கருத்தை முன்வைப்பவர்கள் இணைப்புவாதிகள் என அழைக்கப்படுகின்றனர். இவர்களுள் பவ்லோவ், குத்ரி, தோண்டைக், ஹல், ஸ்கின்னர் ஆகியோர் தூண்டல்-துலங்கல் கொள்கையினராகக் கொள்ளப்படுகின்றனர். இவர்களுள் மிகவும் அண்மைக்காலத்தில் வாழ்ந்தவரே பி.எவ்.ஸ்கின்னராவார். ஸ்கின்னர் 1904ம் ஆண்டு மூன்றாம் மாதம் 20ம் திகதி நியூயோர்க்கில் சிறிய மலையோரத்தே ரயில் பாதை நகரத்தில் பிறந்தார்.

ஸ்கின்னர் 21 நூல்களையும், 180க்கு மேற்பட்ட சஞ்சிகைகளையும் வெளியிட்டிருந்தார். 1939ல் ஸ்கின்னர் 'மீளவலிமையூட்டல் நிகழும் தன்மை' எனும் நூலை வெளியிட்டார். விலங்குகளிடையே காணப்படும் நடத்தைகளை இரு வகைகளாக இவர் நோக்குகின்றார். முதலாவது வகையானது, ஒரு தூண்டியின் மூலமாக உயிரியிலிருந்து வெளிக்கொணரப்படும் துலங்கலாகும். பழக்கப்பட்ட பிராணிகளினால் வரவழைக்கப்படும் அல்லது ஏற்படுத்தப்படும் தெறிவினைகள் யாவும் இங்கு துலங்கல்களாகக் கருதப்படுகின்றன. (ஒளிக்கு கண் இமைகளை மூடுதல்)

இரண்டாவது வகையான துலங்கலை ஸ்கின்னர் 'காலத் துலங்கல்கள்' என அழைத்தார். இவை குறித்த எத் தூண்டியுடனும் தொடர்புபட்டிருக்க வேண்டியதில்லை. கண்ணை மூடுதல், தலையைச் சொறிதல், தலையைத் திருப்புதல், அவயவங்களை அசைத்தல் போன்ற பல செயல்கள் வெளிப்பாடாகப் புலப்படும் எவ்வித காரணமும் இன்றி ஓர் உயிரியிடம் தோன்றலாம்.

ஸ்கின்னருடைய கொள்கை தொழிலி நிபந்தனைப்பாடு (Operant Conditioning) எனப்படும். தொழிலி நிபந்தனைப்பாடானது ஒழுங்கமைக்கப்பட்ட கற்றலைக் குறிப்பிடுவதாக அமைகின்றது. ஸ்கின்னர் தனது 'ஸ்கின்னரின் பெட்டியினுள்' (Skinner Box) எலியைப் பயன்படுத்திப் பரிசோதனை செய்தார். இவரது ஆய்வில் ஸ்கின்னரின் பெட்டிக்குள் அடைக்கப்பட்ட எலியானது லீவரை அழுத்தி உணவு பெறும் வகையில் அமைந்தது. இப் பரிசோதனையின் மூலம் ஒரு இயந்திரத்தினை இயக்கச் செய்ய முடியும் எனக் கண்டறிந்தார். இதனை ஒரு கட்டுக்கோப்பில்லாத தூண்டியைப் பயன்படுத்தி இப் பரிசோதனையை பிரயோகிக்கின்றார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு உணவைப் பெறும் எலியானது எதிர்காலத்தில் உணவு இல்லாவிடினும் லீவரை அழுத்தும். ஏனெனில் அச் செயற்பாடு நிரந்தரமாக மூளையிற் பதிவுபட்டுள்ளது.

*மீளவலிமையூட்டிகள்:-* மீளவலிமையூட்டிகள் என்பது கற்றலில் மீளவலியுறுத்தற் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அடிப்படையாக அமைவனவாகும். இவற்றை மூன்று வகைகளாக வகுக்கின்றார் ஸ்கின்னர்.

1. முதன்மை மீளவலிமையூட்டிகள்
2. துணை மீளவலிமையூட்டிகள்
3. இயற்கையான மற்றும் செயற்கையான மீளவலிமையூட்டிகள்

*மீளவலியுறுத்தல்கள்:-* ஸ்கின்னர் வலிமையூட்டலை நேரான வலிமையூட்டல், எதிரான வலிமையூட்டல் என இரு வகைகளாகக் குறிப்பிடுவார். ஸ்கின்னரது கருத்துப்படி நேரான வலிமையூட்டல் நடத்தையை மாற்றியமைப்பதற்கு மிகவும் உசிதமானது எனக் குறிப்பிடுகின்றார்.


*நேர் மீளவலியுறுத்தல்:-* எந்த ஒரு தூண்டல் வலுவூட்டப்படும் பண்புள்ளது? என்பது அது துலங்கலை எவ்வாறு பாதிக்கின்றது? என்பதைப் பொறுத்தது. உடன்பாட்டு முறையில் அமையும் வலுவூட்டும் தூண்டல்கள் எதேர்ச்சையான துலங்கல் எழுந்தபின் அளிக்கப்பட்டால், அத்தகைய துலங்கல் மீண்டும் அடிக்கடி எழுதலை உறுதிசெய்யும். உணவு, தண்ணீர் என்பன இத்தகைய வலுப்படுத்தும் உடன்பாட்டுத் தூண்டல்களாகும். எடுத்துக்காட்டாகப் புள்ளியைக் கொத்தும் புறாவிற்கு உணவளித்தல், தாகமுள்ள ஓர் எலி எதேச்சையாக நெம்புகோலை அழுத்தும் போது நீர் அளித்தல், ஒழுங்காக நடந்து கொண்ட ஒரு குழந்தைக்கு மிட்டாய் அளித்தல் ஆகியன உடன்பாட்டுமுறையில் வலுவூட்டும் தூண்டல்கள் எனப்படும்.

*எதிர் மீளவலியுறுத்தல்:-* எதிர் மீளவலியுறுத்தலானது அகற்றப்படுகின்றது அல்லது தண்டனை வழங்கப்படுகின்றது. குறித்த துலங்கலுக்குத் தடையாகவுள்ள காரணிகளை அகற்றுதல் எதிர் மீளவலியுறுத்தல் எனப்படும். அவ்வாறு அகற்றினால் துலங்கல் வலுவடையும். படிப்பதற்குத் தடையாக அமையும் பிரகாசமான ஒளியை அல்லது பேரிரைச்சலைக் குறைத்தால் படித்தல் முன்னேறும்.

இவற்றுடன் பின்வரும் வகைகளையும் குறிப்பிடுகின்றார். முதனிலை மீளவலியுறுத்தல், தெரிவுசெய் மீளவலியுறுத்தல், தொடர் மீளவலியுறுத்தலின் படிநிலை.

*மீளவலியுறுத்தலின் அளவுத்திட்டங்கள்:-* விலங்குகளின் கூண்டு கட்டுப்படுத்தப்பட்ட போது அதனுடைய நடத்தை முறை மீளவலிமையூட்டலின் பின்னர் எதிர்வுகூறக்கூடியதாக இருக்கும். (அது சிக்கலான நடத்தையாக இருந்தாலும் கூட) துலங்கல்கள் மீளவலிமையூட்டப்படும் போது பயன்படும் தந்திரோபாய மீளவலியுறுத்தல் அளவுத்திட்டமாகும். (Sedule of Reinforcement)

SCHEDULES OF REINFORCEMENT




இந்த வரைபடமானது 4 வகையான மீளவலிமையூட்டலின் சாதாரண அளவுத்திட்டத்தை எடுத்துக்காட்டுகின்றது. ஒவ்வொரு கீழ்ப்பகுதிக் குறியும் மீளவலியூட்டல் ஆரம்பிக்கும் இடமாகும்.

*மாறாக் காலஇடை அளவுத்திட்டம்* (Fixed Intervale):- பரிசோதனையாளரினால் தீர்மானிக்கப்பட்ட நேர இடைவெளியில் மீளவலியுறுத்தலை மேற்கொள்ளுதல் மாறாக் கால இடை அளவுத்திட்டமாகும்.


*மாறும் காலஇடை அளவுத்திட்டம்* (Variable interval):- மாறும் காலஇடை அளவுத்திட்டத்தின்படி மீளவலியுறுத்தலை மேற்கொண்ட போது புறாவின் நடத்தை எவ்வித தொய்வும் இன்றி ஒரே சீராகக் காணப்படும். இவ்வகை அளவுத்திட்டத்தில் புறாவின் கொத்துகைக்கு உணவுவழங்குதலில் சராசரிக்கால இடைவெளியின் அடிப்படையிலோ அல்லது எழுமாறாகத் தனியாக வழங்குதல் ஒழுங்கு மாறுபடும். அத்தோடு ஓர் ஒழுங்கில் இடம் பெறுகின்றது.

மாறும் கால இடைவெளி வகையான மீளவலிமையூட்டலில் பின்னர் எழுமாறான சராசரி இடைவெளியின் பின் முதன்முறையாக வரும் துலங்கலுக்கு மீளவலியுறுத்தலைச் செய்தல்.

*மாறாவிகித அளவுத்திட்டம்* (Fixed ratio):- ஒரு மீளவலியுறுத்தல் வழங்கப்பட்ட வேளையிலிருந்து குறித்த ஒரு எண்ணிக்கைத் துலங்கல்கள் வெளிப்பட்டதும் மீளவலியுறுத்தல் வழங்கப்படும் ஒழுங்குமுறை மாறா விகித அளவுத்திட்டம் எனப்படும். நிலையான விகித அளவுத்திட்டம் குறிப்பிட்ட துலங்கல் முடிந்தபின் கொடுக்கப்படும் மீளவலியுறுத்தற் செயற்பாட்டைக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்ந்து செல்லும் விகித அளவுத்திட்டம் (Continuous ratio):- மாறா விகித அளவுத்திட்டத்தின் விசேட உருவாக்கமாக இவ் அளவுத்திட்டம் காணப்படுகின்றது. இதில் ஒவ்வொரு துலங்கலும் மீளவலியுறுத்தப்படும்.

மாறும் விகித அளவுத்திட்டம் (Variable ratio): மாறாத விகித அளவுத்திட்டத்தில் காணப்படும் உயிரியின் நடத்தையின் மந்தநிலை அல்லது ஓய்வுநிலை மாறும் விகித அளவுத்திட்டத்தில் இல்லாதொழிக்கப்படுகின்றது. மீளவலியுறுத்தல் விகிதமானது எழுமாற்றாக மாறுபட்டுக் கொண்டிருந்ததனால், மீளவலியுறுத்தலைப் பெறும்வாய்ப்பு எல்லாத் துலங்கலுக்கும் ஒரே அளவாக இருக்கும். எனவே இது ஒரே சீரான உயர்வீதத் துலங்கல் நடத்தைகள் ஏற்படுவதற்கு இடமளிக்கின்றது. மாறும் விகித அளவுத்திட்டம் எழுமாற்றான எண்ணிக்கையிலான துலங்கல்களினை வலியுறுத்துகின்ற அளவுத்திட்டமாகும்.

ஸ்கின்னருடைய கொள்கையின் பயன்பாடு:- வகுப்பறை முகாமைத்துவத்தில் ஸ்கின்னரது மீள வலியுறுத்தற் கொள்கையைப் பிரயோகம் செய்துள்ளார்கள். இதனால் வகுப்பறையிற் தொந்தரவான நடத்தைகள் குறைக்கப்பட்டு சாதகமான நடத்தைகள் விருத்தியாக்கப்படுகின்றன. ஒரு மாணவனுக்கு வகுப்பறையிற் பரிசு அல்லது தண்டனை எவ்வாறு கிடைக்கின்றது என்பதை மாணவர் - ஆசிரியர் தொடர்பைக் கொண்டு கூறுகின்றது.

பேசுவதற்கான சூழலில் ஒரு பேச்சுத்திறன் உள்ள பிள்ளை சிறப்பாகப் பேசினால் அதற்குப் பரிசு கிடைக்கும். எனவே கற்பதற்கான சூழல் இருந்தால் பிள்ளை சிறப்பாகக் கற்கும். மீளவலியுறுத்தல் முறையானது வகுப்பறையிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இதில் பிள்ளைவான நடத்தைகளுள்ள மாணவர்களுக்கும் அவர்களின் சிறப்பான ஒருசில நடத்தைகளைக் கருத்திற் கொண்டு பரிசுகளை வழங்கி ஏனைய மாணவர்களைப் போன்று ஊக்கப்படுத்தல்.

மாணவர்களின் முதன்மையான திறன்களை அடிப்படையாகக் கொண்டு பரிசுகள் வழங்குதல் வேண்டும். ஆனால் ஒவ்வொரு பிள்ளையை மாணவரின் நடத்தைகளைக் கருத்திற் கொள்ளல் கூடாது. மீளவலியுறுத்தற் கொள்கையானது வகுப்பறை ஒழுக்கத்தினை முகாமை செய்துள்ளது. அதாவது ஒரு கற்றலுக்கான சூழலை உருவாக்குவதன் மூலம் மாணவர்களது திறன் நடத்தை போன்றவற்றை உருவாக்குகின்றது.

குழப்பமான மாணவர்கள் வகுப்பறையிற் தேவையற்ற வார்த்தைகளைப் பிரயோகிப்பர். இவ்வாறான மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் தனது பாடவேளை ஆரம்பிக்கும் போது இரண்டு நிமிடங்கள் பாடம் தொடர்பாகப் பேசும் சந்தர்ப்பத்தைக் கொடுத்தால் [illegible] பேசுவான். இதனால் மாணவனது வேறு பேச்சுக்கள் தவிர்க்கப்படுகின்றது. அவ்வாறே மாணவனது கற்றல் விருத்தியடைவதோடு வகுப்பறைச் செயற்பாடும் சிறப்படைகின்றது.

ஸ்கின்னர் ஆளுமை இல்லாதவரையும், மனித இடைத்தொடர்பு இல்லாதவரையும், தீர்மானத்தைத் தன்னிச்சையாக எடுக்க முடியாத ஒருவரையும், சமூகத்திற் சுதந்திரம் இல்லாதோரையும் திறமையான மனிதர்களாக உருவாக்கமுடியுமென உறுதி பூண்டார். இவர் ஒரு குழந்தை பயன்படுத்தும் சொற்களை யார், யாருக்குப் பிரயோகம் செய்தல் வேண்டும் எனவும் தெளிவுபடுத்துகின்றார்.

நடத்தைவாத உளவியலை வகுப்பறைக்குக் கொண்டுவந்த ஸ்கின்னர், ஆசிரியர் தொடர்பாக முன்வைத்த சிறப்பான கருத்து வருமாறு. "ஆசிரியர்கள் இன்றியும் மாணவர்களாற் கற்றுக்கொள்ள முடியும். ஆனால் ஆசிரியர் கற்பதற்கான சூழலையும் ஏற்பாடுகளையும் நன்கு வடிவமைக்கும் பொழுது மாணவர்களால் விரைவாகவும் விளைத்திறனுடனும் கற்றுக்கொள்ள முடியும்" என்ற கருத்தின் மூலம் நடத்தைவாத உளவியலை வகுப்பறைக்குக் கொண்டுவந்து பிரயோகம் செய்த பெருமையும், சாதனையும் B.F. ஸ்கின்னரையே சாரும்.

மாணவரது செயல்களுக்குப் பாராட்டு, கணிப்பு மற்றும் வெகுமதிகள் போன்றவை ஆசிரியரினால் வழங்கப்படுதல் கற்றலை விரைவுபடுத்துவதுடன், கற்றவற்றை ஞாபகப்படுத்திப் பேணுவதற்கும் துணையாகவிருக்கும். தண்டனை என்பது மீளவலியுறுத்தி அல்ல என்பதனையும், தண்டனை கற்றலை ஏற்படுத்தாது என்பதனையும் ஆசிரியர்கள் உணர்ந்து கொள்தல் வேண்டும்.

பின்னூட்டமானது எவரினதும் எதிர்கால முயற்சிகள் அல்லது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் தன்மையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொண்டுள்ளது. கற்றற் பணியில் ஈடுபட்டுள்ள பிள்ளைக்குக் குறித்த பணியின் கற்றலில் அவனது முன்னேற்றம் பற்றித் தெரிந்திருக்கவேண்டும். அதுவும் காலந்தாழ்த்தாது எவ்வளவு விரைவாகத் தெரியப்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாகத் தெரியப்படுத்தல் வேண்டும். அதாவது உடனடியான பின்னூட்டல் மிகச் சிறந்தது. பிள்ளைகளின் அப்பியாசப் புத்தகங்களை உடனுக்குடன் பார்வையிட்டு உரிய குறிப்புக்களை வழங்குதல், வெகுமதிப்புள்ளிகளை தாமதமின்றித் தெரியப்படுத்தல் போன்றவை வரவேற்கத்தக்க நடைமுறைகளாகும். மாணவர் கொடுக்கும் தவறான விளக்கங்கள் முதலானவற்றை உடனுக்குடன் திருத்திக் கொள்வதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். துணை மீளவலியுறுத்தலைப் பற்றிய கருத்துக்களை நாம் ஏற்கும் பட்சத்தில், குறித்த விடயத்தைக் கற்பதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றியும் மாணவர் அறிந்திருக்க வேண்டிய தன் அவசியம் புலனாகும்.

குறித்த ஒரு கற்றலானது நீண்டகாலத்திற்கு வலியுறுத்தப்படாதவிடத்து அது மறைந்து விடலாம். எனவே கற்றவற்றை மீட்டல், பிறநிலைமைகளிற் பிரயோகித்தல், வினாக்களுக்கு விடையளித்தல் போன்ற செயற்பாடுகளை ஆசிரியர் ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டும். ஏனெனில் இச் செயற்பாடுகள் யாவும் மீளவலியுறுத்தும் இயல்பைக் கொண்டவையாகும்.

படிமுறையான அண்ணளவாக்கம், நடத்தை உருவாக்கம் பற்றிய கருத்துக்கள் யாவும் சிறந்த முறையில் கற்பித்தலின் போது பயன்படுத்தப்பட முடியும். கற்கவேண்டிய சிக்கலான விடயத்தையும் அர்த்தமுள்ள சிறு சிறு கூறுகளாக்கிக் குறித்த வரிசைக்கிரமத்தில் கற்பித்தலும், ஒவ்வொரு கூறின் கற்றலும் நிறைவுற்றதும் மீளவலியுறுத்தலுக்கான தகுந்த பின்னூட்டல் வழங்கப்படுத்தலும் கற்றலை இலகுபடுத்தும்.

பாடசாலைச் செயற்பாடுகளின் போது ஒரே நேரத்தில் பல மாணவர்களை ஆசிரியர் கவனிக்கவேண்டியுள்ளமையாலும், கற்றலுக்கான நேரக்கட்டுப்பாடு காரணமாகவும், மேலும் பல காரணங்களாலும் மாணவரின் ஒவ்வொரு செயலுக்கும் மீளவலியுறுத்தலை வழங்கும் நடைமுறை இடம்பெற இயலாது எனவே இடைவிட்ட மீளவலியுறுத்தல் முறையையே பின் பற்ற முடியும். இடைக்கிடையே மீளவலியுறுத்தற் செயற்பாடு எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பதனை ஸ்கின்னர் வகுத்த மீளவலியுறுத்தல் அளவுத்திட்டங்கள் தெளிவாக்குகின்றன. தனது மாணவரின் இயல்புகளுக்கும், கற்கும் பாடத்தின் தன்மைக்கும் மிகப் பொருத்தமாக அமையக் கூடிய மீளவலியுறுத்தல் ஒழுங்கு முறையை ஆசிரியரே உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஸ்கின்னரது கருத்துக்கள் ஆசிரியருக்கும், சமுதாயத்திற்கும் சிறந்த நடைமுறைப் பயனுள்ளவை என்பது தெளிவு. இப் பயன் சிலவற்றை இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடத்தை மாற்றத்திற்கான நுண்முறைகள் ஸ்கின்னரது கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு வகுப்பறைகளில் மாணவர்களது நடத்தையிற் தேவையான பயனுள்ள மாற்றங்களை ஏற்படுத்த ஆசிரியருக்கு உதவும் வகையில் அமைகின்றன. வலுப்படுத்தல் என்னும் கருத்தைக் கற்றலின் மையமாக ஸ்கின்னர் கருதுகின்றார். மாணவர்களது நடத்தையை மாற்றியமைக்க விரும்பும் ஆசிரியர் சில வழிகளைக் கையாள வேண்டுமென்பது ஸ்கின்னரின் கருத்து. மாணவர்கள் எத்தகைய நடத்தையைக் கற்க வேண்டும் என ஆசிரியர் விரும்புகின்றாரோ அதனைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் ஆசிரியர் வரையறை செய்தல் முதற்படியாகும். அடுத்து இவ்விறுதி நடத்தைக்குப் படிப்படியாக மாணவர்களை இட்டுச் செல்லும் நடத்தைப் பகுதிகளை ஆசிரியர் நிரற்படுத்தல் வேண்டும். பின்னர் இந்நடத்தைகள் எழும் போது இவற்றுக்கு வலுவூட்டும் தூண்டல்களைக் கண்டறிந்தும், வரிசைக்கிரமமாக இவ்வலுவூட்டும் தூண்டல்களை விரும்பும் நடத்தைகள் எழும்போது அளித்தும், விரும்பாத நடத்தை எழும்போது அளிக்காமல் அத்தகைய நடத்தையைப் புறக்கணித்தும் ஆசிரியர் செயற்பட வேண்டும். இவ்வாறு செயலாற்றி மாணவர்களிடம் மாற்றப்பட வேண்டிய தாக்குதல் நடத்தை, கட்டுப்பாடற்ற நடத்தை போன்றவற்றை மாற்றிப் பணிவு, ஒழுக்கம் போன்ற நற்பண்புகளை ஆசிரியர் அவர்களிடம் தோற்றுவிக்க முடியும்.

ஆசிரியரது திறமையை அதிகரித்தலுக்கான பயிற்சி முறையும், ஸ்கின்னரின் மனநூற் கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. சிறப்பாக நுண்முறைகளையும் இப்பயிற்சி ஆசிரியர்களுக்கு அளிக்கின்றது. இதன் மூலம் மாணவர்களை ஆசிரியர்கள் பூரணமான முறையில் அறிந்து செயற்பட உதவுகின்றது.

திட்டமிடப்பட்ட பாடப்பொருளினை பயன்படுத்திக் கற்பித்தல் இன்று கல்வியுலகில் ஒரு புரட்சியைத் தோற்றுவித்துள்ளது. இதுவும் ஸ்கின்னரின் கருத்துக்களுடன் அடிப்படையில் உருவான ஒன்று. ஸ்கின்னரின் கருத்துக்களுடன் ஹாலண்டு (J.G.Galland) என்பவரது ஆராய்ச்சிகளும் இதற்கு உதவியுள்ளன.

ஆசிரியர் கணிதம், மொழி, சித்திரம், சங்கீதம், நடனம் உடற்தொழிற்பாடுகள் போன்ற ஏனைய பாடங்கள் சம்பந்தப்பட்ட ஏனைய துறைகளையும் கற்பிக்கும் போது மீளவலியுறுத்திகளைப் பயன்படுத்துவது மிகப் பயனுள்ளதாக அமையும். ஆற்றல்களையும், அறிவினையும் பெற்றுக் கொள்வதற்கு இவ் மீளவலியுறுத்திகள் மிக முக்கியத்துவம் பெற்றுள்ளன.

அண்மைக்காலங்களில், புதிய கல்வித் தொழில் நுட்பங்கள் இவ் மீளவலியுறுத்திகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. முன் திட்டக்கற்பித்தல் முறை இத் தொழில் நுட்பங்களில் ஒன்றாகும். இத் தொழில்நுட்பத்தின் பிரதான சிறப்பு யாதெனில் பாட அலகுகளை பல பிரிவுகளாக வகுத்து கற்றல் அலகுகளாக முன்வைக்கப்படுகின்றன. இதில் உள்ளடங்கியுள்ள உளவியல் பெறுமானமானது ஒவ்வொரு படிமுறையும் கற்ற பின் அதன் விளைவுகளை அறிவதால் அவன் மீள வலியுறுத்தப்படுகின்றான்.

முன் திட்டக் கற்றலில் அடிப்படையில் புத்தகங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்தால் ஆசிரியர் இல்லாத வேளையிலும் மாணவர்கள் கற்றலில் தொடர்ந்து ஈடுபட முடியும். இவ்வாறாகப் பல பயன்களை ஆசிரியர்களுக்கும் அவர்களின் கற்பித்தலுக்கும் ஏற்படுத்தவல்ல இக் கொள்கை பிரயோகநிலையானது போற்றுதற்குரியதாகவே காணப்படுகின்றமையும் இப்பகுதியிற் குறிப்பிடத்தக்கதொன்று.

உசாத்துணைகள்


1. கருணாநிதி.மா. 'கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள்' (2008), சேமமடு பதிப்பகம் கொழும்பு.
2. 'கற்றல் எவ்வாறு நிகழ்கின்றது' தொலைக்கல்வி நிலையம், தேசிய கல்வி நிறுவகம். (1990)
3. 'கற்றலுக்கு வசதியளித்தல்' தொலைக் கல்வி நிலையம், தேசிய கல்வி நிறுவகம். (1988)
4. http://en.wikipedia.org/wiki/B._F._Skinner
5. http://webspace.ship.edu/cgboer/skinner.html
6. http://tip.psychology.org/skinner.html
7. http://en.academic.ru/dic.nsf/enwiki/2646
8. http://www.google.lk/imgres?imgurl=http://www.skeptically.org
9. http://www.google.lk/imgres?imgurl=http://feww.files.wordpress.com.
10. http://psychology.about.com/od/ behavioralpsychology /a/schedules.htm




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் கற்றலை மேம்படுத்துவதற்கான SQ5R வழிமுறை


எம்.எம். ஹிர்பஹான்
B.A., PG.D.E (Merit), D.C.Sc (Merit), M.Ed.
பிரதி அதிபர்,
கமு/ அல்-மனார் மத்திய கல்லூரி, மருதமுனை


இன்றைய தகவல் யுகத்தில் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் கற்று உயர் பதவிகளில் அமரவேண்டும் எனவும், அவர்கள் கற்பதனால் ஆளுமையுள்ளவர்களாக மிளிரவேண்டும் என்றும் ஆசை, ஆர்வம் எதிர்பார்ப்புக்கொண்டவர்களாக வாழ்பவர்கள் அதிகம். ஆனால் இவர்கள் அனைவரும் எதிர்கொள்ளும் பிரச்சினை தமது இலக்குகளை அடைந்து கொள்ள எவ்வாறு கற்பது? (How to Learn) என்பதனை அறியாமல் இருப்பதுதான்.

இந்த சவாலை எதிர்கொள்ள மாணவர்களை தயார்படுத்தும் நோக்கில் இன்று பல்வேறு மட்டங்களில் பல கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுவருகின்றன. அதாவது பாடசாலை மட்டம் முதல் பல்கலைக்கழக மட்டம்வரை எவ்வாறு கற்பது (How to Learn) என்பது தொடர்பான கருத்தரங்குகள் நடாத்தப்படுகின்றன. இதற்காக வெளிநாடுகளில் இருந்தும் வளவாளர்கள் வரவழைக்கப்படுகின்றனர்.

பொதுவாக எந்தவொரு வேலையைச் செய்வதற்கும் அதற்கான பயிற்சிகள் வழங்கப்படுவதுபோல் கற்றலை வினைத்திறனும் விளைதிறனும் உள்ளதாக மேற்கொள்ள அதற்கான பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டியது அவசியமாகும். இச் சவால்களை வெல்லும் இலக்கோடு கல்விப்பாதையில் பயணிக்கும் மாணவர்களுக்கு அவர்களின் இலட்சியப் பாதையில் வெற்றிநடைபோட இது வழிவகுக்கும் என்பது எனது நம்பிக்கை.

கற்பித்தல் என்பது தியாகம், அர்ப்பணிப்பு சேவைமனப்பாங்கு என்ற பண்புகளோடு செய்யப்படவேண்டிய ஒன்றாகும். இப்பணியை செய்பவர்கள் ஆசிரியர்கள். ஆனால் மாணவர்களின் கற்றல் விளைவு என்பது ஆசிரியர், மாணவர், பெற்றோர். அவனது சூழல் என்பற்றில் தங்கியுள்ளது. மாணவர்கள் தங்களது நேரத்தை முதலீடு செய்து தியாகத்தோடும் இலக்கை அடையும் வேட்கையோடும் கற்றலில் ஈடுபடவேண்டும் இல்லையென்றால் மாணவர்கள் தாம் எதிர்பார்க்கும் இலக்கை அடைவது சாத்தியமற்றதாகிவிடும்.

எவ்வாறு கற்பது என்பது தொடர்பாக துறைசார் நிபுணர்களும், சர்வதேச தரம்வாய்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பல வழிமுறைகளை முன்வைத்துள்ளனர். அதில் முக்கியத்துவம் வாய்ந்ததும், பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுமாக SQ5R வழிமுறை காணப்படுகிறது.

## SQ5R வழிமுறை என்றால் என்ன ?

குறுகிய காலத்திற்குள் ஏராளமான விடயங்களைக் கற்பதற்கும், கற்ற விடயங்களை ஞாபகத்தில் வைத்திருப்பதற்குமான ஒரு சிறந்த வழிமுறையாக இதனைக்குறிப்பிடலாம். மொழியியல் ரீதியான சிந்தனைத் திறனை (Literary thinking skills) ஒருமாணவனில் விருத்தி செய்வதற்கு அதிக பங்களிப்பைச் செய்யும் ஓர் கற்றல் நுட்பமாக இம்முறையைக் குறிப்பிடலாம்.

மொழியியல்ரீதியான சிந்தனைத்திறன் எனும்போது அதில் மூன்று விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.


1. அறிவு (Knowledge)
2. புரிந்துகொள்ளல் (Comprehension)
3. பிரயோகித்தல் (Application)

ஒரு மாணவனைப் பொறுத்தமட்டில் தான் அறிந்தவற்றை ஞாபகத்தில் நிறுத்திவைக்க மொழியியல்ரீதியான சிந்தனைத் திறனைப்பயன்படுத்துவது அவசியமாகும். அதாவது

- ஒருவிடயத்தை முதலில் அறிதல் (Knowledge)
- அதை நன்றாக விளங்கிக்கொள்ளுதல் (Comprehension)
- அதனை தேவையான சந்தர்ப்பங்களில் பிரயோகித்தல் (Application)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆகிய மூன்று அம்சங்களும் நிறைவேறும்போது கற்கின்ற விடயம் ஞாபகத்தில் நிலைத்திருக்கும் என்பது ஆய்வு முடிவு.

SQ5R என்ற கற்றல் நுட்பத்தை பயன்படுத்தும் போது Literary thinking skills ஒருவரில் இலகுவாக விருத்தியடைகிறது. இக்கற்றல் முறை பிரான்சிஸ் றொபின்சன் (Francis Robinson) என்பவரால் ஓகியோ அரச பல்கலைக்கழகத்தில், கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டுக்காக வடிவமைக்கப்பட்ட SQ3R என்ற முறையிலிருந்து விரிவாக்கம் பெற்றது. இன்று SQ5R முறை விளக்கப்படாத; எவ்வாறு கற்பது என்ற கருத்தரங்குகள் இல்லையென்று சொல்லும் அளவுக்கு இக்கற்றல் முறை மாறியிருப்பது கவனத்திற்குரிய விடயமாகும்.

இம்முறையில் காணப்படும் ஒவ்வொரு எழுத்துக் களினதும் விரிவாக்கத்தின் கருத்தை விளங்கிக்கொள்வதன் மூலம் SQ5R என்றால் என்ன என்பதனை விரிவாக பார்க்கலாம்.

1. S – Survey தேடி ஆராய்தல்
2. Q – Question வினாத் தொடுத்தல்
3. 5R –

1. R – Reading வாசித்தல்
2. R - Record பதிவு செய்தல்
3. R - Recite உரத்து வாசித்து மீட்டல்
4. R - Reflect கற்றதை பிரதிபலித்தல்
5. R – Review கணிப்பிடலும் மீட்டலும்

S – Survey தேடி ஆராய்தல்

ஒரு விடயத்தைப் படிக்கும் முன் ஒரு மாணவன் தான் வாசிக்கப்போகும் விடயம் தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய ஒரு முன் ஆய்வு என இதனைக் குறிப்பிடலாம். குறித்த நேரத்தில் தான் படிக்கப்போகும் அத்தியாயம் எது அதன் உள்ளடக்கம் என்ன, பொதுவாக அந்த அத்தியாயம் எதனைச் சொல்ல வருகிறது என்பன போன்ற அம்சங்களை அறிந்து தனது சிந்தனைப்பரப்பை குறித்த அத்தியாயத்தினுள் விசாலமாகப் பிரயோகிப்பதற்கான சந்தர்ப்பத்தை இவ்வாய்வின் மூலம் மாணவன் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் முன் ஆய்வின்போது கவனிக்கத்தக்க அம்சங்களாக பின்வரும் விடயங்கள் அமைகின்றன.

- வாசிக்க முற்படும் விடயம்
- வாசிக்க வேண்டிய பக்கங்களின் எண்ணிக்கை
- குறிப்பிட்ட அத்தியாயத்தின் அறிமுகத் தலைப்பு
- Key Words
- பாடத்தில் வரக்கூடிய வரைபுகள் அட்டவணைகள்
- பாடத்தின் முடிவில் கொடுக்கப்படும் சுருக்கம், கேள்விகள்.
- தடித்த (Bold) சாய்வான (Italic) எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள்.
- பிரதான (Main) மற்றும் உப (Sub) தலைப்புகளின் கீழ்வரக்கூடிய பந்திகளின் ஆரம்ப மற்றும் கடைசிப் பகுதிகள்.

இந்த அம்சங்களை அவதானித்து தான்படிக்கப்போகும் விடயம்பற்றிய தெளிவைப்பெற்றுக்கொள்ள இந்த தேடி ஆய்தல் துணை செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Q – Question வினாத் தொடுத்தல்

ஒரு பாடத்தை வெறுமனே வாசிப்பதற்கும் குறித்த ஒரு கேள்விக்கு விடைகாணும் நோக்கில் வாசிப்பதற்கும் நிறையவே வேறுபாடுகள் காணப்படுகின்றன. எப்பொழுதும் ஒரு கேள்விக்கு விடைகாண வேண்டும் என்ற நோக்கில் குறிப்பிட்ட பாடத்தை வாசிக்கும்போது வாசிப்பவரின் கவனம், சிந்தனை என்பன சிதறாமல் ஓரிடத்தில் குவிக்கப் படுகின்றன.

அந்தவகையில் குறித்த பாடத்தை ஆரம்பிக்கு முன் சில வினாக்கள் கேட்டுக்கொள்வது பயன்மிக்கது.

**எப்படியான வினாக்களை எவ்வாறு வினவுவது?**

பாடத்தின் பிரதான தலைப்பையும் அதில் வரக்கூடிய உபதலைப்புகளையும் வினாக்களாக மாற்றிக் கொள்ளலாம். இவற்றை வினாக்களாக மாற்றுவதற்கு அவற்றின் ஆரம் பத்திலோ இறுதியிலோ யார் ? என்ன? எப்போது ? எங்கே? ஏன்? எப்படி? எவ்வாறு? எவை? எத்தனை? போன்ற வினாக்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

இவ்வினாக்கள் அனைத்தும், நீங்கள் குறிப்பிட்ட பாடத்தை வாசிப்பதன் மூலம் என்ன தகவலை பெறவேண்டும் என்பதைத் தீரமானித்துக்கொள்ளவும், அத்தியாத்தின் எப் பகுதியில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற சிந்தனை யையும் தருகின்றது. தவிரவும் உங்களுடைய உள்ளம் அடுத்த கட்டநடவடிக்கையான வாசிப்பை மேற்கொள்வதற்கான முன் தயாரிப்பை செய்துகொள்ளும் அதே சமயம் பாடத்தை கிரகித்துக்கொள்வதற்கும் துணையாக அமைகின்றது.

## 5R

1. R – Reading வாசித்தல் வினாக்களை எழுதிக் கொண்ட தன் பின்னர் அடுத்த கட்டமாக வாசிப்பில் இறங்க வேண்டும். இதன்போது முழுப்பாடத்தையும் எழுத் தெண்ணி ஒவ்வொரு சொல் அல்லது வசனமாக வாசிக்கவேண்டிய அவசியமில்லை ஆரம்பத்தில் எழுதிக்கொண்ட வினாக்களுக்கு விடைகாணத் தேவை யான அளவு வேகமாக வாசித்தல் போதுமானது. வேகமாக வாசிப்பது வினாக்களுக்கு விடைகாணத் துணைசெய்யவில்லை எனக்கண்டால் மெதுவாக வாசித்தல் சிறந்தது.

2. R - Record பதிவு செய்தல் :- வாசிக்கும்போது உங்களது வினாக்களுக்கு விடையளிக்கத் தேவையான அல்லது முக்கியமான குறிப்புகள் என்று நீங்கள் கருதுகின்ற விடயங்களை உங்கள் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொள்ளுங்கள். சில முக்கிய தகவல்கள் நீண்ட வச னங்களாகவோ , பெரிய பந்தியாகவோ அல்லது கடின மான செற்களைக் கொண்டதாகவோ காணப்படலாம். அவற்றை உங்களுக்கு விளங்கக் கூடிய சொந்த மொழிநடையில் எழுதிக்கொள்ளுங்கள்.

3. R - Recite உரத்து வாசித்து மீட்டல்:- பாடத்தின் ஒருபக்கத்தை அல்லது ஒரு பகுதியை வாசித்து முடித்த பின் தொடர்ந்தும் வாசிப்பதை நிறுத்தி விட்டு , நீங்கள் பதிவு செய்துகொண்ட விடையை அல்லது முக்கிய குறிப்புகளை குறிப்புப் புத்தகத்தை பார்க்காமல் சப்த மிட்டு சொல்லிப்பாருங்கள் அவை மனனமாகும்வரை மீண்டும் மீண்டும் சொல்வது பயன்தரும்.

4. R - Reflect கற்றதை பிரயோகித்தல் :- இதன்போது சில வினாக்களை உங்களுக்குள் வினவிக்கொள்ளுங்கள். நான் வாசித்த விடயங்கள் எத்தகைய முக்கியத்துவம் வாய்தவை? இதுபோன்ற அல்லது இதனோடு தொடர் பான தகவல்களை இதற்கு முன்னர் வாசித்துள்ளேனா? இத்தகவல்களை வேறு எங்கு எப்படிப்பிரயோகிக்கலாம்? உண்மையில் இவ்வினாக்களை ஒருவர் வினவும்போது அவர் பெற்றுக்கொண்ட தகவல்கள் ஞாபக சக்தியில் ஆழப்பதிவது மாத்திரமன்றி தேவையான இடங்களில், தேவைப்படும் சந்தர்பங்களில் விரைவாகப் பிரயோகிக்கக் கூடியனவாக மாறிவிடும்.

5. R – Review கணிப்பிடலும் மீட்டலும் :- ஆரம்பத்தில் கேட்டுக்கொண்ட கேள்விகளுக்கு குறிப்பு புத்தகத்தைப் பார்க்காமல் விடையளித்துப்பாருங்கள் எத்தனை வினாக்களுக்கு மிகச்சரியான விடையளிக்கமுடிந்தது. என்பதை கணிப்பிட்டுக்கொள்ளுங்கள். விடையளிக்க முடியாதுபோன கேள்விகளுக்கு பதிவு செய்துகொண்ட குறிப்புகளைப்பார்த்து விடையளியுங்கள். அவ்விடைக் குறிப்புகள் மனனமாகும்வரை உரத்த குரலில் மீண்டும் மீண்டும் பலதடவை சொல்லிப்பாருங்கள். (Recite) மீண்டும் ஒருமுறை Review செய்து பாருங்கள்.

உண்மையில் SQ5R வழிமுறை என்பது கற்பதற்கு மிகப் பொருத்தமானதும், இன்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற ஒரு முறையாகவும் காணப்படுகின்றது. நீங்களும் பிரயோகித்துப் பாருங்கள். உங்களது இன்றைய இலட்சியக் கனவுகள் நாளைய நிஜங்களாக மாறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்பித்தல் துணை சாதனங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தும் முறையியல்கள்

அபூபக்கர் கலீல்
[illegible]
[illegible]

## அறிமுகம்

கற்பித்தல் துணைச்சாதனங்கள் கற்பித்தல் செயன்முறையில் பெரும் பங்கு வகிக்கின்றன கற்பித்தலை வினைத்திறனுடையதாக மாற்றுவதற்கு இவற்றின் தேவை மிக அவசியமாகும். கற்றல் உபகரணங்கள் பற்றி குட் (Good) என்பார் 'கல்வியின் அகராதி' (Dictionary of Education) என்ற நூலில் 'கற்றல் செயன்முறையை ஊக்குவித்து முன்னெடுத்து செல்வதற்கான பொருட்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக எந்த பாடத்தை கற்பிப்பதாயினும் கற்றல் சாதனங்களின் பயன்பாடு தவிர்க்க முடியததாகும். கற்பித்தல் துணைச்சாதனங்கள் பண்டைய காலத்திலிருந்து பயன்படுத்தப்பட்டிருப்பதை வரலாறுகளினூடாக அறியமுடிகிறது. இவை கால ஓட்டத்தில் பல்வேறு பரிமாணங்களை பெற்றிருப்பதை காணலாம். இன்றைய நவீன உலகின் தொழில் நுட்பத்துடன் தொடர்புபட்ட அம்சங்களாக இவை காணப்படுகின்றன.

கற்றல் கற்பித்தல் துணைச் சாதனங்களின் பட்டியல் கரும்பலகை, பட அட்டைகள், மாதிரி பொருட்கள், பாட நூல்கள், ஒலி, ஒளி கருவி, ஒளிப்பதிவு நாடாக்கள் தொலைக் காட்சி, வானொலி, பல்லூடக கருவி (Multimedia) என்று நீண்டு செல்வதை காணலாம்.

இச்சாதனங்களை ஆசிரியர் சரியான முறையில் பயன்படுத்தும் போது கற்றல் கற்பித்தலை சிறப்பாக மேற்கொள்ள முடியும். இதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் துணைச் சாதனங்களை ஆசிரியர் கையாள வேண்டிய வழிமுறைகளை முக்கியமான கற்பித்தல் துணை சாதனங்களோடு தொடர்படுத்தி நோக்குவோம்.

## கரும்பலகையை பயன்படுத்தல்

கற்றல் கற்பித்தல் துணை சாதனங்களில் மிகப்பிரபல்யமானதும் பழங்காலத்திலிருந்து இன்று வரை பயன்படுத்தப்படும் ஒரு சாதனமாகவும் கரும்பலகை காணப்படுகிறது. குறைந்த செலவில் உருவாக்கப்படக் கூடிய இது எல்லா பாடசாலை வகுப்பறைகளிலும் காணப்படுகிறது. இன்றைய கால கட்டத்தில் நவீன கற்பித்தல் துணைசாதனங்கள் எவ்வளவு போதிலும் கரும்பலகையின் பாவனையும் குறிப்பிட்ட அளவு உள்ளதை எவராலும் மறுக்க முடியாது.



கரும்பலகை இன்று பல்வேறு வடிவங்களை எடுத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. உதாரணமாக வெண் பலகை (White Board), பச்சைப் பலகை (Green Board) போன்றவற்றை குறிப்பிடலாம்.

- கரும்பலகையை பயன்படுத்துவதற்கு முன்னர் அது பற்றிய முக்கிய அம்சங்களை அறிந்து அவற்றை கடைப்பிடிப்பது ஆசிரியரின் கடப்பாடு ஆகும். இவை பல ஆசிரியர்களால் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என்பது மனவருத்தத்திற்குரிய விடயமாகும்.
- கரும்பலகையை பயன்படுத்தும் போது ஆசிரியர் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்களாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.
- வகுப்பறையிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் தெளிவாக தெரியக்கூடிய இடத்தில் கரும்பலகையை வைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கரும்பலகையை பயன்படுத்த முன் அதனை சுத்தப் படுத்த வேண்டும். சில வேளைகளில் கரும்பலகை சுத்தப்படுத்தப்படாத நிலையில் முன்பு எழுதப்பட்ட விடயங்கள் அப்படியே இருக்க பின்னர் கற்பிக்கும் ஆசிரியரும் அதில் எழுதும் போது மாணவர்களுக்கு சில முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. முன்னைய சில எழுத்துக்கள் அல்லது சில புள்ளிகள் ஆசிரியர் எழுதுவதன் கருப் பொருளையே மாற்றி விடலாம்.
- பார்ப்பதற்கு தடையாக பிரகாசிக்கும் இடங்களுடையதாக கரும்பலகை இருக்க கூடாது. கரும்பலகையில் ஒளி தெறிப்படைவதன் மூலம் மாணவர்களுக்கு கரும்பலகையில் எழுதியவற்றை விளங்காமல் போகலாம். எனவே இவ்வாறான இடத்தை தவிர்த்து கரும் பலகையை வைக்கலாம்.
- மாணவர்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் உயரம் குறைந்த கரும்பலகை இருக்க வேண்டும். அப்போது தான் மாணவர்கள் கரும்பலகையை பயன்படுத்தி சில பயிற்சிகளை செய்து காட்டக்கூடியதாக இருக்கும். ஆனால் பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாத்திரம் கரும்பலகையை பயன்படுத்துவதும் மாணவர்கள் அதை பயன்படுத்துவது குறைவான நிலையின்மை நிலையே காணப்படுகிறது.
- நிறக்கட்டிகளையும் தேவையான சந்தர்ப்பங்களிலும் பாவிக்க வேண்டும். வெண்கட்டிகளே கரும்பலகையில் அதிகம் பாவிக்கப்படுகின்றன. ஆனால் நிறக்கட்டிகளை தேவையின் போது பயன்படுத்துவதனால் மாணவர் களுக்கு கற்பித்தலில் ஆர்வத்தை தூண்டுவதுடன் சரியான விளக்கத்தை வழங்கலாம். உதாரணமாக: உயிரியல் பாடம் கற்பிக்கும் போது வரை படம் ஒன்றை கரும்பலகையில் வரையும் சந்தர்ப்பத்தில் அப்படத்தின் ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியே பிரித்துக்காட்ட வெவ்வேறு நிறக்கட்டிகளை பயன்படுத்தினால் கற்றல் கற்பித்தல் விளைத்திறன் உடையதாக அமையும்.
- கரும்பலகையில் எழுதுவதை எல்லா மாணவர்களும் பார்க்கக் கூடியதாக பெரிதாக எழுத வேண்டும். சிறிதாக எழுதும் போது பின்வரிசையில் உள்ள மாணவர்களுக்கு அது விளங்காமல் போகலாம்.
- எழுதுவதை சரியாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும். எழுத்துப் பிழைகள் அற்றதாகவும் மாணவர்களுக்கு சரியாக விளங்கக் கூடிய வகையில் எழுத வேண்டும்.
- முக்கியமான விடயங்களை மாத்திரம் கரும்பலகையில் எழுத வேண்டும். எல்லா விடயங்களையும் கரும் பலகையில் எழுதிக் கொண்டிருக்காமல் வலியுறுத்திக் கூற வேண்டிய முக்கியமான விடயங்களை மட்டும் கரும்பலகையில் எழுத வேண்டும்.
- கரும்பலகையை முறையாகப் பயன்படுத்த வேண்டும். கரும்பலகையில் எல்லா இடங்களிலும் ஒழுங்கற்ற விதத்தில் எழுதாமல் ஒரு ஓரமாக மேலிருந்து கீழாக ஒரு முறையியலின் அடிப்படையில் எழுத வேண்டும்.
- கரும்பலகைப் பயன்பாட்டுக்குத் தேவையான வெண் கட்டி, நிறக்கட்டி, அழிப்பான், அடிமட்டம், கோணம் போன்றவற்றை நேரத்துடன் தயார்படுத்தல் வேண்டும்.
- மாணவர்களும் கரும்பலகையில் சில விடயங்களை குறித்துக் காட்டுவதற்கு இடம் வழங்க வேண்டும். உதாரணமாக தேசப்படத்தின் சில முக்கிய விடயங்களை மாணவர்கள் குறித்துக்காட்டல், விளக்கங்களில் அங்கங் களைக் குறித்துக்காட்டல் போன்றவற்றைக் குறிப் பிடலாம்.

பொதுவாக கரும்பலகையைப் பயன்படுத்தும் போது சில விடயங்களை ஆசிரியர் தவிர்ந்து கொள்வது அவசிய மாகும். அவ்வாறான விடயங்களை பின்வருமாறு அடை யாளப்படுத்தலாம்.

- எழுதிக் கொண்டு கதைத்தல்.
- கரும்பலகையை மறைத்துக் கொண்டு எழுதுதல் மற்றும் விளக்குதல்.
- கரும்பலகையில் எழுத நீண்ட நேரம் எடுத்தல்.
- எல்லா இடங்களிலும் ஒழுங்கற்ற விதத்தில் எழுதுதல்.
- கரும்பலகையை கையால் அழித்தல்.

ஆசிரியர் கரும்பலகையைப் பயன்படுத்தும் போது மேலுள்ள முக்கிய அம்சங்களை கருத்திற் கொண்டு செயற் படும் போது கரும்பலகைப் பயன்பாடு பயனுடையதாக மாறும்.

பாட நூல்



கற்றல் கற்பித்தலில் பாட நூல்களும் பெரும் பங்கு வகிக்கின்றன. அகர்வால் ஜே.சி என்பவர் "உலகம் அறிவைக் காலவரிசைப்படுத்தி பாதுகாப்பதுடன் அறிவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்துவிக்கவும் பயன்படுத்தும் ஒரு உபகரணமே பாட நூலாகும்" என்று கூறியுள்ளார்.

மாணவர்களின் சுய கற்றலைத் தூண்டவும், வீட்டு வேலைகளை வழங்குவதற்கும் பாடநூல்கள் பெரிதும் உதவுகின்றன. வகுப்பறையில் எல்லா மாணவர்களிடமும் காணப்படும் ஒரு சாதனமாகவும் பாட நூல் காணப்படும். ஆசிரியர்களுக்கு பாடம் தொடர்பான பல வேறு தகவல்களை வழங்கும் சாதனமாகவும் அது காணப்படுகின்றது.

ஆசிரியர்கள் பாட நூல்களைப் பயன்படுத்தும் போது அதனை வாசித்து முன்னாயத்தத்துடன் செல்லுதல், அச்சுப் பிழைகளை கவனத்திற் கொள்ளுதல், பாட நூல்களில் காணப்படும் பொருத்தப்பாடுகளை மேற் கொள்வதற்கு மாணவர் களுக்கு வழிகாட்டுதல், கற்பிக்கும் அம்சங்களை முடிந்தளவு பாட நூலில் காணப்படும் அம்சங்களுடன் தொடர்பு படுத்தல், பாடநூலில் உள்ள பயிற்சிகளை செய்வதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்தல் போன்ற விடயங்களை கவனத்திற் கொள்வது அவசியமாகும்.

### ஒட்டுப் பலகை

பட அட்டைகளை ஒட்டி காட்சிப்படுத்தி கற்பிப்பதற்கு இது உதவுகிறது. பொருத்தமான சந்தர்ப்பங்களில் படங்களை காட்சிப்படுத்த இது அவசியப்படுகிறது. விஞ்ஞானம், புவியியல் போன்ற பாடங்களில் காணப்படும் படங்களை வரைந்து ஒட்டி காட்சிப்படுத்தி விளக்குவதற்கு இது பொருத்தமான தொரு சாதனமாகும்.

### மாதிரி உருக்கள்

மாணவர்களுக்கு நேரடியான அனுபவத்தை பெருமளவு வழங்குவதற்கு மாதிரி உருக்கள் பெரிதும் உதவுகின்றன. குறிப்பாக விஞ்ஞானம், சமூகக்கல்வி, புவியியல் போன்ற பாடங்களில் இதன் பயன்பாடு அவசியமாகும். உதாரணமாக புவியின் மாதிரி அமைப்பான பூகோளம் புவி கோள வடிவமானது என்பதை விளக்கவும் புவிச் சுற்றுகையை மாணவர்களுக்கு விளக்கப்படுத்தவும் மிகப் பொருத்தமான சாதனமாக இருப்பதை இங்கு குறிப்பிடலாம்.

### படங்கள், வரைபுகள், தேசப்படங்கள்

படங்கள் மாணவர்களுக்கு மேலதிகமான விளக்கத் தினை வழங்குவதுடன் வாயினால் கூறுவதைவிட பார்ப்பத னூடாக அதிகளவு பதிவினையும் வழங்கும். சித்திரப் பாடம் போன்றவற்றுக்கு இது மிகப்பொருத்தமானதாகும். புவியியல் போன்ற பாடங்களுக்கு தேசப்படங்கள் இன்றியமை யாதவையாகும். வரைபுகளினூடாக பல ஆண்டுகளில் தொடராக இடம்பெற்றுள்ள அதிகரிப்பு, குறைவு என்பவற்றை சிறப்பாக விளக்கமுடியும்.

### கணனி (Computer)

நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்களில் கணினி மிக முக்கியமானதொரு சாதனமாகும். இதனைப் பயன்படுத்தி ஆரம்பநிலை மாணவர்கள் தொடக்கம் உயர்நிலை மாணவர்கள் வரை கற்பிக்க முடியும். ஆரம்ப நிலை மாணவர்களுக்குப் பொருத்தமான உருவங்கள், காட்சிகள் என்பனவற்றை கணினி மூலம் உருவாக்கி பல்லூடகக் கருவியின் (Multi media) ஊடாக காட்டி கற்பிக்க முடியும். உயர்நிலை மாணவர் களுக்கு Power Point presentation கணினியின் மூலம் உருவாக்கி கற்பிக்க முடியும். இதேபோல கணினியைப் பயன்படுத்தி பயிற்சித்தாள் (Work Sheet) படிவங்கள், குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல் படிவங்கள், சொல் அட்டை கள் போன்றவற்றையும் கவர்ச்சிகரமாக உருவாக்கி கற்பிக்க முடியும்.

### மேந்தலை எறிவி (Over- head projector)



நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்களில் மேந்தலை எறிவி முக்கியமானதாகக் காணப்படுகின்றது. வகுப்பறைக் கற்பித்தலை கவர்ச்சிகரமாக மாற்றி மாணவர்களை கற்றலில் ஊக்கப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான ஒரு சாதனமாக இதைக் குறிப்பிடலாம்.

மேந்தலை எறிவியின் மூலம் வரைபுகள், படங்கள் போன்றவற்றை காட்சிப்படுத்தி மாணவர்களுக்கு விளக்கம் வழங்கலாம். ஆனால் இதன் மூலம் ஒலியை வெளியிடுக்க முடியாது.

### பல்லூடகக் கருவி (Multi media)

இன்றைய காலகட்டத்தின் மிக நவீன கற்பித்தல் சாதனமாக பல்லூடகக் கருவி காணப்படுகின்றது. இதன் மூலம் படக்காட்சிகளை நேரடியாகக் காண்பித்து மாணவர்களை கற்றலில் ஊக்கப்படுத்தலாம்.

உதாரணமாக சுனாமி, வெள்ளம், சூறாவளி, பூகம்பம் போன்ற இயற்கை அழிவு காட்சிகளை நேரடியாக மாணவர் களுக்கு இதன் மூலம் காண்பித்து கற்றலை விளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனுடையதாக மாற்றலாம். சமய பாடங்களில் கூட வணக்க வழிபாட்டு முறைகளை இதனூடாக மாணவர்களுக்கு காண்பித்து இலகுவாக விளக்க முடியும்.

பல்லூடகக்கருவியின் மூலம் படங்களை பார்ப்பது மாத்திரமன்றி ஒலியையும் கேட்க முடியும்.இது கற்றல் கற்பித்தலை இன்னும் வினைத்திறனுடையதாக மாற்றும்.

உயர்தர மாணவர்களுக்கு இதனைக் கொண்டு (power point presentation) ஊடாக கற்றல் கற்பித்தலை கவர்ச்சிகர மாகவும் இலகுவாகவும் மேற் கொள்ள முடியும்.

இன்று உயர் கல்வி நிறுவனங்களிலும் பல்கலைக்கழகங் களிலும் இதன் பயன்பாடு அதிகளவில் உள்ள போதிலும் பாடசாலைகளில் குறைந்தளவே காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணமாக இக்கருவி எல்லாப் பாடசாலைகளிலும் இல்லாமல் இருப்பதைக் குறிப்பிடலாம்.

## ஏனைய சாதனங்கள்

செருகல் அட்டை டிமை தாள், வெண்கட்டி, கலர்கட்டி, காந்தப்பலகை (Magnet Board), பக்கப்புரட்டி, ஜீன்ஸ் குற்றிகள் போன்ற பல்வேறு கற்பித்தல் சாதனங்களும் வகுப்பறைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இவை பெரும்பாலும் ஆரம்ப, இடைநிலை வகுப்புக்களுக்கு பயன்படுத்தப்படுவதுடன் இவற்றில் சில உயர்நிலை வகுப்புக்களுக்கும் பயன்படுத்தப் படுகின்றன.

## கற்பித்தல் சாதனங்கள் தொடர்பாக கவனிக்க வேண்டியவை

கற்றல் கற்பித்தல் சாதனங்களைத் தெரிவு செய்து பயன்படுத்தும் போது ஆசிரியர் பின்வரும் அம்சங்களை கருத்திற் கொள்வது அவசியமாகும்.

- பாட நோக்கத்தை சரியாக அடைந்து கொள்ள உதவும் சாதனங்களை தெரிவு செய்தல்.
- மாணவர்களின் வயது தரம் நடத்தைகள் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு சாதனங்களைத் தெரிவுசெய்தல்.
- கற்றல் கற்பித்தல் சாதனங்களை மாணவர்களும் கையாளக் கூடியதாக இருத்தல்.
- கற்பித்தல் சாதனங்களை தயாரிக்கும் போது மாணவர் களது ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொள்ளுதல்.
- பொருத்தமான சந்தர்ப்பங்களில் கற்றல் கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்துதல்.
- எல்லா மாணவர்களும் கற்பித்தல் சாதனங்களினூடாக கற்றலை விருத்தி செய்யும் சூழலை உருவாக்குதல்.
- சாதனங்களைப் பயன்படுத்த முன் அதுபற்றிய பூரண விளக்கத்தை ஆசிரியர் அறிந்து கொள்வது மிக முக்கிய மாகும்.

## முடிவுரை

பல்வேறு கற்றல் கற்பித்தல் சாதனங்கள் காணப்பட்ட போதிலும் எல்லாப்பாடங்களுக்கும் எல்லாவிதமான சாதனங் களையும் பயன்படுத்தமுடியாது. அதேவேளை எல்லா வகுப்புக்களுக்கும் எல்லா சாதனங்களும் பொருந்தாது. எனவே இந்த விடயத்தில் ஆசிரியர் மிகுந்த கவனம் செலுத் துவது அவசியமாகும். மரபுமுறை கற்பித்தல் சாதனங் களையே தற்போதைய நவீன காலத்திலும் அதிகம் பயன் படுத்தும் நிலையிலிருந்து ஆசிரியர்கள் விடுபட்டு அவற்றோடு புதிய கற்பித்தல் சாதனங்களையும் பயன்படுத்த வேண்டும் அப்போதுதான் தற்காலத்திற்கு ஏற்ப மாணவர்களை கற்றலில் ஊக்கப்படுத்தமுடியும். சில வேளைகளில் நவீன சாதனங் களை ஆசிரியர்களுக்கு பயன்படுத்த தெரியாத சந்தர்ப்பத்தில் அவற்றை பயன்படுத்துவதற்கு கற்றுக்கொள்வதும் அவசிய மாகும்.

சிறந்த கற்றல் கற்பித்தலை மேற்கொள்வதற்கு சிறந்த கற்றல் கற்பித்தல் சாதனங்களை பயன்படுத்துவது அவசியம் என்பதனை ஆசிரியர்கள் உணர்ந்து, பாடங்களுக்கு பொருத்த மான துணைச்சாதனங்களைப் பயன்படுத்தி கற்பித்தலை மேற்கொள்வது அவசியமாகும்.

## உசாத்துணைகள்


1. பக்கீர் ஜஃபார்.ப.கா. (2007) "வெற்றிகரமான வகுப்பறைக் கற்பித்தல்-பாடத்தைத் திட்டமிடல்" ஸெய்னப் பதிப்பகம், தெஹிவளை.
2. இலங்கை திறந்த பல்கலைக்கழகம், (2003) "கல்வித் தொழி நுட்பம் தொகுதி-1 கற்பித்தல் பொதுமுறைகள்" கல்விபீடம் இ.தி.ப., நாவல நுகெகொட.
3. இலங்கை திறந்த பல்கலைக்கழகம, (2003) "கல்வித் தொழி நுட்பம் தொகுதி-11 விசேட முறைகள்" கல்விபீடம் இ.தி.ப., நாவல நுகெகொட.
4. மன்சூர்.எம்.கே.எம், (2005) "கல்வித் தத்துவங்கள்" mans ink, இலங்கை.
5. பாலசுப்ரமணியம் .த., "கற்பிக்கும் கலை புதிய பிரவேசங்கள்", யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய கல்விபற்றிய சில சிந்தனைகள்

தகைசால் பேராசிரியர் ச. தில்லைநாதன்

குழந்தை ஒன்று பிறக்கும் போது அதன் எதிர்காலம் குறித்துப் பெற்றோர் பலவாறாகக் கனவு காண்கிறார்கள். அக் குழந்தையின் வாழ்வு தமது வாழ்வைக் காட்டிலும் சிறந்ததாக அமைய வேண்டும் என்றும், தமக்குக் கிடைத்தவற்றைவிட மிகுதியான வசதிகள் அதற்கு வாய்க்க வேண்டும் என்றும் தாங்கள் கருதிய காரியங்களை அக்குழந்தை வளர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றும் உயர்ந்த நிலையினை அது எய்தவேண்டும் என்றும் அவர்கள் ஆசைப்படுகிறார்கள். நிற, மத, மொழி, பிரதேச வேறுபாடின்றி ஏழைகளும் பணக்காரர்களும் நாட்டவரும் நகரத்தாரும் அவ்வாறு ஆசைப்படுவதை அவதானிக்கலாம். குழந்தை கருவில் இருக்கும்போதே தாய் அத்தகைய சிந்தனைகளுக்கும் ஆசைக் கனவுகளுக்கும் ஆட்படுகின்றாள்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் - தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்றார் திருவள்ளுவர்.

தன்மகன் கல்வி கேள்விகளால் நிறைவுடையவன் என்று பிறர் சொல்லக் கேட்பதே ஒரு தாயின் தலையாய விருப்பமாகும். குழந்தையின் வாழ்வு சிறக்க வேண்டிப் பல வழிபாடுகளையும் தாய் தந்தையர் இயற்றுவதுண்டு.

"தங்க மதலைகள் ஈன்றமுது ஊட்டித்
தழுவிய திந்நாடே — மக்கள்
துங்க முயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்தது இந்நாடே"

என்று மகாகவி பாரதியார் பாடியதன் தாற்பரியமும் எண்ணிப் பார்க்கத் தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் நலம்குறித்த கவனம் பண்டைக்காலக் குடும்பங்களைப் பிணைத்துவைத்திருந்தமை குறித்து நாகரிகத்தின் தோற்றுவாய் பற்றிய தமது நூலிலே சேர். ஜி.எலியட் ஸ்மித் குறிப்பிடுகிறார். பிள்ளைகளின் பொருட்டு இயலக்கூடிய அனைத்தையும் செய்வதில் அன்றைய பெற்றோரைக் காட்டிலும் இன்றைய பெற்றோர் கூடிய கரிச னையுடையவர்களாக விளங்குகின்றனர் என்றே கூற வேண்டும். இன்றைய சமூகம் குழந்தையை மையமாகக் கொண்டது என்றும் சமூகவியலாளர் பலர் குறிப்பிடுவர்.

அதனை விளங்கிக்கொள்ள வேண்டும் எனின், பிள்ளை களின் மேன்மை கருதி இன்று பல பெற்றோர் மேற்கொள்ளும் பிரயத்தனங்களைப் பார்க்க வேண்டும். பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு அவசியமானவற்றுள் முதன்மையான தாகக் கருதப்படுவது கல்வியாகும். பிள்ளைகளுடைய கல்வி வசதிக்கென்று நகரங்களையும் பிற நாடுகளையும் நோக்கிய புலப்பெயர்ச்சிகள் நடைபெறுகின்றன. அதற்குத் தோதான வகையில் குடும்ப, பொருளாதார சமுதாய வாழ்க்கைத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் தங்கள் பிள்ளைகள் எப்படி இருக்கவேண்டுமென்று தாய் தந்தையர் விரும்புகின்றனர் என்பது குறித்தும் எண்ணிப் பாராதிருத்தல் சாலாது. சான்றோர் என்ற பாராட்டைப் பிரதானமாகக் கருதுவோரை இன்று தேடுவதிற்கில்லை. தம்பிள்ளைகள் நிறையப் பொருள் சம்பாதிக்க வேண்டும், போட்டியிடுவோர் அனைவரையும் வெற்றிகொள்ள வேண்டும், ஏனையவர் களைப் பார்க்கிலும் உயர்ந்த அந்தஸ்தை அடைய வேண்டும் என்றே அனேகமான பெற்றோர் ஆசைப்படுகின்றனர்.

அந்த ஆசை நிறைவேற வேண்டும் என்றால் பிள்ளைகள் பல போட்டிப் பரீட்சைகளில் சிறப்பாக சித்தியடைய வேண்டி யுள்ளது. பரீட்சைகளிற் பலபேரை முந்த வேண்டிய தேவை முனைப்பாக இருப்பதால் பாடசாலைப் படிப்புடன் நின்று விடாது தனியார் போதனை நிலையங்களை நாடுகின்றனர். அத்தகைய போதனை நிலையங்களுக்கான தேவை பெருக, அவையும் பல்கிப் பெருகியுள்ளன. அவற்றின் நிறைகுறை பற்றிய விரிவான ஆராய்ச்சியை விடுத்துச் சில அவதானிப் புக்களை மட்டும் குறிப்பிடல் சாலும், பரீட்சை போன்ற குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட ஒரு விடயத்தை வெளிக்கொணர்வதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்ட போதனை முறை மனப்பாடம் செய்தலுக்கே முக்கியத்துவம் தருவதாகிறது. தேவைக்கு மிஞ்சிய பாடக் குறிப்புக்கள் அவசர அவசரமாக வழங்கப்படுவதையும் அவை கிரகிக்கப் படாது எழுதப்பட்டுப் பொருளுணராது மனப்பாடம் செய்யப் படுவதையும் அவதானிக்கலாம். மாணவர்கள் உள்ளத்தில் உண்மை ஒளி பெறாது பாடக்குறிப்புக்களால் நிரப்பப்படும் பாத்திரங்கள் போலாகின்றன.

நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமானதேயாயினும் அதுவே கற்றலைப் பூரணப் படுத்துவதாகாது. நினைவாற்றலைத் தக்கவாறு பிரயோகிக்கத் தெரியாதவிடத்து அதனால் அதிக பயனில்லை. சுதந்திர சிந்தனை ஆற்றலையும் ஆளுமையையும் அனுபவத்தையும் வாழ்க்கை விளக்கத்தையும் வளர்க்க உதவும் வாசிப்புக்கும் நேரம் கிடைப்பதில்லை. கற்பதற்குரியவை குறிப்புக்களாகவே தரப்படுவதால் நூல்நிலையங்கள் தக்கவாறு பயன்படுத்தப் படுவதில்லை. பாடக்குறிப்புக்களை எழுதுவதிலும் உருப் போடுவதிலும் பரீட்சைக்குத் தயாராவதிலுமே காலம் கரைந்து விடுவதால் பண்பாட்டு நடவடிக்கைகளுக்கோ விளை யாட்டுக்களுக்கோ அவகாசமில்லை. மானிட உறவும் பரிவும் விழுமியங்களும் வளர்வதற்கு இந்நிலை குந்தகமாயுள்ள தென்கின்றனர்.

பரீட்சைகளுக்கேற்ற வகையில் தயாரிக்கப்பட்டு அவற்றில் கூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் பலர் உயர் கல்வி நிலையங்களுக்கு தெரியப்படுகிறார்கள். பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் பலர் விளக்கம் குறைந்தவர்களாகவும் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் அற்றவர்களாகவும் இருக்கிறார்கள். பல்கலைக்கழகங்களிலம் அவர்கள் பாடக்குறிப்புக்களையே மிகுதியாக எதிர்பார்க் கிறார்கள். வலிய முயற்சிகளை மேற்கொண்டு அறிவைப் பெருக்கும் ஆர்வம் வெகு சிலரிடத்தில் மட்டுமே காணப் படுகிறது.

இந்நிலையில் கல்வியின் நோக்கம் குறித்தும் அது ஏன் வேண்டப்படுகிறது என்பது குறித்தும் எண்ணிப்பார்த்தல் பயனுடையதாகும். சுருக்கமாகக் கூறுவதெனில் உலகத் தோடொட்டி வாழவும் நல்முறையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு வேண்டிய ஒழுக்கங்களையும் ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்ளவும் உதவுவதாகக் கல்வி அமையவேண்டும். அத்தகைய கல்வியையே 'கேடில் விழுச்செல்வம்' என்று திருவள்ளவர் போற்றுகின்றார். கற்றவிடத்து அறிவு ஊற்றெடுக்கும் என்றும் அவ்வறிவு தீமைகளில் இருந்து காப்பாற்றி நன்மையின்பால் நம்மை உய்க்கும் என்றும் அவர் கூறுகிறார். அவ்வாறாயின் உண்மையையும் நன்மையையும் அழகினையும் பேணி வளர்க்க கல்வி உதவவேண்டும். நன்மையை நாடுவதென்றால் யாருடைய நன்மையை என்ற வினாவும் எளலாம். ஒருவன் தன் சுய நன்மையை நாடுவதாயினும் வாழும் சுற்றாடலையும் சமூகத்தையும் புறக்கணித்தவிடத்து அது வாய்க்காது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

பிறர்க்குப் பயன்பட வாழும் வாழ்வே உயர்ந்ததென்று மதிக்கப்படுகிறது. தாம் பெற்ற இன்பத்தை உலகமும் அனுபவிப்பதை விரும்புவது கற்றறிந்தார் இயல்பென்பர் வள்ளுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி அறனறிதல்
சான்றவர்க் கெல்லாங் கடன்"

என்ற கலித்தொகை அடிகளும் இங்கு நினைவு கூரத்தக்கவை. எனவே, கற்றவர்கள் தம் நடத்தையைச் சீராக்கிக் கொள்வதோடு உலக நன்மையை விழைபவர்களாகவும் விளங்குவர். உலக நன்மைக்கு அது இன்றியமையாதது என்று கருதப்படுவதனாலேதான் நாகரிகமடைந்த நாடுகள் யாவற்றிலும் கல்வி கட்டாயமானதாக்கப்பட்டுள்ளது. கல்வியில் நாடு முதலீடு செய்தால் அதன் பயன் நாட்டுக்கு ஏராளமாக வந்து சேர வேண்டும் என எதிர்பார்த்தல் இயல்பானதே. அதே வேளையில் தாயின்புறுவ துலகின்புறக்காணும்: ஆர்வம் உண்மையான கல்விப் பயிற்சியைத் தூண்டுவதாகும்.

உலக நன்மை கருதித் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் சமூகப்பிரக்ஞை வழக்கவும் பொறுப்புணர்ச்சி சிறக்கவும் கல்வி உதவுவதாகவேண்டும் என்பர். மானிலத் தலைப் போல்நிலை பரீட்சையில் சித்திபெற வேண்டும் என்ற வேட்கைக்கும் மத்தியில் நிறைய வேறுபாடு உண்டு. உலகினையும் மனித வாழ்வினையும் செவ்வனே புரிந்து கொள்ளும் ஆர்வத்தையும் வாழ்வையும் வளமுடையதாக்கும் விருப்பினையும் இளம் உள்ளங்களில் கல்வி தூண்டவே வேண்டும். இளமைப் பருவம் பல வல்லமைகளையும் வாய்ப்புக்களையும் கொண்டது. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து. இளங்கன்று பயமறியாது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பன போன்ற பழமொழிகளில் அர்த்தம் மிகுந்தவை. வளமான இளமைப் பருவத்தைக் குறிப்புக்கள் எடுப்பதிலும் மனப்பாடம் செய்வதிலும் மட்டும் முடிந்துவிடுவதா அல்லது அறிவுத் தேட்டத்திற்கும் சுதந்திர சிந்தனைக்கும் வருங்கால வாழ்க்கைக்குத் தயாராவதற்கும் பயன்படுத்துவதா என்று எண்ணிப்பார்த்தல் அவசியமாகும்.

உள்ளார்ந்த ஆற்றலும் செயற்பாடும் திறனும் மிகுந்த இளமைப் பருவத்தைத் தக்கவாறு பயன்படுத்திக்கொண்டால் எதிர்காலத்தில் மக்களின் தனிப்பட்ட வாழ்வும் சமுதாய வாழ்வும் விருத்தியடையவியலும் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுவதாகும். அத்தகைய விருத்திக்கு இன்றியமையாத பன்முக அறிவினை பிள்ளைகளிடத்து வளர்த்தல் பெற்றோரினால் இயலக்கூடியதல்ல என்பதனாலேயே கல்விக் கூடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. அவை முறையான திட்டமும் ஒழுங்கமைப்பும் உடையனவாதல் வேண்டும். எத்தகைய சமுதாயத்தை உருவாக்க விரும்புகிறோம் என்பதற்கு ஏற்றவகையில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். சமுதாய வாழ்வு பற்றிய ஒடுங்கியதொரு பார்வையினை உடையவனாய் இருந்த ஜேர்மனிய சர்வாதிகாரியான கிட்லர் தான் வகுத்துக்கொண்ட கற்பித்தல் முறையின் மூலமாக சிலக் குறுகிய காலப் பகுதியில்



தான் விரும்பியதொரு சமுதாயத்தினை உருவாக்கிக் கொண்டதை வரலாறு காட்டும். அதனால் விளைந்த அனர்த்தங்களின் வாயிலாக கிட்லரின் சமுதாயப் பார்வையின் குறைபாட்டை விளங்கிக் கொள்ள முடியும். ஆயினும் திட்டமிட்டதொரு கல்வி முறையின் மூலமாக விரும்பிய சமுதாயத்தை கட்டியெழுப்புவது என்பது சாத்தியம் ஆகும் என்பது கவனிக்கக் கூடியதாகும்.


கல்வித் திட்டங்களின் வெற்றி கற்பிக்கும் ஆசிரியரின் கையிலே பெரிதும் தங்கியுள்ளது. ஆசிரியர்கள் பிள்ளைகளை புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும் அவர்களது நலனின் ஆர்வம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். உயர்ந்த குறிக்கோள்களையும் அவற்றை எய்தும் ஆர்வத்தையும் நம்பிக்கையையும் மாணவர் உள்ளங்களில் ஆசிரியர் தங்கள் நடத்தையாலும் கற்பித்தலினாலும் தூண்டிவிடவேண்டும். சமுதாய உருவாக்கத்திற்கும் உயர்வுக்கும் அவர்கள் நல்கும் பங்களிப்போடு ஒப்பிடத்தக்க சமூக, பொருளாதார அந்தஸ்து ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுவதில்லை ஆயினும் அவர்களது பணியினை குறைத்து மதிப்பிட முடியாது.

தனியார் போதனை நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் உரையாற்றுவதோடும் குறிப்புக்களை தருவதோடும் நின்றுவிடுகிறார்கள். பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்களை அளிப்பதும் அவற்றிற்கான விடைகளைத் தயாரித்துத் தருவதும் அவர்களது திறமைகள் என்று கருதப்படுகிறது. ஆனால் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் அறிவு விருத்திக்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர்களாகவும் கற்பித்தலில் மாணவர்களோடு இருவழித் தொடர்பினை உடையவர்களாகவும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பாடசாலையின் ஆசிரியர் பாடம் சொல்லித் தருவார். மாணவர் அதைக் கேட்டுக் கிரகித்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். சொல்லித் தரப்படும் தகவல்களை மாணவர்கள் செவ்வனே புரிந்துகொள்கின்றனரா அல்லது புரிந்து கொள்வது போல் பாசாங்கு செய்கின்றனரா என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறுதிப்படுத்தும் பொறுப்பும் ஆசிரியருடையதாகும். போதிக்கப்பட்டவற்றை மாணவர்கள் எவ்வளவு தூரம் கிரகித்தும் நினைவில் வைத்தும் உள்ளனர் என்பதை அடிக்கடி பரீட்சிப்பதும் மதிப்பிடுவதும் கல்வி வளர்ச்சிக்கு உற்சாகமும் உறுதியும் அளிப்பதுமாகும். கல்வி திருப்திகரமாக நடைபெற இரு விடயங்கள் இன்றியமையாதனவாகும்.

1. ஆசிரியர் தாம் கற்பித்த விடயத்தை தெளிவாக அறிந்தவராகவும் தெளிவாக விளங்க வைப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
2. மாணவர் முன்னேற்றத்தைப் பரீட்சிக்கவும் அளவிடவும் பொருத்தமான வழிமுறைகள் கையாளப்பட வேண்டும்.

கல்வித் திட்டத்தைத் தயாரிக்கும் போது சமுதாயத்தின் தேவைகளும் பிள்ளைகளின் தேவைகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது. காலனித்து ஆட்சிக் காலத்தில் அரச நிர்வாகத்திற்கும் சேவை செய்யக் கூடியவர்களை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. வரலாற்றுத் தெளிவு பண்பாட்டுணர்வு விடுதலை வேட்கை, சுதந்திர சிந்தனை புதியவற்றைக் கண்டறியும் ஆர்வம் முதலானவை தூண்டி வளர்க்கப்படவில்லை. அப்படிக் கல்வியையே

"சூது பிச்சை சேவகர் தாதர்கள்
நாயெனத் திரி ஒற்றர் உணவினை
பெரிதெ எல்லொரு தம்முயிர் விற்றிடும்
பேடியர் பிறர்க்கு கீழ்ப்படிவோர்
கருது மிவ்வகை மாக்கள் பயின்றிடுங்
கலை..............."

என்று மகாகவி பாரதி கடிந்தார். அந்நிலை எவ்வளவு தூரம் மாறியுள்ளது என்பது கேள்விக் குறி. கைத்தொழில் மற்றும் வளர்ச்சியை ஒட்டிய துறைகளின் தேவைகளே இன்று அதிகமாக கவனத்திற்கு எடுக்கப்படுகின்றன. தனியார் துறைத் தேவைகள் தொழில் வாய்ப்புக்கேற்ற கல்வி என்பன பற்றி பெரிதாகப் பேசப்படுகின்றன. ஆனால் தொழில் சந்தைக்கான தொழில் அலகாக ஒரு குழந்தையைக் கருதிய வளர்த்தல் தவறானது என்று உணர்ந்து பார்க்கப்பட வேண்டியது. பெரும்பாலான பெற்றோர்கள் பிள்ளைகளின் விருப்புகளை, உளப்பாங்கு முதலானவற்றைப் பொருட்படுத்தாது தமது ஆசைக்கேற்ப அவர்களை வற்புறுத்தி வளர்க்க விளைவதனால் பல இன்னல்கள் தோன்றுகின்றன.

வருமானம் பெருக்கவும் சமுதாய அந்தஸ்தை உயர்த்தவும் கல்வியைக் கருவியாய்க் கொள்ளும் பிரயத்தனங்கள் பலவாறாக மேற்கொள்ளப்படுகின்றன. வேலைகளுக்கும் பதவிகளுக்கும் தம்மைத் தகுதியுடையவர்களாக்கும் நோக்கோடு பரீட்சைகளில் விரைவாகவும் இலேசாகவும் சித்தியடைய உதவும் ஏற்ற உபாயங்களைத் தேடுகின்றனர். மருத்துவர்கள் ஆவதில் இருக்கும் ஆர்வம் நோய்களை குணப்படுத்துவதிலும் சமூக சுகாதாரத்தைப் பேணுவதிலும் காணப்படவில்லை. பொறியியலாளராய் பட்டம் பெறுவதில் உள்ள ஆர்வம் சமூகத்துக்கு வேண்டிய போக்குவரத்து வசதிகளையோ தொழில் நுட்பத்தை வளர்ப்பதிலோ இல்லை. விஞ்ஞானப் பட்டதாரியாவதில் உள்ள ஆர்வம் புதிய உண்மைக் கண்டுபிடிப்பதிலோ புதிய சாதனைகளை நிலை நாட்டுவதிலோ இல்லை. வசதியான ஒரு வாழ்க்கையை நமக்கு வழங்க வேண்டியது சமுதாயத்தின் பொறுப்பு என்ற நிலையுடன் பலர் அதனை அவசரமாகத் தேடுகின்றனர். சமுதாயத்திற்கு எதையேனும் வழங்குவது பற்றி அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

சமுதாய நலனுக்கு பங்களிப்புச் செய்யும் குறிக்கோளோ இலட்சியமோ உள்ளவர்கள் அருகியே காணப்படுகின்றனர். தன்னம்பிக்கையும் சமுதாய பிரக்ஞையும் பொறுப்புணர்வும் விசால நோக்கும் கொண்டவர்களை உருவாக்குவதும் அவர்களிடத்துச் சமுதாய மேம்பாட்டுக்கு உதவும் உணர்வினை ஊட்டுவதுமே பயனுள்ள கல்வியாக அமையும். எத்தகைய மேம்பாட்டுத் திட்டங்களும் வகுக்கப்பட்டாலும் அறிவுத் தாகமும் சமுதாய மேம்பாட்டுக்கு உதவும் ஆர்வமும் கொண்ட மாணவர்களும் ஆசிரியர்களும் இணையும் இடத்திலேயே கல்வி சிறப்புறும் வழியமையும். அறிவுத்தாகத்தையும் சமுதாய ஆர்வத்தையும் ஆசிரியர்களிடத்து தூண்டுவது மாணவர்களின் பொறுப்பாதல் இயலாது. ஆனால் அதனை மாணவர்களிடத்துத் தூண்டுவது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் பின்னணியில் பெற்றோர், மாணவர் ஆகியோரில் ஏற்படுத்துகின்ற சில உளரீதியான தாக்கங்கள்

எம்.எஸ். ஜவ்பர் (கல்விமாணி)

அறிஞர் ஜான் புரூவர் "இன்றைய உலகத்தில் பல வியாதிகளைக் குணப்படுத்துவதற்கு கல்வி ஒன்றேயிருந்தது" என்று கூறுகின்றார். ஆனால் அந்தக்கல்வியினால் பலர் நோயாளிகளாக மாறுகின்றார்கள் என்றால் அந்தக்கல்வியால் என்ன பிரயோசனம். அதனைத்தான் இன்றைய புலமைப் பரிசில் பரீட்சையின் முடிவுகள் தெளிவுபடுத்துகின்றனவா?

இவ்வாண்டுக்கான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் அனைத்தும் வெளியாகியமையைத் தொடர்ந்து கூடிய புள்ளிகள் பெற்றவர்கள் பற்றிய விபரங்கள் பத்திரிகைகளில் வெளியாவதும், வெற்றியடைந்த மாணவர்களுக்கு பாராட்டுக்கள் குவிவதும், பாடசாலைக்குப் பாடசாலை போட்டியிட்டு விழாக்கோலம் நடாத்துவதும் கற்பித்த ஆசிரியர்கள், உதவி நிலைய அதிபர்கள் போன்றோருக்கு பரிசுகள் வழங்குவதும் தற்போது வாடிக்கையாகிவிட்ட இன்றைய சூழலில் குறித்த புள்ளிகளை அடைய முடியாத மாணவர்களினதும், அவர்களுக்காக இரவு பகலாக கஷ்டப்பட்ட பெற்றோர்களினதும் நிலையைப் பற்றி யோசித்துப் பார்த்தோமா? அவர்களது மனசஞ்சலத்தில் பங்குபற்றி ஆறுதல் கூறினோமா? பலர் அவர்களை நினைத்துக்கூட பார்க்கவே இல்லை.

தரம் ஒன்றில் பிள்ளையை பாடசாலைக்குள் விட்ட கையோடு "என்பிள்ளை தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து பாராட்டப்பட வேண்டும்" என்கிற மனக்கோட்டை கட்டிய பெற்றோர்களும், அவர்களை நம்பி ஐந்து வருடங்களாய் ஏற்றிய மனச்சுமையை கோட்டை விட்ட மாணவர்களினதும் நிலையைப் பற்றி பாடசாலைகளின் அதிபர்களோ, அல்லது சமூகமோ, விழா எடுக்கின்ற அரசியல் வாதிகளோ, கற்பித்த ஆசிரியர்களோ யாருமே கவனிப்பதாய் இல்லை. இவர்களின் நிலை அந்தோ பரிதாபம் இன்று இவர்கள் வெளிப்பாரற்று தலை தொங்கிய நிலையில் பாடசாலைக்குள் ஏனைய மாணவர்களின் கிண்டலுக்கு உள்ளாகி பாடசாலைக்கு வேண்டா வெறுப்புடன் வருகின்ற ஒரு நிலைமையை இப்பரீட்சையின் பெறுபேறுகள் தோற்றுவித்துள்ளது என்பதைத் தான் பெற்றோர்களிடமும், குறைவான புள்ளிகள் எடுத்த மாணவர்களிடமும் காணமுடிகிறது. இந்நிலை பாரிய பின்விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்பது அறிஞர்களின் கருத்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மையில் அரசாங்கத்தினது ஒரு வைக்குவிட்டுக்காக அதாவது வறிய, வீழுமான மாணவர்களை மையப் படுத்தி அடிப்படையில் உதவித் தொகை வழங்குவதற்கும், தேசிய மட்டத்தில் பல்வேறு சிறப்புக்களை உள்ளடக்கிய பாடசாலைகளில் கல்வி கற்பதற்குரிய வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் இந்த நாடுதழுவிய பரீட்சை நடாத்தப்படுகிறது. இது கடந்த பலவருடங்களாக பல்வேறு மட்டத்திலும் சில தாக்கங்களை ஏற்படுத்தி வந்தாலும், பாடசாலை மட்டத்திலும் தற்போது மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தாக்கத்தின் விளைவு பிள்ளைக்கு உணவு உண்பதற்கும், தூங்குவதற்கும் நேரமற்று பாடசாலைச் சுமைக்கு மேல் சுமையுடன், எப்படியும் பிள்ளை கூடிய புள்ளியை பெற்றால் தனக்குள்ள குடும்ப கௌரவத்திற்கு கிடைத்த பரிசு என்கிற கௌரவத்தை பிள்ளை மூலமாக நிறைவு செய்ய முற்படுகின்ற இந் நடவடிக்கைகள் பாதிப்பிலேற்பான நடத்தைக்கு வழிவகுக்கும் என்பதை மறந்துவிடுகின்றனர்.

அண்மையில் பத்திரிகைகள் பலரின் சிபார்சுகள் அடங்கிய ஆய்வு அறிக்கை கல்வியமைச்சிடம் வழங்கப்பட்டது. தற்போது நடாத்தப்படுகின்ற தரம் 5இல் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றுவதற்கு அவர்களது வயது போதாது. எனவே தரம் 7இல் பரீட்சிக்கப்படுவதன் அவசியம் பற்றியும் அக்குழுவின் சிபார்சுகள் அமைந்திருந்தன. பொதுவாகவே மாணவர்களை புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார் செய்கின்றபோது அவர்களிடம் இயல்பாக மறைந்துள்ள காணப்படுகின்ற பல்வேறு செயற்பாடுகளை மறக்கவைத்து வலிந்த கற்றலில் அவர்களை நெருக்குதல் பல்வேறுபட்ட பாதிப்புகள் ஏற்படுவதிலிருந்து கல்வியில் அக்கறையற்ற வாழ்க்கையே பஷ்வானமாகும் சந்தர்ப்பத்தை பெற்றோரிடமும் சிலவேளை ஏற்படுத்தி விடுகிறது. ஆகவேதான் வெற்றி, தோல்வி என்ற நிலைக்கும் அப்பால் மாணவரின் கல்வி மீதான பற்றுக்கு அடித்தளமாக இப்பரீட்சை அமைய வேண்டுமே ஒழிய மாணவர்களை மனவேதனைக்கு உட்படுவதை தவிர்ப்பதாக அமைய வேண்டும்.

பரீட்சை முடிவுகள் சரியாக அமையாதபோது ஏற்படுத்தி விடும் விபரீதங்கள் மனதை நெகிழவைத்தும் விடுகின்றன. அதற்குதாரணமாக அண்மையில் நடைபெற்ற சம்பவம் ஒன்று மனதை தொட்டதனால் இதனை எழுதுகின்றேன். அதாவது பரீட்சை முடிவுகள் வெளியானபோதும் தனது பிள்ளையின் முடிவினை கைத்தொலை பேசியில் ஒரு இளைஞரிடம் பார்க்கும்படி கேட்கிறார்கள். பார்த்த இளைஞன் ஒரு புள்ளி குறைவினால் சித்தியடையவில்லை என்று கூறியதுதான் தாமதம் படிப்பு வாசனையே இல்லாத அப்பிள்ளையின் பெற்றோர் சித்தியடையவில்லை என்ற காரணத்தினால் மாலை நேரு அக்கணத்தில் இருந்து அழ ஆரம்பித்து நாள் முழுவதும் புலம்பியழுது மன அழுத்தத் திற்கு பிள்ளை சார்ந்த அம்மா மனநோய்க்கு உள்ளாகியே விட்டது. அடுத்தநாள் மாணவனின் ஆசிரியர் அவ்விடம் சென்று ஆறுதல் கூறினாலும் மரணவீடுபோல் காட்சியளித்த பரிதாபநிலை சொல்லிலடங்காது.

தற்போது உளரீதியான ஆலோசனை வழங்கப்பட்டு ஓரளவு மனமாற்றத்தை ஏற்படுத்தியதன் பிற்பாடு அம் மாணவன் வழமைபோன்று பாடசாலைக்கு செல்லும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்படியான சம்பவங்கள் மாணவர்களின் நடத்தைக் கோலத்தில் மாற்றத்தை ஏற்படுத்திவிடும் இப்பரீட்சையில் அடைவு மட்டங்களினது சமூக, உள ரீதியான அழுத்தங்களுக்கு ஒரு வகையில் பெற்றோரும், சில கற்றோரும் காரணமாகிவிடுவதுடன் சிக்கல் களைக்குரிய விடயமாகும்.

## புதிய கல்வி சீர்த்தம் நவ முறையில் இருந்தாலும் பயன்பாட்டில் இருக்கின்றதா?



கடந்த 1997 இல் கொண்டுவரப்பட்ட ஆரம்பக்கல்வி சீர்திருத்தத்தின் நோக்குக்கு மாற்றமாகவே இப்பரீட்சையின் முடிவுகள் உணரப்படுகின்றன என்பதைத்தான் பலரும் கூறுகின்றனர். அப்போது ஏற்பட்ட பல மாற்றங்கள் தவறுகள் காரணமாக மீண்டும் புதுப்பிக்கப்பட்டு 2003இல் தேசிய கல்வி ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மனித விருத்தி பற்றிய தொலைநோக்கை அடைந்து கொள்வதற்காக தேர்ச்சி மையப்படுத்திய விருத்திப் பிரயோகத்தின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிப்பாடவாரியான தேர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அத்துடன் பொதுத்தேர்ச்சிக் குறிக்கோள்களை அடைவதற்கு மாணவர்கள் எய்த வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளையும் விதந்துரைத்துள்ளது. அதாவது தொடர்பாடல் தேர்ச்சிகள், ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள், சூழல் சார்ந்த செயற்பாடுகளுக்கான தேர்ச்சிகள், வேலை உலகிற்கு தயார்படுத்தலுக்கான தேர்ச்சிகள், சமயமும் ஒழுக்கமும் தொடர்பான தேர்ச்சிகளும், ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள், கற்றலுக்கான கற்றல் தொடர்பான தேர்ச்சிகள் ஆகியன விருத்தியடைந்து செல்லும் விதமாகக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் அமைதல் சிறப்பானது என்பதைத்தான் இவை யாவும் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றது.



ஆனால் இது நடைபெறுகின்றதா? என்றுபார்த்தால் வித்தியாசமான ஒரு போக்கைத்தான் இந்த புலமைப் பரிசில் பரீட்சை வகுப்புகளுக்கு தயார் செய்யப்படுகின்ற மாணவர்கள் நோக்கப்படுகின்றனர். எனவேதான் இப்படியான உளரீதியான தாக்கங்களுக்கு உள்ளாக்கப்படுகின்ற பரீட்சைக்கு குறைந்த புள்ளிகள் 70க்கு மேல் எடுத்த அனைவருக்கும் கல்வியமைச்சினால் அங்கீகாரம் வழங்கப்படும் என்கிற உத்தரவாதத்தையும் மீறி குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்களின் நலனை கவனிக்கும் அதேவேளை குறைவாக எடுத்த மாணவர்களையும் பாராட்டி கௌரவிப்பது அவர்களது எதிர்கால வளர்ச்சிக்கு உதவும் ஆற்றலை வழங்கும் என்பதைத்தான் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.


அதுமட்டுமல்லாது ஆரம்ப வகுப்புக்களில் ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் பணியை மாணவர்களுக்கு முழுமையாக செய்து கொள்வதுடன், இவர்கள் பிள்ளைவிருத்திப் பருவத்தின் தீர்க்கமான ஒரு கட்டத்தில் காணப்படுவதால் அவர்களிடம் ஆக்கத்திறனையும், சமூகத்திறன்களும், ஆளுமைப் பண்புகளும் விருத்தியடைந்து இசைவடையும். ஆகவே பாடசாலைப் பருவத்தில் மாணவர்கள் கற்றலுக்காக குழுவாக இடைத் தொழிற்பாடுகளை நடத்துவது மிக முக்கியமாகும். அதற்காகவேதான் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது. அதனை முறைப்படியாக வாசித்தறிந்து அதிலுள்ள விடயங்களை குழுவுடன் இசைவாக்கி கற்றலை மேற்கொள்கின்றபோது இலகுவாகவே மாணவர்கள் கற்றலின்பால் ஈடுபாடுடையவர்களாக தோற்றம் பெறுவார்கள். இம்முறை பரீட்சைக்கு உள்வாங்கப்பட்ட பல வினாக்கள் நேரடியாக பாடத்திட்டத்திற்குள் உட்பட்டவையே மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. பாடசாலையில் ஆசிரியர் இதனை ஒழுங்காக பிரயோகிக்காமல் சாதாரணமாக கற்பிக்கின்றபோது இலகுவாக மாணவர்களினதும், பெற்றோர்களினதும் மன அழுத்தத்திற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளலாம்.

இதனை மையமாகக் கொண்டே பரீட்சை முடிவுகள் வெளியான கையுடன் தேசிய பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் தலையங்கத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. வெற்றி பெற்றவர்கள் ஆனந்தக்களிப்பு, கற்பித்த ஆசிரியர் தொடக்கம் உறவினர்கள் வீடுவரை இனிப்புப் பண்டம் வழங்குதல். சித்தியடைந்த மாணவர்களின் கட்அவுட் காட்சிப்படுத்துதல், பத்திரிகையில் மாணவர்களின் போட்டோ இவ்வாறு பெற்றோர் ஆசிரியர் பாராட்டு படுத்துகின்றனர். இன்னொரு புறம் குறைவாக புள்ளி பெற்ற மாணவர்களை கவனியாது விடுகின்றனர். அவர்களது மனவேதனை அவர்களது உளப் பாதிப்பினால் விளையப்போகும் எதிர்காலத்தாக்கங்கள் குறித்து கல்விச் சமுதாயம் கவனம் கொள்ளத் தவறி விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அத்துடன் தன்னை முற்றாக புறந்தள்ளிவிட்டார்கள் என்கிற மனநிலையில் பாதிப்புக்குள்ளான உள்ளத்தின் குமுறலையும் நாம் கவனிக்கவேண்டும். சிலவேளைகளில் மறந்து விடப்படும் என்ற நிலையில் புள்ளிகள் குறைவான காரணத்தினால் ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள், உற்றார் உறவினர் ஏன் அதிபர்கூட இவனை நகைப்பதனால் மொத்தத்தில் குழந்தைப் பருவத்தையே மறந்து விடுகின்றான். அத்துடன் புலமைப் பரிசிலில் சில பெற்றோர்கள் பலர் உள நலத்துறையிடம் தங்கள் பிள்ளைகளை அழைத்துச் செல்கின்ற நிலைக்கு இப்பரீட்சை அமைவதானால் எதிர்கால பக்தி சிந்தனை எங்கே தேடுவது. ஆதலால்தான் இப்பரீட்சை தேவையான ஒன்றா என்பதை சிந்தித்துப்பார்க்கின்ற கடப்பாடு அனைவருக்கும் உண்டு" என்கிற கருத்தை தெளிவுபடுத்தி விரிவாக எழுதப்பட்டிருந்தது.

உண்மையில் ஆராய்ந்து அறிந்து பார்க்கின்றபோது கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இத்தகைய புலமைப் பரிசில் பரீட்சையினால் நாட்டிலுள்ள பிள்ளைகளைப் பற்றிய அறிக்கை ஒன்றில் இவ்வாறு காணப்படுகிறது. இப்பரீட்சை எழுதிய பிள்ளைகள் பலர் பல்வேறு நோய்களுக்குள்ளாகி வைத்திய உதவியை நாடுகின்றனர். அதிகமான மாணவர்களிடம் இந்தநோய்கள் பரீட்சைக்குத் தயாராகும் போதும், பரீட்சையின் பின்னரும் ஏற்பட்டவை என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. இப்பரீட்சை காரணமாக இப்பிள்ளை அனுபவித்து வரும் மன அழுத்தக்கோளாறுகளை மதிப்பீடு செய்தபோது தலையிடி, பார்வை மங்குதல், தலை சுற்றல், அடிப்பட்ட வயிற்றுவலி, மூட்டு வலி, தசை வலி, மூர்ச்சையடைதல், வலிப்பு, மூச்சுத் திணறல், தூக்கமின்மை போன்ற மன வேதனைகளை இப்பருவத்தின் பிள்ளைகளுக்கு இப்பரீட்சை முடிவுகளும், ஆரம்பமும் ஏற்படுத்திவிடுகின்றன. என்கிற விடயத்தை ஆய்வுகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன.

அதேபோலவே சுற்று பாடசாலைகளில் மாணவர்களிடமிருந்து பல அன்பளிப்புக்கள் பெறப்பட்டு மாணவர்களின் பெற்றோர்களால் பாராட்டுப் பெறவைக்கின்ற முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் குறைவான புள்ளிகள் பெற்ற மாணவர்களையும் இணைத்து பாடசாலைகள் போட்டி பொறாமை மனப்பான்மையை விடுத்து பாடசாலைக்கு பெயரைப் பெற்றுத்தந்த மாணவர்களை பாடசாலை சமுதாயமே பாராட்ட வேண்டும். அதை விடுத்து பலமாதங்களாக டியூசன் என்றும், புத்தகங்கள், சஞ்சிகைகள், கருத்தரங்குகள் என்கிற பல்வேறு கோணத்தில் பணத்தை பிடுங்கிய நிலையில் மீண்டும் பல ஆயிரங்கள் மாணவர்களின் பெற்றோர்கள் மூலமாக கறக்கப்பட்டு விழா எடுப்பது சிலருக்கு சந்தோசமாக இருப்பினும் குறிப்பாக அரசாங்க உத்தியோகத்தர்களது பிள்ளைகளுக்கு எந்தவிதமான கொடுப்பனவுகளும் இல்லாமையானது அவர்களது உரிமை சாதாரணமான சம்பளத்திற்காக மறுக்கப்படுவது கவனத்திற்குரிய விடயமாகும்.

எனவே, பரீட்சைக்குப் பிந்திய காலகட்டத்தில் மாணவர்களினது மன அழுத்தங்கள் அவர்களது கல்விக்கு வேட்டுவைக்கின்ற நிலையிலிருந்து பிள்ளை விரும்பும் இடமாக பாடசாலையும், உன்னதமான கல்வியும் எதிர்கால நல்வாழ்வுக்கு அடித்தளமாக இப்பரீட்சையும் அமைய வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் நிலை எப்போது உருவாகின்றதோ அப்போதுதான் இப்புலமைப் பரிசில் பரீட்சைக்கு உண்மையான பெறுமதி உண்டு என்பதை கற்றறிந்தோரும், பெற்றோரும் உணர்தல் வேண்டும். அத்துடன் இப்பரீட்சையின் ஆரம்பம் உயர்வகுப்பில் சித்தியடைவதற்கு எவ்விதமான தடையாகவும் இருக்கக்கூடாது என்பதைகூறி கற்பதற்கான தடைகள் அகற்றப்பட்டு சாதனை புரியும் ஆற்றலை வழங்கவேண்டிய கடப்பாடு பாடசாலைக்கு உண்டு என்பதை சமுதாயத்தின் முன் உணர்த்துதல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூரணத்துவமான கல்வி

[சென்ற இதழ் தொடர்ச்சி]


சாந்தி சச்சிதானந்தம்
தலைவர்
விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்

## பூரணத்துவமான கல்வி என்றால் என்ன?

ஒவ்வொரு மனிதரும் சமூகத்துடனும், இயற்கையுடனும், கருணை சமாதானம் என்னும் ஆன்மீக விழுமியங்களுடனும் தமக்குள்ள தொடர்பினை உணர்வதன் மூலம் நாம் யார் என்கின்ற தன்னடையாளத்தையும், வாழ்வின் அர்த்தத்தையும் நோக்கத்தையும் புரிந்து கொள்ள உதவும் கல்வி பூரணத்துவமான கல்வியாகும். புத்தகப் படிப்பு மட்டும் என்பதை விட, ஒரு மனிதனின் அறிவுச் செயற்பாடுகள் சகலவற்றையும் தூண்டிவிடும் வகையில் செயற்படுத்தப்படுவது. சகல உயிர்களையும் கனம் பண்ணும் விழுமியத்தையும், தேடிக்கற்பதற்கான அளவற்ற ஆசையையும் ஏற்படுத்துவது இது. சமமான தன்மையை மூடிக் கொண்டு எங்கள் அன்றாடக் கடமைகளில் ஈடுபட வைக்காது, எம்மைச் சுற்றி எந்தச் சம்பவத்தைப் பார்த்தாலும் அதைப் பற்றி சிந்திக்கின்ற, வியக்கின்ற புத்துணர்வான அறிவு நிலையைக் கொடுக்கும். பூரணத்துவமான கல்வி பின்வரும் நோக்கங்களை அல்லது கொள்கைகளைக் கொண்டியங்குகின்றது.

- இந்த உலகத்தில் வாழும் எல்லோருக்கும் ஏதோவொரு ஆற்றல் இருக்கின்றது. இந்த ஒவ்வொரு ஆற்றலும் சமமான பெறுமதி கொண்டது. அதனை இனங்கண்டு வழிப்படுத்தவும் வலுப்படுத்தவும் சகலவிதமான அறிவுச் செயற்பாடுகளையும் உபயோகிக்கும் கல்வியைச் செயற்படுத்தல்
- ஒவ்வொரு மாணவரும் தனித்தன்மையும், புதுமைகளும், ஒவ்வொரு விடயத்தையும் (நிலைமையும்) அது உள்ளடங்குகின்ற கட்டமைப்பைக் கொண்டு ஆராயும் விவேகமும் கொண்டு இயங்கும் ஆற்றல் கொண்டவர் என்பதை அங்கீகரிக்கும் கல்வியை உருவாக்குதல்
- ஒவ்வொரு மாணவரினதும் அறிவு ரீதியான, உணர்வு ரீதியான, சமூக ரீதியான, உடல் ரீதியான, கலைத்துவம் ரீதியான, படைப்பாக்க ரீதியான, ஆன்மீக ரீதியான ஆற்றல்களை வளப்படுத்துவது.
- தேடிக் கற்கும் முறையைத் தூண்டுவது
- உலகின் நடப்புக்களிலும் இருக்கின்ற தொடர்புகளைக் கற்பிப்பது; பல அறிவுச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பது
- இந்த உலகத்திலுள்ள சகல அறிவும் ஏதோவொரு காலத்தில் ஏதோவொரு கலாசாரப் பின்புலத்தில் பலரால் பகிர்ந்துணரப்பட்டு உருவாக்கப்பட்டது என்பதையும், அவையொன்றும் முடிந்த முடிபில்லை என்பதையும் உணர்த்துவது
- எங்கள் கடந்த காலத்தை விளங்க வைத்து, அது படைத்த பாடங்களின் அடிப்படையில் நிகழ்காலத்தில் சமூகத்தின் ஒரு அங்கமாகப் பூரணமாக வாழ வழி செய்து, அதனூடாக நாங்கள் எல்லோரும் சேர்ந்து எங்களுக்கு விரும்பிய எதிர்காலத்தை உருவாக்குவதற்கான ஒப்புதலை, நம்பிக்கை ஆற்றல்களைக் கொடுப்பது

பூரணத்துவமான கல்வியின் முக்கிய கோட்பாடாக, இந்த உலகில் நிகழும் சம்பவக் கோர்வைகள் எந்தெந்தக் கட்டமைப்புக்களின் பின்னணியில் உருவாகி பரிணாம






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி பெறுகின்றன என்பதை ஒரு மாணவன் தானே பகுப்பாய்வு செய்து கண்டு பிடிக்கும் நிலைமைக் கொடுத்தல் என்று சொல்லலாம். ஒரு நிகழ்வும் தன்னிச்சையாக நிகழ்வதில்லை. அதன் பின்னணியில் இயற்கையினதும் சமூக செயற்பாட்டினதும் விதிகள் இயங்குகின்றன. இதற்கு உதாரணமாக நாம் பாடசாலைக்கல்வியின் வளர்ச்சியின் வரலாற்றைக் காணலாம். சகலருக்குமான கல்வி என்னும் கோரிக்கைக்குப் பின்னால் ஒரு வளர்ந்துவரும் முதலாளித்துவ வர்க்கத்தின் தேவையை நாம் பார்த்தோம். அந்தப் பொருளாதார சக்தி ஒரு சமூக இயக்கத்திற்குத் தூபம் போடுகின்றது. இவ்வாறு உலகை நாம் பார்க்க ஆரம்பித்த அக்கணமே சமூகத்தைப் பற்றிய எமது பார்வையில் ஒரு முதிர்ச்சி தோன்றுகின்றது. இன்று மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் கல்வியில் இவ்வகையான பகுப்பாய்வு வசப்படுத்தப்படுவதில்லை என்பது துரதிஷ்டமாகும். வரலாறு என்றவுடன் ஆசிரியர் உடனே நடந்த சம்பவங்களின் கோவையைக் குறிப்புக்களாகத் தருவதுடன் பாடம் முடிப்பதைப் பார்க்கின்றோம்.

அதேபோல, சமய பாடத்தினை எடுத்தாலும் மிக மேலோட்டமான அணுகுமுறையைத்தான் நாம் காண்கிறோம். ஒவ்வொரு சமயமும் தான்தான் மிகச் சிறந்த சமயம் என்று நிறுவுதலிலேயே தகவல்களும் விடயங்களும் பாடவிதானத்தில் தரப்படுகின்றன. இதைப் படித்து வெளியேறும் மாணவர்கள் ஒரு பல்லின சமூகத்திலுள் வாழ்வதற்கான எத்தகைய தகைமைகளைக் கொண்டிருப்பர்? தங்கள் சமயம்தான் மிகச் சிறந்த சமயம் என்கின்ற பிரமையுடனேயே வெறியிருப்பர். இந்த உலகின் சகல அறிவுருவாக்கமும் தன் முன்னால் இருந்த வெவ்வேறு அறிவுருவாக்கத்திலிருந்து கடன் பெற்றிருக்கின்றது. அது போலவே தானும் கடன் கொடுத்திருக்கின்றது. வேறு சமயத் தத்துவங்களிலிருந்து தான் பொறுக்கி எடுக்காத ஒரு சமயமுமே இல்லை எனலாம். மாணவர்கள் இந்தத் தொடர்புத் தன்மையினைத்தான் முக்கியமாகக் கற்றுக்கொள்ள வேண்டும். அது மட்டுமன்றி, காலப் போக்கில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார மாற்றங்கள் எவ்வாறு சமயங்களின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தின என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இதற்கு நல்ல உதாரணமாக வைஷ்ணவ சமயத்தின் உருவாக்கத்தினையும் வளர்ச்சியினையும் நோக்கலாம். சைவப் பிராமணர்களின் மேலாதிக்கத்தை சமப்படுத்தி தமது வளர்ந்து வரும் செல்வாக்கினை சமூகத்தில் நிலைநாட்டுவதற்கு வர்த்தகர்களினால் ஆதரிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட சமயம் வைஷ்ணவ சமயமாகும். இந்தியாவில் இவ்விரு சமயங்களுக்கிடையில் நிகழ்ந்த பாரிய வன்முறைகள் உண்மையில் மேலாதிக்கத்திற்காகப் போராடிய இரு சாதிக்குழுமங்களின் போராட்டமாகும். இந்த நோக்கில் பாடங்களைப் புகட்டாதது மட்டுமல்ல, 'திருஞானசம்பந்தநாயனார் பௌத்தரையும் சமணரையும் கழுவில் ஏற்றினார்' என்னும் விடயத்தை ஏதோ பெருமையான விடயமாக சிலாகித்தும் கற்பிக்கின்றோம். இந்தப் பாடத்திட்டங்களினால் எங்கள் வருங்கால சந்ததியினருக்கு நாம் புகட்டும் விழுமியங்கள் தான் என்ன?

### பூரணத்துவமான கல்வி முன்வைக்கும் அறிவுச் செயற்பாடுகளின் வகைகள்



பூரணத்துவமான கல்வி மனிதர்களின் அறிவுச் செயற்பாடுகளை ஆராய்ந்து வகை பிரித்து அவற்றின் ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட தன்மையினைப் பிரயோகிக்கும் கல்வியாகும். எங்களுடைய மூளை வித்தியாசமான செயற்பாடுகளைக் கொண்டுள்ளது. இவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு அறிவுச் செயற்பாடாகக் கருதலாம். உலகில் நடப்பவற்றின் காரண காரியத்தை விவாதிக்கும் தர்க்க அறிவு (intelligence quotient); கருணை, அனுதாபம், உத்வேகம் ஆகியவற்றைத் தரும் உணர்வின் அறிவு (emotional quotient); வாழ்க்கையின் தரிசனத்தையும் அடிப்படை விழுமியங்களையும் உணர்த்தும் ஆன்மீக அறிவு (spiritual quotient) என அவற்றைப் பிரதான கூறுகளாக்கலாம். இவற்றை சுருக்கமாக முறையே IQ, EQ, SQ என்பார்கள். இந்த அறிவுகளை மேலும் கூறுகளாகப் பிரிக்க வேண்டுமாயின் பின்வரும் அறிவுச் செயற்பாடுகளாகக் காணலாம்.

### பேச்சு மற்றும் மொழிச் செயற்பாடு

ஒரு மொழியின் கட்டமைப்பினை விளங்கிக் கொள்ளல், அதனைப் பிரயோகித்தல், கவிதைகள் கதைகள் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுதல், இலக்கிய ரசனை இவையனைத்தையும் மொழிச் செயற்பாட்டினுள் அடக்கலாம். மற்றவர்களுடன் சிறந்த முறையில் தொடர்பாடுவதற்கு இந்த அறிவு உதவுகின்றது. அனேகமாக பெண்களுக்கு இந்த செயற்பாட்டில் கூடிய திறமை காணப்படுகின்றது என்று கூறுவர்.

### தர்க்க, கணித அறிவுச் செயற்பாடு

இதனைச் சுருக்கமாக விளக்கினால், A + B, C + B, என்றால், A + C ஆகும் என்ற வகையில் காரண காரியத்தை சிந்தித்து முடிவாக்குவது என்று கூறலாம். கணித பாடம் என்பது எண்களுக்கு இடையில் உள்ள தொடர்புகளைச் சமன்பாடுகளாகக் காண்பதாகும். இந்தத் தர்க்க அறிவு வாழ்க்கையின் சம்பவங்களையும் அவதானித்து அவற்றைக் கோர்வையாக்கி விளங்கவும் உதவுகின்றது. அந்த விளக்கங்களின் ஒரு அம்சம் பௌதிக விஞ்ஞானங்களாகும். இவை தவிர, எந்த விடயத்தையும் ஏன் எப்படி எனக் கேள்வி கேட்டு பகுப்பாய்வு செய்யும் திறனையும் இந்தத் தர்க்க அறிவு கொடுக்கின்றது.

### கட்புலன் (visual), வெளி பற்றிய (spatial) அறிவுச் செயற்பாடு

இந்தச் செயற்பாடு கட்டடிடக் கலைஞர்களுக்கும் கட்டிடப் பொறியிலாளர்களுக்கும் அவசியமான அறிவாகும். ஒரு இடத்தை அல்லது ஒரு வெளியினைப் பார்க்கும்போது அதன் பரிமாணங்களை உணர்வதும் அதற்கேற்ற வடிவங்களை உருவாக்குவதும் இவ்வகையான அறிவேயாகும். ஓவியர்களுக்கும் சிற்பிகளுக்கும் இந்த அறிவு தேவைப் படுகின்றது. இது அனேகமாக ஆண்களின் மூளையில் கூர்மை யடைந்து காணப்படுகின்றது என்று நம்பப்படுகின்றது.

### உடலியக்க அறிவு

நடனம், விளையாட்டு, உடற்பயிற்சி, உடல் உழைப்பில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளுக்குத் தேவையான அறிவு இது. சில பிள்ளைகள் சிறந்த பந்து வீச்சாளர்களாக வருவது எப்படி? வேறு சிலர் நல்ல ஜிம்னாஸ்டிக்காக அல்லது நல்ல நடனமணிகளாக வருவது எப்படி? அவர்களுக்கு இந்த உடலியக்க அறிவு சற்றே கூர்மைப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

### இசை, தாள அறிவுச் செயற்பாடு

ஸ்ருதி பிடிக்கும் அறிவு, தாளத்தைக் கட்டுப்படுத்தித் தவறாகாமல் தட்டும் திறமை, ஸ்வரங்களைச் சட்டென்று அடையாளம் காணும் திறமை, கேட்டவுடனேயே வாங்கிப் பாடும் அல்லது இசைக்கும் திறமை இவையெல்லாம் இந்த அறிவினாலேதான் ஏற்படுகின்றது.

### சக மனிதர்களுடன் சுமுகமான உறவினைப் பேணும் ஆற்றல்

மனிதன் ஒரு சமூக விலங்காகையால் ஒருவராலும் இந்த உலகத்தில் தனியே வாழ முடியாது. அப்படி வாழ நேர்ந்தால் புத்தி மாறாட்டங்கள் ஏற்படும் என்பதைப் பல பரிசோதனை கள் மூலம் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆயினும் சக மனிதர்களுடனான கூட்டு வாழ்க்கையில் உறவுகளைப் பேணுவதற்கும் அதற்குரிய அறிவு தேவை. இந்த அறிவு குறையும் போதுதான் குடும்பச் சச்சரவுகள் பெருகுவதும், சமூகங்களில் வன்முறைகள் பெருகுவதும் நிகழ்கின்றன.

### ஒருவர் தன்னகத்துடன் பேணும் உறவுக்கான அறிவு

சுய மரியாதை, சுய கௌரவம், தனது மனச்சாட்சி யுடனான உறவு போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் அறிவு தான் இது. ஆன்மீக சக்தியை விருத்தி செய்ய இந்த அறிவு உதவுகின்றது. உளத்தாக்கம் ஏற்பட்டால் அதற்கு முகம் கொடுக்கும் ஆற்றலை இந்த அறிவு கொடுக்கின்றது. இது குறைந்தவர்கள் இலகுவில் மனக்குழப்பங்களுக்கு ஆட்படு வார்கள். தற்கொலையை நாடுபவர்கள் அனேகமாக இந்த அறிவுக் குறைபாடு உள்ளவர்கள் ஆவார்கள்.

### இயற்கையுடனான உறவைப் பேணும் அறிவு

மனிதன் சமூக விலங்காக மட்டுமல்ல, இயற்கையுடனான பின்னிப் பிணைந்த உறவு கொண்ட விலங்கும் கூட. ஒருவித தாவரமும், விலங்குகளும், பட்சிகளும் இல்லாத உலகத்தில் மனிதர்கள் ஒரு கணமும் வாழமுடியாது. உயிரினங்கள் இல்லாது போனால் எங்கள் வாழ்க்கைச் சமநிலை கவிழ்ந்து விடும் என்பதோடு எங்களுக்கு உளத்தாக்கமும் ஏற்பட்டு விடும். இயற்கையை இரசிக்காதவர்கள் யாரும் உண்டா? இயற்கையை நாம் வணங்குவதும் அதே காரணத்தினால் தான். அவ்வாறாக இயற்கையுடனான உறவைப் பேணவும் எங்களுக்கு ஒருவித அறிவு தேவைப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒருங்கிணைந்த கல்வியாக பூரணத்துவமான கல்வி

ஒரு பிள்ளை தனது சமூகத்துக்கு ஒரு பயனுள்ள பிரஜையாக வரவேண்டும் என்கின்ற நோக்கமின்றி அது எப்படியாவது படித்துச் சித்தியெய்தி விடவேண்டும் என்பதே நோக்காகக் கொண்டு இன்றைய கல்வி நிலைமை செல்கின்றது. இப்பொழுது, பரீட்சைகள் வந்தால் பிள்ளைகளைப் போட்டு பாடாய்ப் படுத்துகின்றனர். அவர்களின் விளையாட்டு ஊக்கங்களை முளையிலேயே கிள்ளி உடலியக்க அறிவை அணைத்து விடுகின்றனர். பரீட்சை என்றாலே உடனேயே பிள்ளை சென்று வந்த பாட்டு வகுப்பு, நடன வகுப்பு எல்லாவற்றையும் நிறுத்தி புத்தகங்களில் மட்டும் மூக்கை நுழைக்க வைக்கின்றனர். விடியற்காலை போதனா வகுப்பு, பிறகு பாடசாலை, பிறகு திரும்ப மாலை போதனா வகுப்பு என அவர்கள் இயந்திரமாகச் சுழலுவதனால் மனிதர்களாக வளர மறந்து விடுகிறார்கள்.

கணக்கில் நன்றாகச் செய்யும் பிள்ளைதான் கெட்டிக்காரப் பிள்ளை என்று பொதுவாக நாங்கள் சொல்லுவோம். ஆனால் கணக்குச் செய்யும் அறிவு எங்களுக்குத் தேவையான அறிவின் எட்டிலொரு பாகமேயாகும். இத்தனை வித்தியாசமான அறிவுகளும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள வகையிலேயே செயற்படுகின்றன. இந்த அறிவுகளில் ஏதேனும் ஒன்றில் ஒரு பிள்ளை திறமைசாலியாக இருப்பினும்கூட, அந்தத் திறமையை வளர்த்தெடுக்கவும், பாதுகாக்கவும் ஏனைய அறிவுகள் எல்லாமே தேவையாகும். சமூகத்தில் பொறுப்பு, பாசம், நீதியுணர்வு ஆகியவற்றுடன் வாழவும் இந்த எட்டு அறிவுகள் கற்பிக்கின்றன. ஒரு பூரணமான கல்வியானது ஒரு பிள்ளைக்கு இந்த எட்டுவித (அல்லது மூன்றுவித) அறிவுகளையும் புகட்டும் கல்வியாகும்.

ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தப்பட்ட முறையில் கல்வியினை நோக்குவதற்கான சில உதாரணங்களைப் பார்க்கலாம். எவ்வளவு கெட்டிக்காரப் பிள்ளையிடம் தன்னகத்துடன் உறவு பேணும் அறிவைக் கொண்டிராவிட்டால் அது தான் எதிர்கொள்ளும் ஒரு சிறிய தோல்விக்கே தன்னையே வெறுக்க ஆரம்பித்து கடைசியில் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படலாம். இப்படியான எத்தனையோ சம்பவங்களை நாம் தினமும் பார்க்கின்றோம். இங்கு அந்தப் பிள்ளை பாடங்களில் கெட்டித்தனமாக இருந்து என்ன பயன்? அதே போன்று இசை ஞான அறிவு ஆன்மீக அறிவினை விருத்தி செய்யக் காரணமாக இருக்கின்றது. உடலியக்க அறிவு தர்க்க அறிவை மேம்படுத்தும். மிகச் சிறுவயதிலிருந்தே பியானோ வாசிக்கும் பிள்ளை தனது விரல்களை இயக்கும் காரணத்தினால் சிறந்த புத்திக் கூர்மை உள்ள பிள்ளையாக வளர்கின்றது என ஆய்வாளர்கள் விஞ்ஞானபூர்வமாகத் தெரிவித்திருக்கின்றனர். அப்படிப் பார்த்தால், விவசாயம் செய்யும் வழக்கம் உள்ள பிள்ளைகள் மிக நன்றாகப் படிப்பார்கள் என்று தெரிகிறது.

எங்களுடைய சமூகங்களில் தென்படும் சகல குறைபாடுகளையும் பிரச்சினைகளையும் நாம் கல்வி வழங்கும் முறையுடன் தொடர்புபடுத்துவது இலகுவாகும். இதனை நிவர்த்தி செய்வதற்கு கல்வியியலாளர்கள் எங்கள் சமூகத்திற்கான தரிசனத்தை சுமந்து கொண்டு அதற்கேற்ற பிரஜைகளை உருவாக்கும் கல்வியைப் பயிற்றுவதில் இறங்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் ஆசிரியர் சங்கமும் அதன் முக்கியத்துவமும்

திருமதி. லீலா விஜயரெத்தினம்
[illegible]
[illegible]


PTA என்று சுருக்கமாக அழைக்கப்படும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஒரு பாடசாலையில் அதன் வளர்ச்சியில் பெரும் பங்கு எடுப்பது நாம் எல்லோரும் எதிர்பார்க்கின்ற ஒன்று. ஆனால் எம் எதிர்பார்ப்பின் படி இச் சங்கத்தின் நடைமுறைகள் இருக்கின்றனவா? எனது ஐம்பது வருட ஆசிரிய சேவையில் நான் சேவை செய்த பாடசாலைகளில் இச்சங்கம் இயங்கியது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் PTA கூட்டங்களுக்கு வருகை தரும் ஆசிரிய ஆசிரியைகளும், பெற்றோரும் கூட்டத்தை ஒரு பொழுதுபோக்காக கருதியே சமூகமளித்தார்கள். இது வருத்தத்திற்குரியது. இம் முதல் நிலை எதனால் என்று ஆராய்வோமானால், முதல் மனதிற்குப் படுவது பெற்றோருக்கும் ஆசிரியருக்குமிடையில் புரிந்துணர்வு உண்டா? என்பதே.

இரண்டாவதாக பிள்ளைகள் செயற் முறைப்பாடுகளைத் தீர விசாரித்தறியாமல் அப்படியே பெற்றோர் நம்புவதாகும்.

## அடுத்து பொருளாதார நெருக்கடி

பாடசாலைக்குச் செலுத்த வேண்டிய பணம் வசதிக் கட்டணம் (Facilities Fees) தவிர பரீட்சைக்கு மற்றும் கொடுக்க வேண்டிய பணமென்று பெற்றோரிடம் பல தேவைகளுக்கும் பணம் அறவிடப்படுதல் இம் மனோபாவத்திற்கு காரணமாகும். இச்சங்கடமான பிரச்சினைகளையெல்லாம் எப்படித் தீர்க்கலாம்? பிரச்சினை (1) பெற்றோர், ஆசிரியர்களுக்கிடையே புரிந்துணர்வு. பெற்றோருக்கும் சரி ஆசிரியர்களும் சரி உணர வேண்டியது யாதெனில், இரு சாராரும் சேர்ந்து இணைந்து பிள்ளைகளை வாழ்க்கையில் முன்னேற்றி நற்பிரஜைகளாய் வாழ வைப்பதே தமது குறிக்கோள் என்றெண்ணி ஒற்றுமையாய் செயற்பட வேண்டும். இவ் ஒற்றுமைக்கு அடித்தளமாயிருப்பது பரஸ்பர நம்பிக்கையே ஆகும்.

தம் பிள்ளைகளை ஆசிரியரிடம் ஒப்படைக்கும் போது அவர்கள் தம் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொண்டவர்கள் என்ற எண்ணத்துடன் செல்ல வேண்டும். ஆசிரியரும் தம்மை நம்பி ஒப்படைக்கப்பட்ட இளம் சிறார்களுக்கு தம்மாலான சேவை செய்வது மட்டுமன்றி அப் பிள்ளைகளின் மனநலத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதாவது 'நல்லம் நாம்' என்னும் நடுவு நிலைமையால் 'கல்வியழகே அழகு' என்பதை மறந்திடாமல், பாரபட்சமின்றி நடுநிலை வகித்து பிள்ளைகளின் அன்பையும் மதிப்பையும் பெறல் வேண்டும். அவ்வாறு ஆசிரியர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பக்குவமனநிலையோடு தம் தொழிலைச் செய்வாரேயானால், பெற்றோர் மத்தியிலும் அவர்களைப் பற்றி நல்மதிப்பு ஏற்படும்.

பல பாடசாலைகளில் பாரபட்சமாக நடப்பதுவே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவ் விடயத்தில் ஆசிரியர்கள் மிகவும் கவனம் எடுக்க வேண்டும். பெற்றோர் ஆசிரிய கூட்டங்களில் இது ஒரு பிரதானமான விடயமாக எடுத்தியம்பப்படும். ஆகவே இவ்வாறு நடைபெறாமல் தவிர்ப்பது ஆசிரியரின் தலையாய கடமை ஆகும். பிரச்சினைகளுள் பெரும் பிரச்சினை பணப்பிரச்சினை. வசதிக்கட்டணம் அறவிடுவதும் முணுமுணுப்பு, பரீட்சைக் கட்டணம் கட்ட வேண்டியதும் முணுமுணுப்பு, இலவசக் கல்வி பிறகேன் இல்லையாம் என்று கேட்கும் பெற்றோருக்கு விடை சொல்லப் போய் அதிபரோ ஆசிரியரோ வாக்குவாதத்தில் இறங்கி விடுவார்கள். இது பெரும்பாலான பாடசாலை PTA கூட்டங்களில் நடைபெறுகின்றது.

பொருளாதாரப் பிரச்சினை பூதாகரமான பிரச்சினை. நாளாந்தம் வாழ்க்கை செலவிற்கே வழிதேட முடியாத நிலையிலுள்ள பெற்றோரும் உண்டு. இவர்கள் தான் முறுகல் நிலையை ஏற்படுத்துபவர்கள். ஆனால் இவர்களோடு ஒத்துழையாத பெற்றோருமுண்டு. இது இவ்வாறிருக்க, இந் நிலைக்கு காரணத்தை அறிய வேண்டியதாயின் நாம் சில வருடங்கள் பின்னோக்கிப் போக வேண்டும்.

ஏறக்குறைய 4 தசாப்தங்களுக்கு முன்னோ பாடசாலைகளில் வேலை செய்யும் ஆசிரிய ஆசிரியைகள் ஒன்றில் அவ்வூரைச் சேர்ந்தவர்களாய் இருந்தார்கள் அன்றி அவ்வூர்ப் பாடசாலைகளில் பழைய மாணவர்களாய் இருந்தார்கள். அவர்களுக்கு பிரதேச உணர்வு நிறைவாகிருந்தது. தாம் வேலை செய்யும் பாடசாலைகளுக்கு விசுவாசமாயிருந்தார்கள். அவ்வாறே பெற்றோரும் 'தமது ஊர்ப் பள்ளிகள்' என்ற அந்நியோன்யம் இருந்தது. இதனால் ஆசிரிய ஆசிரியைகளுக்கும் பெற்றோர்களுக்குமிடையில் நல்லதொரு இணக்கமான மனநிலை இருந்தது. இதன் காரணமாக பாடசாலைகள் நன்றே இயங்கின.

ஆனால் இப்போதோ பிற பிரதேசங்களுக்கு மாற்றப்பட்டு செல்லும் ஆசிரிய, ஆசிரியைகள் ஒட்டும் உறவும் இல்லாமலே உத்தியோகம் பார்க்கிறார்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் தம் பிரதேசங்களுக்குச் செல்வதற்கே வழிதேடியவர்களாய் இருக்கிறார்கள். இதனால் பெற்றோருடன் இணைந்து செயற்படும் மனப்பாங்கும், மனப்பக்குவமும் அற்றவர்களாய் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல இடம் பெயர்ந்த ஆசிரிய ஆசிரியைகளின் நிலைப்பாடும் இதுவே. தன் பிரதேசம் பிற பிரதேசம் என்று பார்க்காமல் பிள்ளைகளின் முன்னேற்றமும், மனநலமும் முக்கியம் என்று கருதி தர்ம சிந்தனையுடன் சேவை செய்வோரை விரல் விட்டு எண்ணலாம்.

## PTA ஈடுகொடுக்க வேண்டிய நிலை

புதிய நடைமுறைகளுக்கேற்ப சமாளித்துப் போகும் தன்மை பற்றி இல்லை. இன, மத, பிரதேச உணர்வுகளைப் பிரதானமாக நினையாமையால் மாணவ, மாணவிகளின் முன்னேற்றம் ஒன்றே முக்கியம் என்று செயல்படும் ஆசிரிய ஆசிரியைகட்கு பெற்றோரின் ஆதரவும் கிட்டும். PTA யும் இவர்களை மதிக்கும். PTA யும் நன்றே இயங்கும். இவை எல்லாவற்றிற்கும் மாறாக தனியார் கல்வி நிறுவனங்களின் PTA அமோகமாக இயங்குகிறது. அங்கு பணத்தால், பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட பெற்றோர் குறைவு. PTA க்கு முழு ஒத்துழைப்பும் கொடுக்கப்படும்.

சர்வதேச பாடசாலைகளிலும் இவ்வாறே அதிபர் ஆசிரியர்களினால் முன்வைக்கும் செயல்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற PTA ஆவன செய்யும். எல்லாவற்றிற்கும் மேலாக கல்வித்தாபனங்களின் தேவையற்ற தலையீடுகளாலும் பாடசாலை வளர்ச்சி தடைபடும். PTA கைகளைப் பிசைந்த படியிருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

இறுதியாக வளங்கள் பற்றாக்குறையுள்ள பாடசாலைகளில் PTA நன்றே இயங்க வாய்ப்பில்லை என்பதை நாம் எல்லோரும் கண்கூடாகக் கண்டதொன்று. ஆகவே பாடசாலைகளில் PTA இயங்குவது அப்பாடசாலை முன்னேற்றத்துக்கு நல்லதே. மேற்கூறிய தடைகள் எல்லாம் மீறி PTA செயல்பட வேண்டும். பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் நோக்கு என்றைக்கும் பாடசாலை முன்னேற்றம், மாணவரின் எதிர்காலம் பற்றியதாகவே இருத்தல் வேண்டும்.

குறைநிறைகளை சாதகமாகப் பயன்படுத்தி பாடசாலை முன்னேற PTA இயன்றளவும் செய்தல் வேண்டும் என்பதே மக்களின் அபிலாஷையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பும் தமிழாசிரியரும்

திருமதி. ஜான்சி ரஞ்சன்
ஆசிரிய ஆலோசகர்

மரபு ரீதியான கல்வியானது நாட்டுக்கேற்ற நற்பிரஜையை உருவாக்குவதை இலக்காகக் கொண்டிருந்த நிலையினை மாற்றி உலகமயமாக்கலின் ஆதிக்கம் கல்வியிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. ஆனால் உலகளாவிய கல்விமுறைகளை ஒத்த அம்சங்கள் மேலாண்மை பெற்று மாறிவரும் உலகில் மாணவர்கள் வாழ்வதற்கேற்ற அடிப்படைத் திறன்களை தொடர் மாணவர்கள் வாழ்வதற்கேற்ற அடிப்படைத் திறன்களான தொடர் பாடல் திறன்கள், தலைமைத்துவ திறன்கள், தலைமைத்துவத்திறன்கள், தீர்மானம் மேற்கொள்ளும் திறன்கள் போன்றவற்றின் அடிப்படையில் அமைந்த கற்றலின் மூலம் மாணவர்களை உலகப் பிரஜைகளாக மாற்றுவதற்கேற்ற கற்றல் முறைமைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இக்காலகட்டத்தில் ஆசிரியரின் வகிபாகமானது அறிவைக் கடத்துகின்ற நிலையிலிருந்து 'கற்றலுக்கு வசதி செய்து கொடுப்பவர்' என்ற நிலைக்கு மாறுகின்றது. ஒரு பாட ரீதியான அறிவைக் கொடுக்கும் ஆசிரியர் தனது பாடத் துறையில் மட்டும் போதிய விளக்கத்தைப் பெற்றிருந்தால் போதுமானது. அறிவைக் கொடுக்கின்ற நிலையிலிருந்து அதைப் பெறுவதற்கு வழிகாட்டுபவருக்கு எல்லா வழிமுறைகளும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. எனவே ஆசிரியர் தன்னை வாண்மையுடையவராக மாற்றிக் கொள்ள வேண்டும். மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர் இன்று எத்தகைய சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாரம்பரியக் கல்வி முறை "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பதைப் போதித்தது. பண்டித மரபிலிருந்து வந்த தமிழ் ஆசிரியர்களிடம் இலக்கியம் இலக்கணம் என்பவற்றில் சிறந்த புலமை இருந்தது. மொழியை அழகாகவும் தெளிவாகவும் உச்சரித்தார்கள். கவிஞர்களாக, கலைஞர்களாக, எழுத்தாளர்களாகத் தம்மை இனங்காட்டிக் கொண்டார்கள். பண்பாட்டின் கருவூலங்களாகத் திகழ்ந்தார்கள். தமிழ் இலக்கியங்கள் உணர்வோடும் உள்ளத்தோடும் ஒன்றித்துப் போகவல்லன. அவற்றை நயத்தோடும் சுவையோடும் கற்பிக்கும் ஆசிரியரிடம் மாணவர்கள் நெருக்கமான உறவையும் ஈடுபாட்டையும் கொண்டிருந்தார்கள். தனது ஆசிரியரை உதாரண புருஷராக கொண்டு உயர்நிலைக்கு வந்தவர்களும் உள்ளனர். அன்பு அறிவு நகைச்சுவைப் பண்பு போன்ற இயல்புகளின் இருப்பிடமாகத் திகழ்ந்தவர்கள் தமிழ் ஆசிரியர்கள் சமுதாயத்தில் உயர்நிலையில் மதிக்கப்பட்ட ஆசிரியரிடம் சந்தேகங்களைக் கேட்கும் போது உடனுக்குடன் பொருத்தமான விடைகள் வந்தன. இதனால் நம்பிக்கைக் குரியவராக விளங்கினார். இன்று இந்நிலை மாறியுள்ளது என்றே கூற வேண்டும். எந்தப்பாடசாலைகளை எடுத்துக் கொண்டாலும் தமிழ் பேசுகின்ற எவரும் வகுப்பறையில் சென்று தமிழைக் கற்பிக்கலாம் என்ற சுதந்திரம் உண்டு. ஆங்கிலம், விஞ்ஞானம், மனைப்பொருளியல், நடனம், சங்கீதம், சித்திரம் போன்ற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் நேரஅட்டவணையில் கட்டாயம் தமிழ்ப்பாடம் சேர்க்கப்பட்டிருக்கும். அதுமட்டுமல்ல அரசியல், பொருளியல், புவியியல் போன்ற பாடங்களைச் சிறப்புப் பாடமாகப் பயின்றவர்கள் உயர்தரத் தமிழைக் கற்பிக்க துணிவாக முன்வரும் நிலையும் உள்ளது. முடியுமா? என்றால் படித்துப் படித்துப் படிப்பிப்பேன் என்பார்கள். பிளேட்டோவின் இலட்சியவாதக் கல்வி "கேத்திரகணிதம் தெரியாதவர்கள் உயர்கல்வி கற்க வரவேண்டாம்" என்று தடை விதித்தது போல மொழிக்கல்வியில் தேர்ச்சி பெறாதவர்கள் மொழி கற்பிக்கக்கூடாது" என்ற புதிய விதி உருவாக்கப்படல் வேண்டும்.

இன்று பாடசாலைகள் சிலவற்றில் தமிழ் குற்றுயிரும் குறை உயிருமாகத் துடித்துக் கொண்டிருப்பதற்கான பின்னணியில் நிறைய விடயங்கள் உள்ளன. எழுத்துப்பிழைகள் மலிந்து ஒலிபேதங்கள் பிறழ்ந்து வாசிப்புப் பண்பாடு அருகிப் போய், ஆக்கத்திறன் முயற்சிகள் குன்றிய நிலையில் உள்ள இக்காலகட்டத்தில் மொழி ஆசிரியரின் பணி சிக்கல்வாய்ந்ததும் சிரமத்திற்குரியதுமாகவே இருக்கும். இதனால் ஆசிரியர் பொறுப்புணர்ச்சி மிக்கவராகவும் மாறிச்செல்லும் உலகின் மாற்றங்களை ஏற்றுத் தனது அறிவைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டியவராகவும் இருக்கின்றார். தொழில்நுட்ப வசதிகள் பெருகிவருகின்ற சூழலில் மாணவர்கள் ஆசிரியரை மட்டும் நம்பியிருக்கத் தேவையில்லை. பல்வேறு வழிகளில் அறிவைப் பெற முடிவதால் அவர்களின் சிந்தனைக்கும் அறிவுமட்டத்திற்கும் பொருத்தமான, திருப்தியளிக்கக் கூடிய பதில்களை ஆசிரியர் தருபவராக இருக்கும் போது தான் மாணவரினால் ஆசிரியர் ஏற்றுக் கொள்ளப்படுகின்றார். எனவே தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் கட்டாயமாக வாசிப்புப் பழக்கத்தையாவது பின்பற்றுபவர்களாக இருக்கவேண்டும். இதன் மூலம் நடப்பியல் சார்ந்த புத்தறிவைப் பெற்றுக் கொள்வது சாத்தியமாகும். வாசிப்புத் தொடர்பான விடயங்கள் அச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகத்திற்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் அளவற்ற விடயங்களை மிகவும் விரைவாகப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் பெருகியுள்ளதனால் மாணவர்களுக்கு இத்தகைய வசதிகளும் வாய்ப்புக்களும் கிடைக்கின்றன. அவனுக்கு அவ்வப்போது எழுகின்ற சந்தேகங்களிற்குப் பொருத்தமான விடை ஆசிரியருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

தமிழ் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களில் பெண் ஆசியரியர்களை எடுத்துக் கொண்டால் வாசிப்பதற்கு நேரமில்லாத வகையில் குடும்பச் சுமையும் வேளைப்பழுவும் அழுத்துகின்றன. அதனால் வாராந்தப்பத்திரிகை ஒன்றை வாசித்து முடிப்பதற்கு நேரத்தைத் தேடித்தேடி ஓடவேண்டியுள்ளது என சலித்துக் கொள்பவர்களும் உள்ளனர். அதற்காக இதனையே காரணமாகக் கொண்டு காலத்தைக் கழிக்க முடியாது. வாசிப்புப் பழக்கத்தைப் பின்பற்றுவதால் நிறையப் புதிய புதிய தகவல்களைப் பெறக்கூடியதாக உள்ளது. சொற்களஞ்சியத்தினைப் பெருக்கிக் கொள்ள முடிகிறது. புதிய கலைச் சொற்களைச் சேகரிக்கலாம். அதுமட்டுமல்ல தமிழ் இலக்கியப் போக்கு, வளர்ச்சி, மாற்றங்கள் பற்றிக் கட்டாயம் தெரிந்திருப்பது அவசியம். புதிய இலக்கிய விமர்சனக் கோட்பாடுகள் பற்றிய அறிவை ஓரளவிற்காவது தெரிந்து வைத்திருக்க வேண்டும். கிராமப்புறத்தில் உள்ள ஒரு பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியரிடம் 'கூர்மதி', 'அகவிழி'என்பவை பற்றிக் கேட்டபோது அவை என்ன என்று சொல்வதற்குத் தெரியாத நிலையில் இருப்பதைப் பார்த்து உதவிக்கல்விப் பணிப்பாளர் ஒருவர் மிகவும் வருந்தி "கடவுள் தான் உங்களைப் காப்பாற்ற வேண்டும்" என்று சொன்ன சந்தர்ப்பமும் உள்ளது. இந்நிலைக்குக் காரணம் என்னவென்று சிந்திக்க வேண்டும். இச்சஞ்சிகைகள் அவர்கள் பெறுவதற்கு வாய்ப்பில்லை போல் இருக்கலாம். அவற்றைப் பற்றி அறிந்தாவது வைத்திருக்கலாம். அறிவைத் தேடிப் பெறவேண்டுமே தவிர தேடிவரும் என்று காத்திருப்பது அல்லது பின்தள்ளிப் போடுவது ஐம்பது வருட காலப் பழைமைக்குள் எம்மை ஆழ்த்தி விடும்.

கலை இலக்கியம், கல்வி, அரசியல், அறிவியல் சார்ந்து வெளிவருகின்ற சஞ்சிகைகள் பற்றி அறிந்து வைத்திருப்பதோடு புலம்பெயர் நாடுகளிலிருந்து வெளிவரும் தமிழ் இலக்கியச் சஞ்சிகைகளையும் ஓரளவு தெரிந்திருக்க வேண்டும். முக்கியமாக எழுத்தாளர்கள் பற்றியும் அவர்களின் எழுத்துக்கள் பற்றியும் அறிந்து கொள்வதற்கும் விரும்பியோ விரும்பாமலோ வாசிப்புத் தான் கை கொடுக்கிறது. இலக்கிய மகாநாடுகள் விருதுகள், நூல் வெளியீடுகள், கலை இலக்கியம் சார்ந்த கண்காட்சிகள் என இலக்கியத்தினதும் அது சார்ப்பானதுமான தரமும் தளமும் விசாலித்துச் செல்வதனால் அவை பற்றிய தேடலை வாசிப்பின் மூலமே பெற வாய்ப் பேற்படுகின்றது.

இன்றைய மாணவ சமுதாயத்திடம் குரு பக்தியோ விசுவாசமோ முன்புள்ள காலங்களில் இருந்ததைப் போல எதிர்பார்க்க முடியாது. மாணவர் ஆசிரியரை மதிப்பிடவும். விமர்ச்சிக்கவும் முனைகின்றனர். ஆசிரியர் தனக்கும் தெரியாத கேள்வியை மாணவன் கேட்கும் போது நிதானமாகவும், சாதுரியமாகவும் பதில் சொல்லப் பழகவேண்டும். தவறான விடைகளைச் சொல்வதும் பிழையான விளக்கங்களைக் கொடுப்பதும் அல்லாவிடில் இது உனக்குத் தேவையற்ற கேள்வி 'பேசாமல் இரு' என அடக்குவதும் ஆசிரியர் பற்றிய கணிப்பீட்டின் தரக்குறைவு ஏற்படுத்துவதை மாணவர் மூலமாகவே அறியும் போது வருத்தத்தைத் தருவதாக அமையும். எனவே தமிழ் ஆசிரியர் கட்டாயமாகத் தனது சிந்தனைகளைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அதற்காகப் புதிய புதிய விடயங்களைத் தேடிப் பெற வேண்டும். சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கு செயலமர்வுகளின் போது சிறந்த முறையில் திட்டமிட்டு வழிநடத்தினால் மொழிகற்பிக்கும் ஆசிரியர் எதிர் கொள்ளும் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய வல்லமை ஏற்படும்.

வைத்து முடிக்க வேண்டும் என்பதற்காக அவசரமாக நடாத்தி முடிக்கும் கருத்தரங்கு செயலமர்வுகள் பழைய பல்லவிகளாகவே அமைந்துவிடுவதும் ஒரு சாபக்கேடாகவே உள்ளது. புதிய சிந்தனைகளிற்கு வழிவகுக்கும் வகையிலான செயற்பாடுகளும் வழிகாட்டல்களும் கொண்டதான ஆசிரியர்களை உற்சாகப்படுத்தும் வகையில் மாற்றியமைக்கும் போது ஏதோ ஒன்றைப் பெறுகின்றோம் என்ற ஆர்வத்திலாவது ஆசிரியர்கள் பங்குபற்ற முன்வருவார்கள். சொந்தப் பிரச்சினைகளை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு வருகின்ற ஆசிரியர்களிற்கு கையேடுகளின் கடத்தல்களாகவும், வெறும் செய்திப் பரிமாற்றங்களாகவும் கருத்தரங்கு செயலமர்வுகளை நடத்துவதை விடுத்து மொழியைக் கற்பிக்கும் வழிமுறைகள் மெல்லக் கற்போருக்கான வழிக்காட்டல்கள், பரிகாரக் கற்பித்துலுக்கான பயிற்சிகள் ஒத்த ஒலிப்புடைய எழுத்துக்களினாலான சொற்களின் பொருள் வேறுபாடு உச்சரிப்பு வேறுபாட்டை இனங்காணச் செய்வதற்கான நுட்ப முறைகள் என்பவற்றை புதிய கோணத்தில் அணுகவேண்டும் இத்தகைய சந்தர்ப்பங்களிலாவது பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்த ஆக்கங்களைப் பற்றிக் கலந்துரையாடுவது, விமர்சிப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதும் ஆக்க இலக்கிய முயற்சிகளில் தம்மை இனங்காட்டிக் கொள்ள முயற்சிப்பதும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பொறுப்புக்களுக்கு வகை கூறுவதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி உளவியல் வகைகள்


திருமதி. [illegible]

[illegible]

B.A., Dip. in Psychology, Dip. in Ed., Dip. in [illegible]

## 1. கற்றல் உளவியல்

ஆசிரியருக்கு கற்றலின் வகைகளும், முறைகளும் எவ்வாறு நிகழ்கின்றனவென்பதையும் என்னென்ன வழிகள் கற்றல் முறைக்கு உதவி செய்கின்றன என்பதையும் கூறுகிறது. மாணவர்களின் மறதிக்கான காரணங்கள் என்னென்ன? நினைவாற்றலுக்கான வழிகள் என்னென்ன? என்பதையும் இவ்வுளவியல் விளக்குகிறது. ஆசிரியருக்கு ஏற்படும் பல சிக்கல்களைத் தீர்க்க இது உதவுகிறது. கற்பித்தலின் போது, வகுப்பறைச் சூழ்நிலையின் போதும், மாணவர் கற்கும் போதும் பல்வகைச் சிக்கல்கள் நேரிடுகின்றன. உளவியல் அறிஞர்கள் அத்தகைய சிக்கல்களை ஆராய்ந்து அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளை ஆசிரியருக்கு அளிக்கின்றனர்.



### 1.1 தானே கற்றல்

கற்றல் அல்லது படித்தல் என்பது பாடக் கருத்தை முழுமையாக அறிய நன்கு ஆயத்தம் செய்யப்பட்ட ஒரு செயல்திட்டமாகும். இது கற்றலுக்கும் பாடசாலை வாழ்க்கைக்கும் மிகவும் இன்றியமையாதது. ஆரம்பப் பாடசாலை மாணவர்களாகட்டும் அல்லது கல்லூரி மாணவர்களாகட்டும் பொதுவாகச் சிறந்த படிக்கும் முறைகளை அறியாதவர்களாக இருக்கிறார்கள். பலநேரங்களில் அவர்களின் தோல்விக்கு இந்த அறியாமையே காரணமாகிறது. 'பட்டர் செக்' என்பவர் மாணவர்களின் தோல்விக்கு முதன்மைக் காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார்.

(1) குறிக்கோள் இன்றிப் படித்தல்

(2) தக்க குறிப்புக்களை எடுக்காமல் இருத்தல்.

(3) தான் கற்றதை மீண்டும் நினைத்துப் பார்க்காமலிருத்தல்

(4) தொகுத்தறியாமலிருத்தல்

(5) படித்த பொருளின் அடிப்படையிலமைந்த கேள்விகளுக்கு விடையளிக்க முடியாமலிருத்தல்.

என்பன

பாடசாலைகளிலோ, கல்லூரிகளிலோ நன்கு வெற்றி பெற்ற மாணவர்கள் தாமே ஒரு கற்றல் முறையை (Independent Study) வகுத்துக்கொண்டு அதைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள். வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு படிக்கிறார்கள். இந்தக் குறிக்கோளை எதிர்காலத் திட்டத்துடனோ, தொழிலுடனோ தொடர்படுத்தப்படும் போது மேலும் அதிலே கருத்தூன்றிப் படிக்க தூண்டுகிறது. அத்துறையில் மென்மேலும் திறன் வளர்கிறது. வெற்றிபெற்ற மாணவன் எவ்வாறு வேலையையும், ஓய்வையும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை அறிந்தவனாக இருக்கிறான். களைப்பு அவனுடைய வெற்றிக்கு முட்டுக்கட்டை போடாதவாறு பார்த்துக்கொள்கிறான். கற்றலுக்கான சில வழிகள் வருமாறு:

#### இலக்கு

படிப்பதன் நோக்கம் என்ன? இதைப் படித்த பின் நான் அடையும் இலக்கு எது? என்பன பற்றி ஒரு திட்டவட்டமான குறிக்கோள் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கருத்துக்களுக்காகப் படித்தல்

படித்தல் என்பது அச்சிட்ட சொற்றொடர்களைப் வாசிப்ப தோடன் நின்று விடுவதில்லை. பொருளுணர்ந்து படிக்க வேண்டும். இதில் கூறப்பட்டிருக்கும் மையக் கருத்து என்ன? என்பதை மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

### முழுமையாகக் கற்றல்

பாடத்தின் அளவைப் பொறுத்தும் மாணவரின் வயதைப் பொறுத்தும் இது மாறுபடும். எடுத்துக்காட்டாக ஒரு புத்தக முழுமையும் ஒரே நேரத்தில் படிப்பதென்பது இயலாத காரியம். ஆனால், ஓர் அத்தியாயம் அல்லது பாடம் மிகப் பெரிதானது அன்று.

### பாடக்குறிப்புகள்

முக்கியமான அல்லது கடினமான கருத்துக்களைக் குறிப்புகளாக எழுதி வைத்துக்கொள்வது மனதில் தக்க வைத்துக் கொள்ள உதவி செய்யும். இதற்காக சில சுருக்கு முறைகளையும் கையாளலாம்.

### குறிப்பிட்ட கேள்விக்கு விடை காண முயலல்

பாடத்தின் இறுதியிலுள்ள கேள்விகளுக்கு விடைகூற முயன்றால் தன் மனத்தில் எவ்வளவு தூரம் பதிந்தது என்பதை அறிய முடியும்.

### தொடர்புபடுத்திக் கற்றல்

நாள்முன்பு படித்தவற்றோடும், வாழ்க்கைப் பயனோடும் தொடர்புபடுத்திக் கற்கும்போது கற்றல் பயனுள்ளதாக அமையும்

### பல சான்றுகளைக் கொண்டு படித்தல்

ஒருவர் கூறுவதை மட்டும் அப்படியே எடுத்துக் கொள்வதைக் காட்டிலும் பல ஆசிரியர்களின் எண்ணங்களையும் தெரிந்துகொள்வது நல்லது. பொதுவாக மாணவர்கள் ஒரு நூலிருந்து கற்பதையே எளிதாகக் கருதுகிறார்கள். பாடசாலை பருவத்தில் கூடுதலாக துணை நூல்களைப் படித்தறிவது, அறிவு வளர்ச்சிக்கு உறுதுணை செய்யும் விளக்கப்படங்கள், அட்டவணைகள், புள்ளிவிவரங்கள் இவற்றைத் தவிர்க்க முடியாது கற்பதால் ஒரு திருப்புதல் கருவியாக அமைவதுடன் பாடக் கருத்தை எளிதாகவும் நேரச் சிக்கனத்துடனும் கற்க ஏதுவாகும்.



'திராக்லர்' என்பவர் மாணவர்களின் படிக்கும் முறைகளைப் பின்வருவனவற்றின் அடிப்படையில் ஆராய வேண்டும் என்று குறிப்பிடுகிறார். அவையாவன:

1) தக்க சூழ்நிலை
2) பொருளுணர்ந்து கற்றல்
3) திட்டமிட்டுக் கற்றல்
4) படிப்பதற்கான சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்தல்
5) இடைவிடாது பயிற்சி
6) பொருளை மனதில் தக்க வைத்துக் கொள்ளல்
7) திரும்ப எண்ணிப்பார்த்தல்
8) தாமெடுத்த வேலையைக் குறித்த நேரத்தில் முடித்தல்
9) இடர்பாடுகளைக் களைவதில் தீவிரம்
10) வகுப்பறையில் கவனம் திருப்புதல்
11) விமர்சனம் செய்தல்
12) சொற்களின் அறிவை பெருக்குதல்
13) படிக்கும் வேகத்தை மிகுவித்தல்.
14) படிப்பதில் நாட்டம்
15) துணையின்றித் தானாக வேலை செய்தல்.

மாணவர்கள் தங்கள் கவனத்தைத் திருப்பும் பொருள்கள், வேலைகள், உணர்ச்சி நிலைகள் என்பவற்றைத் தவிர்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும். தீவிரமான படிப்பு, விருப்பம், பற்று, வெற்றியடையத் தீர்மானம் இவை இருக்கும்போது இடையூறுகளை நினைத்துத் திரும்புவதில்லை. படித்தலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பு தேவைப்படுவதால் பல மாணவர்களுக்கு அது சுவையற்றதாக இருக்கிறது. படித்தலைக் களிப்பூட்டும் வகையிலும், வெற்றி கிட்டும் வகையிலும் மாணவர்கள் உணர ஆசிரியர்கள் உதவ வேண்டும்.

### தானே முயன்று கற்றல்

தானே முயன்று கற்றலைத் தனிப்படுத்தப்பட்ட கல்வி முறை எனவும் கூறலாம். ஒவ்வொரு மாணவரும் இயல்பாயமைந்த திறமைகளில் இயல்பாயமைந்த கவர்ச்சிகளில், படிக்கும் பழக்கங்களில் ஆர்வம் காட்டுவதில், இலக்குகளை நிர்ணயித்துக்கொள்வதில், கற்றலை நினைவில் நிறுத்துவதில் என இவ்வாறான பல்வேறு துறைகளில் மாறுபடுகின்றனர். இயல்புகளும், திறமைகளும் மாணவரிடையே வேறுபடுதலால் மாணவர் கற்றலில் அவர்களாகவே படிப்பட்டுக் கற்பதே சிறந்தது என்பது கல்வியாளர் கருத்து ஆகும். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தோர்ண்டைக் (Thorndike) என்னும் உளவியல் வல்லுனர் கல்வி கற்பித்தலை ஒவ்வொருவரின் தனிப்பட்ட செயலாக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

தமது ஆற்றலைப் பொறுத்தே மாணவர்கள் தம் கல்வித் திட்டங்களைத் தெரிந்தெடுக்கின்றனர்

1) தானே முயன்று கற்றலில் (Self - Directed Learning) கெல்லர் திட்டம் (Keller Plan) எனப்படும் தனிமுறைக் கல்வி (Personalised System of Instruction) PSI

2) திட்டமிட்டுக் கற்பித்தல் (Programmed Instrustion) PT

3) கற்பிக்கும் இயந்திரம் (Teaching Machine) - TM

4) கணிப்பொறித் துணைபெறும் கல்வி (Computer Assisted Instruction) - CAI

ஆகியன அடங்கும். அவற்றைக் கற்றுத் தேர்ந்தனரா என மாணவர் அவ்வப்போது சோதிக்கப்படுகிறார்கள். மாணவரின் விடை சரியானதா என்று அறிய உடனுக்குடன் வலுவூட்டுக்கள் கொடுக்கப்படுவதால் மாணவர் ஆர்வத்துடன் தொடர்ந்து கற்க முடிகிறது. ஒவ்வொரு மாணவரும் தமக்களிக்கப்பட்ட நூல்வடிவான திட்டமிட்டுக் கற்பித்தலை மேற்கொண்டு சுறுசுறுப்புடன் இயங்கி தமது திறமையினால் விரைவாகக் கற்றுத் தேறலாம்.

திட்டமிட்டுக் கற்பித்தல்,

1) நேர்வழித் திட்டம் (Liner Programme)

2) கிளைவழித் திட்டம் (Branching Programme)

3) திறன் கற்கும் திட்டம் (Mahematics Programme)

என மூன்று வகைப்படும்.



நேர்வழித் திட்டத்தில் பாடப் பொருள் சிறுசிறு பகுதிகளாக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு சட்டத்தில் (Frame) எழுதப்படும். பாடப் பொருளின் அமைப்பு ஒவ்வொரு சட்டத்திலும் தொடர்ச்சியாக இணைக்கப்படும் ஒவ்வொரு சட்டத்திலும் ஒன்று அல்லது இரண்டு கருத்துக்கள் இடம் பெற்றிருக்கும். முதல் சட்டத்திலிருந்து ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து இறுதிவரை விடையளித்தும், கொடுக்கப்பட்ட விடையை உடனுக்குடன் சரிபார்த்தும் மாணவன் கற்பதால் இம்முறைக்கு 'நேர்கோட்டுத் திட்டம்' என்ற பெயருண்டு. மாணவர் தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றுக்குப் படிப்படியாகச் செல்லும் இம்முறை (Exrtnsis Programme) எனவும் அழைக்கப்படும். உடனடியாகச் சரியான விடை கொடுப்பதனால் மாணவர் பாராட்டினைப் பெறுகிறார் அவர்களது ஆற்றலும் ஆர்வமும் தொடர்கிறது

கிளைவழித் திட்டம் இருவகைப்படும் தவறான விடையைத் தேர்ந்தெடுத்த மாணவனுக்குத் திருத்தும் சட்டத்தில் வேண்டிய கருத்துக்களைக் கொடுத்த பின் அவனை மூலச் சட்டத்திற்கு அனுப்பி மீண்டும் வினாவுக்குரிய விடையைக் காணச் செய்தல், பின்தங்கும் கிளை வழித்திட்டம் (Backward Branching) எனப்படும். தவறினை விளக்கும் அச்சட்டத்திலேயே மேலும் ஒரு பயிற்சியை அளித்து அதன் அடிப்படையில் அடுத்த மூலச்சட்டத்திற்கு செல்வது முன்னேறும் கிளைவழித்திட்டம் (Forward Branching) ஆகும்.

### கெல்லர் திட்டம்

இதில் பாடத்திட்டம் சிறு சிறு அலகுகளாக வாரத்திற்கு ஒன்று என்ற முறையில் பிரிக்கப்பட்டிருக்கும். பொருத்தமான பாட நூலும் ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படும். மாணவர் பயன்பெறும் அளவில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு பயிற்சி அட்டை வழங்கப்படும். அதில் அப்பாடத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் தேவை, கற்றல் இலக்குகள், பயிலும் முறை, பயிற்சிகள் போன்றவை வழங்கப்பட்டிருக்கும். தன் மதிப்பீட்டுச் சோதனையும் அதில் இடம்பெற்றிருக்கும். அறிவுக் கூர்மையுள்ள சில மாணவருள் ஆசிரியருக்குத் துணையாக, மேலாளராக (Proctors) இருப்பர். இவர்கள் தம் பணிகளை முடித்துக்கொண்டு ஏனைய மாணவர்களுக்கு உதவுவர்.

ஒரு மாணவர் ஓர் அலகினை முழுதும் கற்று அறிந்துள்ளான் என்பதைச் சோதனை மூலம் அறிந்த பின்னரே அவனுக்கு அடுத்த அலகு கொடுக்கப்படும். மாணவருக்கு உதவ ஆசிரியரும் இருப்பார்.

## திட்டமிட்டுக் கற்பித்தல்

மாணவர்கள் அவரவர் திறமைக்கேற்ப அதிக நேரமோ குறைந்த நேரமோ செலவிட்டுக் கற்கத் துணைசெய்யும் முறையே திட்டமிட்டுக் கற்பித்தல் ஆகும். இம்முறையின் துணைகொண்டு மாணவர் ஒவ்வொரு வரும் தாமாகவே கற்றுக் கொள்கின்றனர். வழக்கமாக அமைந்த வகுப்பறைக் கற்பித்தல் இங்கே இல்லை. மாணவரின் திறமைக்கேற்ப அவரது கற்றல் சிறக்கின்றது.

ஸ்கின்னர் (B.F.Skinner) என்ற அமெரிக்க உளவியாளர் 'தானே எழும் செயல் தொடர்பான ஆக்க நிலைப்படல்' (Operant Conditioning) என்ற புதிய கல்விக்கொள்கை அடிப்படையில் ஆய்வுசெய்து திட்டமிட்டுக் கற்பித்தல் முறையைக் கண்டறிந்தார். இம்முறையில் கற்க வேண்டிய பாடம் பல எளிய செய்திகளாகப் பிரிக்கப்படுகிறது. எளியவற்றிலிருந்து கடினமாவற்றிற்குச் செல்லும் முறையில் அவை அமைக்கப்படும்.

மாணவன் தேர்ந்தெடுக்கப்பட்ட விடை எதனால் சரி அல்லது தவறு என்ற காரணங் கூறி உடனுக்குடன் விளக்குவதே கிளைத்திட்ட முறையின் சிறப்பியல்பு ஆகும். மாணவன் தேர்ந்தெடுக்கும் விடையைப் பொறுத்தே அவர் செல்லும் பாதை அமைவதால் அத்திட்டம் உள்ளியல்பான திட்டம் (Intrinsic Programme) எனவும் குறிப்பிடப்படும்.

கில்பர்ட் (Gilbbert) என்பவர் அமைத்த 'திறன் கற்கும் திட்டம்' ஒரு சூழ்நிலையில் பெற்ற பயிற்சியை, வேறொரு சூழ்நிலைக்கு மாற்றுவதை வலியுறுத்தும். இதில் பாடப் பகுதியைக் கற்பிப்பது இல்லை. நடத்தையை மாற்றி அமைப்பதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

## கற்பிக்கும் இயந்திரம்

ஒவ்வொரு மாணவரும் கற்கும் நிலைக்குப் ஏற்ப கற்க வேண்டிய செய்திகளின் வரிசையை மாற்றியும், வேறுபடுத்தியும் கற்கத் துணை செய்யும் பல்வேறு காட்சிக் கேள்விப் பொருள்களையும் இணைத்துச் செயற்படும் கற்பிக்கும் இயந்திரங்கள் உள்ளன. முற்றிலும் ஆசிரியரை வகுப்பறைக் கற்றல் நிகழ்ச்சியிலிருந்து விலக்கிக் கற்பித்தலைக் கற்பிக்கும் இயந்திரங்கள் மேற்கொள்கின்றன.

கற்பிக்க வேண்டிய பாடப் பொருளைச் சிறிது சிறிதாகப் பகுத்துக் கொண்டு ஒவ்வொரு சிறுபகுதியையும் ஓர் இயந்திரத்திலுள்ள சாரளம் வழியே மாணவருக்குக் கொடுக்கப்படும். வினாவுக்குரிய விடையை எழுத இயந்திரத்தில் வேறொரு சாரளத்தில் இடம் இருக்கும். அதில் மாணவர் விடை எழுதிய பின் ஒரு திருகைச் சுற்றிச் சரியான விடையை அறிந்துகொள்ளலாம். ஆனால், மாணவர் எழுதிய விடை ஒரு கண்ணாடித் தட்டின் கீழ்ச் சென்றுவிடுவதால் அவர் தனது விடையைச் சரிபார்த்துக் கொள்ளலாமே அன்றி அதனை மாற்றியமைக்க இயலாது.

பெரும்பாலும் நேர்கோட்டு முறையில் செயற்படும் கற்பிக்கும் இயந்திரங்களே மிகுதியாக உள்ளன. இவை ஸ்கின்னர் முறையைப் பின்பற்றுவதால் ஸ்கின்னர் கருவிகள்ணூ எனவும் குறிப்பிடப்படும்.

## கணிப்பொறி துணை பெறும் கல்வி

இன்றைய யுகம் கணிப்பொறியுகம். மாணவர் ஒவ்வொருவருக்கும் தனியே ஆசிரியர் ஒருவர் கூடவே இருந்து கற்பிப்பது போன்று அவர்தம் நிறை குறைகளை அறிந்து அவரவர்க்கேற்ற முறையில் செயலாற்றும் கல்வி முறையைக் கணிப்பொறி கொண்டு செய்யலாம். ஒவ்வொரு மாணவருடனும் தனிப்பட்ட முறையில் ஒரேநேரத்தில் வெவ்வேறு விதமாகக் கணிப்பொறி 'இடைவினை' (Interaction) செய்கிறது. ஒவ்வொருவருக்கும் தனித்தனியே கற்கும் சிறுசிறு அறைகள் (Learning Booths) அனைத்து அமைப்புக்களுடனும் (Onsols) உள்ளன. மாணவருக்கு எதிரே தட்டச்சு இயந்திரமும் அதனுடன் இணைந்து தொலைக்காட்சித் திரையும் உள்ளன. மாணவர் தனது விவரத்தைக் கொடுத்தவுடன் கற்க வேண்டிய பாடப்பொருள் தெளிவாகவும், வரிசையாகவும் தொலைக்காட்சியில் கொடுக்கப்படும். இவ்வாறு கொடுக்கப்படும் செய்திகளில் முன் கூட்டியே கணிப்பொறி நினைவில் உள்ள பாடங்கள் சலனப்படங்கள், படச்சுருள்கள் போன்றவையும் இருக்கும்.

மாணவரின் கற்கும் திறனுக்கேற்பக் கற்பிக்கும் முறைகளை மாற்றி அமைத்துக் கற்கத் தூண்டும் வல்லமையுடன் கணிப்பொறி திகழ்கிறது. மாணவர் மனத்தில் கருத்துக்களை நிலைநிறுத்தவும், பயிற்சியளிக்கவும், தனிப்பட்ட முறையில் கல்வி கற்பிக்கவும் கணிப்பொறி பெரிதும் பயன்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





க. சண்முகலிங்கம்
[illegible]
[illegible]

# கல்வியும் சமூகமயமாக்கலும்

விலங்குகளின் நடத்தை இயல்பூக்கத்தை அடிப்படையாகக் கொண்டதென்றும் மனிதர்களின் நடத்தை பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டதென்றும் மானிடவியலாளர்களும் உளவியலாளர்களும் கூறுவர். குழந்தைகள் முதல் வளர்ந்தோர் வரையான பல்வேறு வளர்ச்சிப் படிகளின் ஊடாக மனிதர்கள் தாம் வாழும் சமூகச் சூழலில் உள்ள பண்பாட்டை உள்வாங்கிக் கொள்கிறார்கள். பண்பாட்டை உள்வாங்கும் செயல் முறையை சமூகமயமாக்கல் (Socialisation) என்று கூறுவர். சமூகமயமாக்கல் மனிதனின் கற்றல் நடத்தையை குறிப்பிடுகிறது. நடத்தல், உணவு உண்ணுதல், பல்வேறு கருவிகளை உபயோகித்தல் ஆகிய பல்வேறு திறன்கள் சமூகமயமாக்கல் என்னும் கற்றல் செயல்முறை ஊடாக பெறப்படுகின்றன. இடப்பெயர்வு மூலம் புதிய சூழ்நிலையில் தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் போது சமூகமயமாக்கல் வழியாகப் புதிய வாழ்க்கை முறைக்கு மனிதர் தம்மைத் தக அமைத்துக் கொள்கின்றனர்.

சமூகமயமாக்கலை இருவகையாகப் பகுத்து நோக்கலாம்.

1. முதல் நிலை சமூகமயமாக்கல்
   (Primary Socialisation)
2. இரண்டாம் நிலைச் சமூகமயமாக்கல்
   (Secondary Socialisation)

முதல் நிலைச் சமூகமயமாக்கல் தனியாள் ஒருவரின் முதல் நிலை உறவுகளுடன் தொடர்புபட்டதாகும். இம்முதல் நிலை உறவுகள் குடும்பம் என்ற நிறுவனத்தின் ஊடாக நடைபெறுகிறது. தாய், தந்தை, சகோதரர்கள், சகோதரிகள், பாட்டி, பாட்டன் ஆகியோரே தனியாள் ஒருவரின் முதல் நிலை சமூகமயமாக்கலில் முக்கிய பங்கு பெறுவோர். இவர்களுடனான தொடர்பு மிக நெருக்கமானது. தனிப்பட்ட முறையிலானது. அத்தோடு இவ்வுறவு நேருக்கு நேரானது.

சமூகமயமாக்கல் நிலையும் முதன்மையிடமாகக் குடும்பம் விளங்குகிறது. சமூகத்தில் வாழ்வதற்கு தேவையான அடிப்படைத் திறன்கள் அனைத்தையும் குடும்பத்தில் இருந்தே ஒருவர் கற்றுக் கொள்கிறார். தாய், தந்தை ஆகியோருடனும் வீட்டில் மூத்தவர்களுடனும் எப்படிப் பழக வேண்டும் என்பதை முதல் நிலைச் சமூகமயமாக்கலின் போது குழந்தைகள் கற்றுக்கொள்கின்றனர். முதல்நிலைச் சமூகமயமாக்கலின் போது கற்றுக் கொள்ளும் இன்னொரு முக்கிய விடயம், சரியான நடத்தை எது? பிழையான நடத்தை எது? என்பது பற்றி புரிதல் ஆகும். இப்புரிதல் சமூகத்தின் விழுமியங்கள் பற்றிய அறிவு அல்லது விளக்கம் என்றும் கூறலாம். முதல் நிலைச் சமூகமயமாக்கலின் போது குழந்தைகள் பால்நிலை பற்றிய உணர்வையும் அறிவையும் பெற்றுக் கொள்கிறார்கள். சமூகத்தில் பெண்ணாக இருத்தல் எப்படி, ஆணாக இருத்தல் எப்படி, என்பனவற்றையும் அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.

இரண்டாம் நிலைச் சமூகமயமாக்கல் தனியாள் ஒருவரின் இரண்டாம் நிலை உறவுகளுடன் தொடர்புடையது ஆகும். இவ்வுறவு முதல்நிலை உறவு போன்று நெருக்கமானதாகவோ தனிப்பட்டதாகவோ இருப்பதில்லை. ஒருவரது முதல்நிலை உறவுகளுக்கு அப்பால் உள்ள சமூக உலகம் பற்றிய அறிவை இரண்டாம் நிலைச் சமூகமயமாக்கல் வழங்குகிறது. முதல் நிலைச் சமூகமயமாக்கலின் போது உண்டாகும் தொடர்புகள் உணர்வு சார்ந்தவை. அன்பு, பரிவு, பாசம் ஆகிய உணர்வுகள் இத்தொடர்புகளில் வெளிப்படும். இரண்டாம் நிலைச் சமூகமயமாக்கல் பெரும்பாலும் உணர்வு சாராதவை. சமூக உலகத்தை எதிர்கொள்ளும் திறன்களை இது வழங்குகிறது. இரண்டாம் நிலைச் சமூகமயமாக்கலில் முக்கியம் பெறும் நிறுவனங்கள் அமைப்புக்கள் பின்வருவன.

- பாடசாலைகள்
- தோழர்குழாம்
- தொடர்பு ஊடகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் பாடசாலைகளில் நிகழும் சமூகமயமாக்கல் முறைசார் தன்மையுடையவை. திட்டவட்டமான கலைத் திட்டம் ஒன்றின் படி கல்வி புகட்டப்படுகிறது. கலைத்திட்டம் முறைசார் தன்மையுடையது. இருப்பினும் கலைத்திட்டத்தின் பின்னால் மறைநிலைக் கலைத்திட்டம் (Hidden Curriculam) உள்ளது என்று சமூகவியலாளர்கள் கூறுவர். வகுப்பில் அமைதியாக இருந்து கேட்டல், வீட்டு ஒப்படைகளைச் செய்து கையளித்தல், பாடசாலையின் ஒழுக்கவிதிகளைப் பேணி நடத்தல், நேரக் கட்டுப்பாட்டைப் பேணுதல் ஆகியன மறைநிலைக் கலைத்திட்டத்தில் உள்ளடங்கி இருக்கும். இவற்றை மாணவர் கற்றுக் கொள்வர். கல்வியை முடித்து தொழில் புரியும் இடங்களில் சேரும் போது பாடசாலையில் கற்ற நடத்தை விதிகள் உதவுகின்றன. பாடசாலைக் கல்வியை விமர்சன நோக்கில் புரிந்து கொள்வதற்கு மறைநிலைக் கலைத்திட்டம் என்ற எண்ணக்கரு பயன்படுகிறது.

இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் நவீன கல்வி முறையின் பரவல் சமூக முன்னேற்றத்திற்கான உந்தலை வழங்கியது. பெரும்பான்மையான மாணவர்கள் தமது சொந்த வாழ்க்கையின் மட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டுச் சமூக வாழ்க்கையில் பிறருடன் இணைந்து கொள்ளவும் சமூக ஏணிப் படிகளில் உயரவும் பாடசாலைகள் உதவின.

பாடசாலைகள் சமத்துவமற்ற சூழ்நிலையில் இருந்து வந்த பலதரப்பட்டவர்களை இணைத்து சமவாய்ப்புக்களை வழங்கும் நிறுவனமாகச் செயற்பட்டன. கல்விமுறைமை ஊடாக கல்வியின் ஜனநாயகப்படுத்தல் நிகழ்ந்தது. இக் காரணங்களால் கல்வி நிறுவனங்கள் ஊடான சமூக மயமாக்கலை விமர்சன நோக்கில் பார்ப்பதைப் பலர் ஆதரிப்பதில்லை. கல்வி பற்றிய சீர்திருத்தவாதநோக்கு என்று இதனைக் கூறலாம்.

ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், அமெரிக்கா, லத்தின் அமெரிக்கா போன்ற நாடுகளின் சிந்தனையாளர்கள் பலர் கல்வி முறைமை பற்றியும் பாடசாலைகள் பற்றியும் கடுமை யான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். முதலாளித்துவ முறையின் கீழ் கூலி உழைப்பாளர்களாக வேலை செய்வதற் குரிய தகுதியை வழங்குவதே கல்வி முறையின் பணி. கல்வி நிறுவனங்களின் சமூகமயமாக்கலின் பெறுபேறு தொழிலாளர் படையின் மறு உற்பத்தியே (Reproduction) ஆகும் என்றும் கூறுவர். காலணித்துவ கல்வி முறை பற்றிய விமர்சன நோக்கிலான கருத்துக்களும் உள்ளன. மெக்காலே இந்தியா விற்கு ஆங்கிலக் கல்வியை அறிமுகம் செய்வதனால் உண்டாகும் பயன்கள் பற்றிக் கூறும் போது தோலின் நிறம், இரத்தம் என்பவற்றில் இந்தியர்களாயும் சிந்தனையிலும் மனப்பாங்குகளிலும் ஆங்கிலேயர்களாகவும் உள்ள புதிய வகுப்பு ஒன்றை ஆங்கிலக் கல்வி உருவாக்கும் என்றார். காலணித்துவ கல்வி முறையின் சமூகமயமாக்கல் எத்தகையது என்பதை மெக்காலேயின் கூற்றைக் கட்டுடைப்புச் செய்வதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

போல் வில்லிஸ் என்பவர் இங்கிலாந்து தேசத்தின் பேர்மிங்காம் என்ற நகரின் பாடசாலை ஒன்றில் ஆய்வு ஒன்றை நிகழ்த்தினார். அவரது ஆய்வின் முடிவு தொழிலாளர் களின் பிள்ளைகள் தொழிலாளியாகவே இருப்பதற்குத் தகுதியுடையவர் ஆகின்றனர். அவர்களுக்கு தொழிலாளர் வகுப்பினருக்கு உரிய வேலைகளே முடிவில் கிடைக்கின்றன என்பதாகும். அவரது நூலின் தலைப்பு Learning To Labour How Working Class Kids Get Working Class Jobs (தொழிலாளர் ஆவதற்குக் கற்றல், தொழிலாளர் வர்க்கப் பிள்ளைகள் ஏன் தொழிலாளர் பதவிகளையே பெற்றுக் கொள்கிறார்கள்) போல் வில்லிஸ் ஆய்வு முதலாளித்துவக் கல்விமுறையை வர்க்கச் சார்புடையதென விமர்ச்சிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்கால இளைஞரும் கல்வியும்

பூ. சோமலிங்கம்

சிறுவர்களைப் பற்றி நினைக்கும் போது எனக்கு எப்பொழுதுமே நினைவில் எழுவது, அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் கடிதம்.

தன் மகனுக்குப் போதித்த ஆசிரியருக்கு லிங்கன் எழுதிய கடிதவாசகங்கள் அவை.

என் மகனுக்கு பாடங்களைக் கற்பிக்கும் போது இயற்கையின் அழகை ரசிக்கவும் கற்றுக் கொடுங்கள். வானத்தில் வட்டமிடும் பறவைகளையும் தூரத் தெரியும் மலைகளில் தழுவி ஓடும் ஆற்றின் அழகையும் ரசிக்கக் கற்றுக்கொடுங்கள். அதுமட்டுமல்ல, பரீட்சையில் என் மகன் சித்தியடையாது போனாலும் அவன் யாரையும் ஏமாற்றாதிருக்கக் கற்றுக்கொடுங்கள். அத்தோடு புத்தகங்களைக் கண்டறிய அவனுக்கு வழியமையுங்கள்.

இவ்வாறும் இதற்கு மேலும் நன்மைகளுக்கு கல்விபுகட்டிய ஆசிரியருக்கு அவர் எழுதிக்கொண்டு போகிறார். எச்சந்தர்ப்பத்திலும் அவன் தன் மகன் வகுப்பில் முதல்தரத்தில் தேர்ச்சி பெறவேண்டும் என்பது பற்றியோ, பட்டம் பெறவேண்டும் என்பது பற்றியோ, பிரஸ்தாபிக்கவில்லை.

இதுவே இன்றைய உளவியல் ஆய்வும் கூறும். ஒரு மாணவன் தான் படிக்க விரும்புவதை தேர்வு செய்யும் சுதந்திரத்தை அவனுக்கே கொடுத்துவிடுங்கள் என்கிறது அது. ஆபிரகாம் லிங்கன் விரும்பியதும் அஃதே. இதன் மூலம் அவர் விரும்பியதெல்லாம் உடலும் மனமும் ஆரோக்கியப்பட்ட நிலையில் தன்மகன் வளரும் சிறப்பான நிலையையே.

லிங்கன் தனது மகன் எவ்வாறு ஆசிரியரால் வழிநடத்தப்படவேண்டும் என்று நினைத்ததற்கும் இன்று நம்மிடையே வாழும் சிறுவர்கள் அவர்தம் பெற்றோராலும் ஆசிரியர்களாலும் கையாளப்படும் முறைக்கும் எந்தவித தொடர்பையும் காணமுடியாது.

நம் சிறுவர்கள் முன்னே பரீட்சை என்பதே பிசாசு போல் விரிகிறது.

மழலை மாறாத இளமையின் போதே புலமைப்பரிசில் பரீட்சை, பதினைந்து வயதில் க.பொ.த. சாதாரணப் பரீட்சை, இன்னும் வாலிபப் பருவம் மாறுவதற்கு முன்னரே உயர்தரப் பரீட்சை.

பரீட்சையே இளமைக்காலம் அனைத்தும் பூதாகரமாக விரிந்த நிலையில், நம் சிறுவர், லிங்கன் கூறிய இயற்கையின் அழகையோ, வானில் வட்டமிடும் பறவையின் அழகில் உளம் தோய்வதையோ, பாடப்புத்தகங்கள் தவிர்ந்த கலைமிக்க நூல்களின் அற்புதங்கள் தம் உணர்வுகளுக்கு முலாம் பூசுவதையோ அவர்கள் அனுபவித்ததில்லை. இதனால் படிப்பென்ற பேரில் நோய்கூறு கொண்ட இளஞ்சமூகமே உருவாக்கப்படுகின்றது.

ஒவ்வொரு பெற்றோரினதும் ஆசிரியரினதும் இலட்சியம் மருத்துவர்களையும் பொறியியலாளர்களையும் முகாமைத் துவப் பட்டதாரிகளையும் உருவாக்குவதே நோக்கமாக இருக்கும்போது, இந்த எல்லைக் கோட்டினை எட்டாதவர்கள் விரக்திக்குள்ளாகும் எட்டியவர்கள் ஏனையவர்களை துச்சமாகப் புறந்தள்ளவும் தன் முனைப்புக்குள்ளும் வீழ்வதென்பது ஒரு வகையில் எதிர்மறை (Negative) உடன்பாடு (Positive) என்கிற இருவகை நோய்க்கூறுகள்.

இந்தப் பரீட்சை என்கிற ஒன்றின் பூதாகரமான வீச்சில் எல்லோருக்குள்ளும் இருக்கும் 'மனிதம்' என்கிற அருஞ்சக்தி, குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது. இதனால் பரீட்சை மூலம் தம் 'இருப்பை' இழந்த சிறுவர்களும் சிறுமியரும் எதிர்காலம் பற்றிய தம் நம்பிக்கை வீழ்ச்சியில் பலவித குற்றச்செயல்களில் ஈடுபடுவதன் மூலம் தாம் இழந்த 'இருப்பை' நிலைநாட்ட முற்படுகின்றனர். ஈற்றில் இவர்கள் நோய்க்கூறு கொண்ட பிறழ்வுற்ற மனநோய்க்காரர்களாக (Psychopath) மாறுகின்றனர்.

இன்றுள்ள பிரச்சினை இதுதான்: இதனால் இன்று நடைமுறைப்படுத்தப்படும் கல்வி முறைக்குள் புதிய இரத்தம் பாய்ச்சப்படவேண்டும். இதனால் யாரும் மருத்துவர்களாகவும் பொறியியலாளர்களாகவும், பட்டதாரிகளாகவும் வருவதற்கான படிப்பை மேற்கொள்ளக்கூடாது என்பதல்ல. படிப்பு முக்கியம். ஆனால் மேற்கொள்ளும் ஒவ்வொருவரும் லிங்கன் கூறிய அழகியல்களையும் அதேயளவு முக்கியம் கொடுத்து கடைப்பிடிக்க வேண்டும் என்பது இன்னும் முக்கியம்.

விண்ணில் வட்டமிடும் பறவையை ரசிக்கவும் அற்புதமான நூல்களை வாசிக்கவும் படிப்போடு சமாந்தரமாகச் செய்ய வேண்டும். இயற்கையின் அற்புதத்தில் இரும்பூதெய்தலும் அற்புதமான புத்தகங்களை வாசித்தலும் தூர்ந்து போன மனிதனின் ஆழ உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்யும்.

தொட்டனைத்தூறும் மணற்கேணி? கற்றனைத்தூறும் அறிவு என்று வள்ளுவர் கூறியது இதனால் தானே? இளமையிலிருந்தே பிறநூல்களைக் கற்றலைப் பழக்கமாக்கிக் கொள்ளல் வேண்டும். அது பரீட்சைக்கான படிப்பின் பாரச்சுமையை இறக்கி வைக்கவும் வாழ்க்கையின் பலபக்க அழகை ரசிக்கவும் இட்டுச் செல்வதோடு மனிதனாகவும் உயரச்செய்யும். நூல்களே மனிதர்களை நெறிப்படுத்தி புள்ளன. எழுத்தாளர் நல்கினதும் ரோமைன்ரோலண்டினதும் நூல்களே மகாத்மாகாந்தியின் ஆத்ம சோதனைக்கு காலாயிருந்தன.

இவ்வாறு நூல்களே அனேக அறிஞர்களின் சாதனைக்கு காரணமாய் இருந்துள்ளன.


நூல்களை வாசித்தல் என்பது வெறும் 'புத்தகப் பூச்சி' களாக இருப்பதென்பதல்ல. கூடவே வெளியே வந்து இயற்கையை ரசிக்கவும் அவ்வப்போது இன்னிசையைக் கேட்டு தம் உணர்வுகளில் படிந்துள்ள அழுக்குகளை கழுவி வெளியேற்றச் செய்யவும் ஆசிரியர்கள் மாணவர்களை ஆற்றுப்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க வையகம்!** **வாழ்க வளமுடன்!**







**உலகத்தில் அமைதியும் ஆன்மிக மேம்பாடும் ஏற்படுவதற்காகசுயமுயற்சியின் மூலம் வாழ்க்கையில் முன்னேறிய மகரிசி அவர்கள்**

- தியான முறையில் சிறந்ததான எளிய முறைக் குண்டலினி யோகம்
- உடல் உறுப்புக்களை வருத்தாத எளியமுறை உடற்பயிற்சி.
- பண்புகளை உயர்த்தும் தற்சோதனை
- உயிர்ச்சக்தியைப் பாதுகாப்பதன் மூலம் வயோதிகத்தைத் தள்ளிப் போடும் சித்தர்கள் கண்ட நெறியான காயகல்ப யோகம்.

**இவை இணைந்த வாழ்க்கை நெறியைப் போதித்து மனிதகுலம் உய்ய அருள் தொண்டாற்றினார்.**

- மனவளக்கலை அன்பர்கள் இங்கு வந்து உடற்பயிற்சியும் தவமும் கற்றுக் கொள்ளலாம்.
- காயகல்பம், அகத்தாய்வு முதலிய பயிற்சிகள் ஒவ்வொரு மாதமும் தக்க பேராசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன.
- தினசரி காலையில் உடற்பயிற்சி கற்றுத் தரப்படுகிறது. மாலையில் கூட்டுத் தவம் நடைபெறுகிறது.



**இலங்கையில் முதன் முதலாய் அறிவுக்கு ஒரு ஆலயம் எழுந்து நிற்கப் போகிறது.**
**மனமுவர்ந்து பொற்குவை தாரீர்.**

53/1A,
Ramakrishna Road,
Wellawatta,
Colombo - 06.
T:P 011-5658412, 071-4042300


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
202, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொ.பே.இல.: 011-2422321

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
4யுஇ ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல.: 021-2226693

**நியூ கேசவன் புக்ஸ்டோல்**
52 டன்பார் வீதி, ஹட்டன்
தொ.பே.இல.: 051-2222504,
051-2222977

**அறிவாலயம் புத்தகக்கடை**
190 டீ புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா
தொ.பே.இல.: 024-4920733

**அன்பு ஸ்டோர்ஸ்**
14 பிரதான வீதி, கல்முனை
தொ.பே.இல.: 067-2229540

**புக் லாப்**
20,22 சேர் பொன் ராமனாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290,
கை.தொ.இல.: 077-1285749

**இஸ்லாமிக் புத்தக இல்லம்**
77, தெமட்டக்கொட வீதி,
கொழும்பு - 09
தொ.பே.இல.: 011 - 2688102

**கவிதா ஸ்ரோஸ்**
இல:05 பஸ் தரிப்பிடம், வவுனியா
தொ.பே.இல.: 024 - 2222012

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
309-யு 2/3 காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு
தொ.பே.இல.: 4515775, 2504266

**அபிஷா புத்தகக்கடை**
137, பிரதான வீதி, தலவாக்களை
தொ.பே.இல.: 052-2258437

**நூர் மொஹமட் நியூஸ் ஏஜண்ட்**
132, பிரதான வீதி,
கிண்ணியா-03
தொ.பே.இல.: 026-2236266

**சாய் புத்தகக்கடை**
92, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13
தொ.பே.இல.: 2452736

**குமரன் டிரேட் சென்டர்**
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா
தொ.பே.இல.: 052-2223416

**பிரியங்கா புத்தகக் கடை**
பிரதான வீதி,
பருத்தித்துறை
தொ.பே.இல.: 077-9303246

**கொலேஜ் நீட்ஸ் புத்தகக்கடை**
120, பிரதான வீதி,
அட்டாளைச்சேனை 14
கை.தொ.இல.: 077-3034469

**அல்குரசி புத்தக நிலையம்**
28இ1/2இ புகையிரத வீதி, மாத்தளை
தொ.பே.இல.: 066-3662228

Printed by
**Kumaran Press (Pvt) Ltd.**
kumbhlk@gmail.com

ISSN 1800-1246

Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/96NEWS/2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org